# علوم الدّين

# உலூமுத்தீன்

مؤلفه - صاحب الخلوة الشيخ سيد عبد القادر

الزّواوي رضي الله عنه

**கல்வத்தாண்டவர்கள் அருளியது**

வெளியீடு:
கல்வத்து நாயகம் தைக்கா
மேலப்பாளையம்
திருநெல்வேலி - 627 005.

# உலூமுத்தீன் பொருளடக்கம்


**விஷயம்** **பக்கம்**

1. தன் நப்சுக்கும் மற்றவர்களுக்கும் சில வஸிய்யத்து 6

2. ஆகிறத்துடைய உலமாக்களை லாஹிறுடைய உலமாக்கள் காபிறென்று ஹுக்கும் செய்தது 8

3. சகலரையும் எழுப்பப்படுகிற விஷயத்தில் ஆரிபூன்களுக்கிடையில் உண்டான விதர்ப்பங்களைப் பேசுவது 16

4. நல்ல உதிப்படங்கலும் அல்லாவுடைய ரசூல்மார்களாயிருக்கும் 30

5. தீன் உன்னுடைய செய்கையில் நின்றுமுள்ளது 35

6. ஈமானுடைய பாடம் (பாபுல் ஈமான்) 84

7. ஈமானுடைய பணர்கள் (பஸ்லுன் பீஷுஃபி பில் ஈமான்) 104

8. அல்லாவைக்கொண்டு ஈமான் கொள்வது 126

9. மலாயிக்கத்துகளைக் கொண்டு ஈமான் கொள்வது 140

10. றூஹுல் அஃலமுடைய செய்திகள் 145

11. வேதங்களைக்கொண்டு ஈமான்கொள்வது 156

# பதிப்புரை

தரீக்கத்துல் இலாஹிய்யாவின் மூல நாயகர் சற்குரு கல்வத்தாண்டவர்கள் கோர்வை செய்த ''உலூமுத்தீன்'' என்ற இந்நூலானது முஸ்லிம்களும், ஏனையோரும் படித்துத் தெளிய வேண்டிய ஓர் அரிய நூலாகும்.

இந்நூலில் ஆண்டவர்கள் தங்களின் தலைப்பை விளக்கும் பாணி அலாதியானது. ''இல்மு'' என்றால் என்ன? எது உண்மையான இல்மு, தீன் என்றால் என்ன? அதனுடைய முழுமையான தத்வார்த்த விளக்கம் என்ன? ஈமான், இஸ்லாம் இரண்டும் ஒன்று? வெவ்வேறு? ஈமானின் கிளைகள் எத்தனை? 'அல்லாஹ்' என்பதின் அகமியப் பொருள் என்ன? உலமாவுத் துன்யா எனும் உலகப்பிரியர்களான உலமாக்கள் யார்? உலமாவுல் ஆகிரா எனும் மறுமையை மக்ஸதாகக் கொண்டு நடக்கும் உலமாக்கள் யார்? என்பன போன்ற தீனுடைய மெய்யறிவுகளை 'ஈமான் முபஸ்ஸலை' அடிப்படையாகக் கொண்டு ஆயத்துகளையும். ஹதீஸ்களையும், ஆரீபீன்களின் சம்பவங்களையும் ஆதாரமாகக்கொண்டு ஆணித்தரமாகத் தங்களுக்கே உரியநடையில் எடுத்துரைத்து உலூமுத்தீனில் (மார்க்க ஞானங்களை) தெளிவுபடுத்துகிறார்கள். மேலும் மார்க்க ஞானங்களை ளாஹிர்-பாத்தின் இரண்டின் படியும் இதில் விளக்கியிருப்பது விசேஷமாகும். ஆண்டவர்கள் சொன்னதுபோல இந்நூல் கிடைத்தற்கறிய பொக்கிஷமாகும்.

ஏற்கனவே எனது தந்தையார் மஹாமாட்சிமை தங்கிய குத்புஸ்ஸமான் கல்வத் கலீபா 'நாயகம் வாப்பா அவர்களின் சீரிய முயற்சியால், டிசம்பர் 1990ல் மூலப் பிரதியில் இல்லாதவை நீக்கப்பட்டு எனது பாட்டனார் குத்புஸ்ஸமான் அல்ஆரிபுல் காமில் முகம்மில் கல்வத் கலீபா நாயகம் முஹம்மதுயூசுபு ஆண்டவர்கள் 'இந்நூலின் அவசியத்தையும் அகமியத்தையும் பற்றி 'செல்வமலர்ச்

சோலை'யில் எழுதிய அறிமுக உரையையும் சேர்த்து அழகிய முறையில் அச்சிடப்பட்டு முதற்பதிப்பாக வெளி வந்தது அனைவருக்கும் பெரும் பயனை நல்கியது, அப்பிரதிகள் தீர்ந்துவிடவே மறுபதிப்புச் செய்யவேண்டும் என்ற முஹிப்பீன்களின் வற்புறுத்தலுக்கும் எதிர்பார்ப் புக்கும் இணங்கி, இரண்டாம் பதிப்பை பிரசுரம் செய்ய முன்வந்தேன்.

இதிலுள்ள கருத்துக்கள் குழம்பி நிற்கும் இன்றைய சமுதாய இளைஞர்களுக்கும் பெரியவர்களுக்கும் ஏன்? சில உலமாக்களுக்கும் கூட அவர்களின் குழப்பங்களை நீக்கும் தெளிந்த நீரோடையாகும். எங்கள் தெய்வீகப் பிதா நாயகம் வாப்பாஅவர்கள் இதை பலமுறை திரும்பத் திரும்ப முதாலஆ செய்ய (படிக்க) வேண்டும்: ஒவ்வொரு தடவையிலும் புதுபுதுக்கருத்துக்கள் அதிலிருந்து வெளி யாகும் என்று'' அடிக்கடி கூறுவார்கள். அதையே நானும் உங்களுக்கு கூறுவதோடு இந்நூலைப் படித்து அதிலுள்ள கருத்துக்களை முழுமையாக விளங்கி அமல் செய்யும் ஆற்றலை ஆண்டவர்கள் எனக்கும் இதை ஆவலுடன் படிப்போர் அனைவருக்கும் தந்தருள்வார்களாக ஆமீன்.

இங்ஙனம்

மேலப்பாளையம் **கலீவத் கலீபா நாயகம்**
தேதி **மாதிஹுர் ரசூல் வாப்பா**

# அறிமுகம்

***(கலீபா நாயகம் காமில் முகம்மில் அல்ஹாஜ் அஷ்ஷெய்கு முஹம்மது யூசுப் ஆரிபுபில்லா (றலி) அவர்கள் அருளியவை)***

நமதாண்டவர்கள் கோர்வை செய்த உலூமுத்தீன் என்ற கிதாபானது தீனுடைய அறிவுகளை உள்ளா உள்ளபடி இன்னது தானென்று விளக்கித் தரும்படியான மிக அருமை, பெருமை வாய்ந்த ஓர் நூலாகும், இதற்கு நிகரான ஓர் கிதாபு அரபியிலாவது, வேறெந்த பாஷையிலாவது இதற்கு முன் வெளிவரவில்லை. இது கசடறக் கற்று, நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொல், செயல், நிலைமைகளைப் பின்பற்றி நடந்து, உள்ளந் திறந்து மெஞ்ஞானனந்த அனுபவங்களைப் பெற்றுக் கொண்ட, அஹ்லுல்லாக்களின் ஹிருதய சமுத்திரங்களிலி ருந்து கொண்டுவரப்பட்ட உள்ளங்களிலிருந்து உதித்தெழும்படியான சூரியப் பிரகாசம் ஜொலிக்கும் நவரத்தினங்களையொத்த, வார்த்தைகளில் கோர்வை யாக்கப்பட்டிருக்கிறது. பரிபூரணமாகிய ஆழமான, நுட்ப மான மெய்யறிவுகளைப் பொதிந்திருக்கிறது. தீனுல் இஸ்லாமைப் பின்பற்றிய, ஒவ்வொருவருக்கும் இந்நூல் மிகவும் இன்றியமையாததாகும், இந்நூலை, திருப்பித் திருப்பி பார்க்கப் பார்க்க, அதிநூதன, நூதனமான மெய்யறிவுகள் சிந்தையின் கண் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

இவ்விதமான ஓர் அரிய கிரந்தத்தை கோர்வை செய்து, ஜனங்களுக்கு முன்னில்லாத ஓர் விழிப்பை யுண்டாக்கி விடவேண்டுமென்று நமது நாயகம் அவர்கள் தங்களின் 34 வயதில், ரமலான் மாதத்தில் இந்நூலைத் துவக்கஞ் செய்தார்கள். இந்நூலின் முகவுரையில் ஹம்து ஸலவாத்திற்குப் பின், தக்வாவின் மகிமைகளையும், அதைப் பின்பற்றி நடப்பதற்குள்ள வேட்கையைப் பூட்டி யும், குர்ஆன் ஆயத்து, தலீல்களுடனே நன்றாய் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். மற்ற நூல்களைப் பார்க்கிலும்,

இந்நூலானது இன்னின்னவிஷயங்களில்மேம்பாடுடையதா யிருக்கிறது என்றும், எடுத்துப் பேசியிருக்கிருர்கள். மேலும், இந்நூலே வாசித்துணர்வோருக்குச் சில வஸிய்யத்துக்களும் எழுதியிருக்கிருர்கள், அவ்வஸிய்யத்து களில் கொஞ்சம் அடியில் எழுதப்படுகிறது. அதாவது,

இந்த கிதாபை நோட்டமிடுகிறவனுக்குச் சில வஸிய்யத்துச்செய்கிறேன். அதில், முதலாவது என்னுடைய நபுசுக்கும், இரண்டாவது தனக்கும் மற்றவர்களுக்குமாக ஏற்படுத்தப்பட்டதாகையால், உனக்குத் தேடாப் புறத்தில் அகப்பட்ட புதையலாகவும், நேர்வழி இன்னதெனத் தெரியாமல் குருடாய் இருந்த உனக்கு அகக் கண்ணைத் திறக்க வந்த, அருட்பிரகாசமாகவும், ஒருவன் சடுவழி நடந்து இளைத்து, கடும்பசியுந்தாகத்துடன் கடுங்காந்தியும், சூட்டுடன் கானகத்தில் அகப்பட்டு, ஹலாக்காக முடுகும் வேளை ஆகாயத்தில் நின்றும் பசுமை பொருந்திய பச்சை மரகதத்தில் ஒன்பது வகை ரத்தினுதியால் அழுத்தப்பட்ட, குளிர்ச்சி பொருந்திய மாளிகையும், காலாட்களும், பதினெட்டு நளபாகத்துடன் வஜீபனமும், அமிர்தமாகிய தண்ணீரும் வந்துவிட்டால் எவ்வளவு மகிழ்ச்சியுடன் அவைகளை அங்கீகரிப்பானே அப்படிப்போல், மட்டுமன்றி சுவர்க்கலோகத்தைக் கொடுக்கப்பட்டால் எவ்விதம் சந்தோஷமாய் அதில் புகுத நாடுவானே அப்படிப்போல், இன்னும் அதைப் பார்க்கிலும், ஆயிரம் ஆயிரமடங்கு அதிகமாக அதில் ஆசையுடன் சிந்தையைச் செலுத்திப் பார்க்கும்படி அல்லாஹுத் தஆலாவுடைய முகத்திற்காக உங்களிடத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உன் கைவசம் இந்தக் கிதாபு அகப்பட்டதனுல் அல்லாவின் ஆணை! அல்லாவின் ஆணை! அதுகளை ஆராய்ந்து பாராமல் வீண்பொழுது போக்காதே. அப்பால் இதிலுள்ளபடி தெண்டிக்கவும், அல்லாவுக்காக வேண்டி நபுசே! அய்ஹபீபே! உங்களிடத்தில்நான் கேட்டுக் கொள்கிறேன். இதில் ஏதும் குத்தப்பாடு



சொல்கிறவர்களுடைய சொல்லளவில் திரும்பிப் பாராதே, ஏனென்ருல், இந்த ஸமானுவில் அல்லாஹுத்தஆலா வுடைய முகத்தை நாடி இல்மை வெளியாக்குவதைக் காண்பதரிது. உலமாக்களென்ற பேர் பெற்றவர்கள் சகலரும், ஒருவருக்கொருவர் குத்தப்பாடு சொல்வதை விட்டும் ஒழிந்திருக்கவேயில்லை,

ஆனுல், இதில் ஏதாவது உனக்கு விளங்காமல் அல்லது, முற்பட நீ கேட்டதற்கு மாற்றமாக விளங்கினுல், நீயாவது அல்லது தஹ்கீக்கில்லாத உலமாக்களுடைய சொல்கொண்டாவது தீபரம் கத்தாவாக்கிவிடாதே. அதனுல் மிகுந்த லாபம் இழந்திடுவாய். ஆகிறத்துடைய உலமாக் களில் முஹக்கிகானவர்களை நீ சந்தித்தாயாகில் கேட்டுத் தெளிந்து கொள். உலமாவுத் துன்யா வென்னும் துன்யாவுடைய உலமாக்கள் கத்தாவென்றுசொல்வதளவில் திரும்பிப் பாராதே, ஏனென்ருல், அவர்கள் ஹஸதை விட்டொழிய மாட்டார்கள்......''

இவ்வாறு எழுதி, அப்பால் உலமாவுத்துன்யாவைப் பற்றியும் அவர்களின் பொருமை மிகைத்த கொடிய நட வடிக்கைகளை பற்றியும், மிகவிரிவாய் எடுத்துக்காட்டியிருக் கிருர்கள். மேலும்அவ்லியாக்கள் பேரிலும், ஆகிறத்துடைய உலமாக்களாகிய நாதாக்கள் பேரிலும், ஹஸது வைத்து **ஊரை விட்டுத் துரத்தினதும், கொலைப்பாதகங்கள்** செய்ததும், இமாமென்றும், உலமாக்களென்றும், பேர் பெற்ற, துன்யாவுடைய உலமாக்களல்லாது, 'அறிவில்லாத அவாம்கள் அவ்வளவு தீரமும் திறமையுமாகச் செய்யவே யில்லை, இவ்விதம் அவர்கள் செய்யவுமாட்டார்கள் ஆனுல் ஹஸதுடைய உலமாக்களுடைய நடை, பிழையை உனக்கு நான் சயிக்கினையாகக் 'காட்டினதெல்லாம், இந்த கிதாபில் ஏதும் அவர்களுடைய 'குத்துப்பாடுண்டாகி நீ அதளவில் சாய்ந்து, நஷ்டவாளியாகிவிடுவாய் என்றதற் கும் இன்னும் உலமாக்களெல்லாம், இந்தக் கிதாபில் சொன்னபடி நடக்கிருர்களா, நான் நடப்பதற்கு என்று

அவர்களைப் பார்த்து, பொடுபோக்காய் நீயும் இருந்து விடுவாயோ என்றதற்குமல்லாது வேறில்லை. ஆனால், ஆகிறத்துடைய உலமாக்களைக் கண்டாயாகில், இதில் சொல்லப்படுவதை, இவர்களுடைய செய்கையால் அறிந்து கொள்வாய். (அல் இஷாறத்து தக்பீ லில் ஆக்கில்) புத்திவானுக்கு சயிக்கினைப் போதும் என்றும் அக்கிதாபில் எழுதியிருக்கிறார்கள்.

அப்பால் மனுஷத்தன்மையென்பது எதைப்பொருந்தி ருக்கிறது என்பது பற்றியும், எதார்த்தமான இல்மு இன்னதுதானென்பதைப் பற்றியும், விளக்கிக்காட்டி. தீனுடைய விஷயங்களைப் பற்றியும், அதன்அர்த்தங்களைப் பற்றியும், மிக விரிவாகவும், தெளிவாகவும், சுமார் 85 பக்கங்கள் வரை எழுதி, அப்பால் ஈமான் இன்னதென் பதை விபரித்து (அல் ஈமானு பிள்உன் வஸப்ஊன ஷுஃபத்தன்) ஈமான் எழுபதே சொச்சம் பணருடையது என்ற ஹதீதின்படி, எழுபத்தேழு பணர்களை எடுத்துக்கூறி ஒவ்வொரு பணராக விபரம் எழுத ஆரம்பித்து முதல் இரண்டுபணர்களாகிய கலிமா விபரத்தையும்,மலக்குகளின் உண்மையையும் விபரித்து, மூன்றாவது பணராகிய,வேதங் களைப் பற்றி விபரித்து, எழுதி வருகையில் நடுவே அப்படியே எழுதுவதைநிறுத்திவிட்டு,அல்லாஹுத்தஆலா வின் உத்திரவின் பேரில் கல்வத்திலாகி விட்டார்கள்.

நாயகம் அவர்கள் இந்நூலில் சுட்டிக்காட்டும் சாராம்சம் என்னவெனில், தீனுல் இஸ்லாமின் அம்சங் களான ஈமான், இஸ்லாம், தௌஹீது, மஃரிபா முதலானவைகளை சாமானியர்கள் எண்ணியிருப்பதுபோல, ஏட்டுப் படிப்புகளைக்கொண்டு மாத்திரம்அடைதல் சாத்திய மானதல்ல. ஆயினும், தக்வா, முஜாஹதா, கல்வந்து, ரியாலத்து முதலிய அருந்தவங்களால் உள்ளந்திறந்து அடையக் கூடியவைகளாகும். வெளிரங்கமான, ஷரீஅத்துடைய இல்முகள்,மேற்கூறியதற்குசாதகமாகவும் வேலி போலவும் இன்றியமையாதவைகளாய் இருப்பதால், அவைகளையும் கற்கவேண்டுமென்பது அவசியமாயிற்று.



இந்த உலூமுத்தீனிற்சொல்லப்படும் விஷயங்கள்,குர் ஆன் ஹதீதுகளை உள்ளபடி,துடர்ந்து, நடந்து,அகக்கண்திறந்த நாதாக்களின் மெஞ்ஞானங்களை படைத்ததற்கு நேர்ப் பாதையாகும். உண்மைப் பாடுபடுதலின்றி, அகக்கண் திறவாமல், முகத்திலிருக்கும் இரு புண்களைக் கண்களாய் கொண்டு எத்தனைக் கிதாபை ஓதி, உலமாக்களென்று பேர் பெற்ற போதிலும். இதில் சொல்லப்படும் இல்முகள் முரணாகத் தோற்றும், காமாலைக் கண்ணனுக்கு, வெயில் மஞ்சளாய்த் தோற்றுவது கண் குற்றமேயல்லாது,வெயில் குற்றமாகாது.

இதை நமது கல்வத்து நாயகம் அவர்கள் கோர்வை செய்ததில்லையெனச் சிலர் பிரஸ்தாபிக்கிறார்கள், அவர்கள் அவ்விதஞ் சொல்லுதல்அறியாத்தனமாகும். 'நமதுநாயகம் அவர்களே தங்களின் முப்பத்தி நான்காவது வயதில், அதாவது, அவர்கள் கல்வத்திலாகுவதற்கு முன்னால்' தஸவ்வுபுடைய இல்மில் மிக ஆஷிகானவர்களாய்' உலூமுத்தீன் எனும் இக்கிதாபைக் கோர்வைசெய்தார்கள் இதைக் கோர்வை செய்யுங் காலத்தில் நானும் அவ்விடம் (கீழக்கரைத் தைக்காவில்) இருந்தேன், ஆகையால், அவர்கள் கோர்வை செய்தது எனக்கு நேரில் தெரியும்' என்பதாக எனது தந்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் நாயகமவர்கள் சிஷ்யரான மீருமுகையதீன், லெப்பை ஆலிம் சாகிபவர்களிடம் 'நான் உலூமுத்தீன் என்றொரு கிதாபு கோர்வை செய்திருக்கிறேனே, அதை நன்றாய்ப் பார்த்து வாருங்கள்' என்று சொன்னதாக, அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் நாயகமவர்கள் தங்கள் சொந்த சிஷ்யரிடத்தில், இந்த உலூமுத்தீனைப் பற்றி, இந்த கிதாபை எனது துவர்க்க காலத்தில் நான் கோர்வை செய்தேன், ஆகையால் அது அவ்வளவு தெளிவாயில்லை, இப்போது கோர்வை செய்வதானால் அதைவிட மிகத் தெளிவாக எழுதியிருக்கலாம்' என்று சொல்லியிருக்கிறார்கள், ஆகையால் நமது நாயகம் அவர் கள் தான் கோர்வை செய்திருக்கிறார்கள் என்பதில்

யாதொரு சந்தேகமில்லை. மேலும், காலி கழுவல்லையில் ஹபீபு மரைக்காயர் வீட்டில் அவருக்காக நாயகமவர்கள் எழுதி அனுப்பிய உலூமுத்தீன் இன்றும் இருக்கிறது, ஆகையால், இது நாயகமவர்கள் கோர்வை செய்ததில்லை யென்று சொல்லுவது எதுபோலெனில், இஹ்யா உலூமுத்தீனில் சிலவிடங்களில், லாஹிறுடைய ஷறஉக்கு கிலாபாக விளக்கம் இருப்பதாகக் கண்டு, இவை கஸ்ஸாலி இமாம் கோர்வை செய்யவில்லை என்று சிலர் தீர்ப்பு சொன்னது போலுள்ளது.

இதை அவர்கள் ஹிஜ்ரி 1300-ம் வருடத்தில் இயற்றி இருக்கிறார்கள், நாற்பத்தி மூன்று வருட காலமாக இது கையெழுத்துப் பிரதிகளாகப் பரவி வந்தது, 1343-ம் வருடத்தில் நாயகமவர்களின் சிறிய பிதாவின் புதல்வர் செய்யிது முகம்மது ஆலிமவர்களின் குமாரர் **செய்யிது அகமது கபீர் ஆலிம் சாகிபு,** இதை **அச்சிட்டுப் பரத்த** நாடி, நாயகவர்களின் கோர்வைக்கு ஷறஹ் செய்வது போல தானும் கோர்வை செய்து இடைக்கிடை சேர்த்தும், நாயகமவர்கள் உலூமுத்தீன் கிதாபை பூர்த்தியாக்காமல் இடையில் நிறுத்திவிட்டதைத் தொடர்ந்து சில பாடங்களைத் தானே கோர்வை செய்து சேர்த்தும் அச்சிட்டிருக்கிறார். இவர் அச்சிட்ட இந்த கிதாபில், இன்ன இன்ன பக்கங்கள் நாயகமவர்கள் கோர்வையென்பதும், இன்னின்ன பக்கங்கள் செய்யிது அகமது கபீர் ஆலிமுடைய கோர்வையென்பதும், அடியில் எழுதப்படும் விபரத்தால் தெரிந்துகொள்ளவும்.

| | |
|---|---|
| நாயகமவர்கள் கோர்வை. | செய்யிதஹமத் கபீர் ஆலிம், சேர்த்தவை |

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# உ லூ முத் தீன்

**பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்**

அவனைக் காணுதிருந்தபோதிலும், கண்டதுபோல் கண்டு முருக்கபாச் செய்பவர்களுடனேயாகி அவன்லே தெண்டிப்பவர்களை அவனுடைய பாதைகளளவில் நேர்வழி காட்டுவானே, அப்பேர்ப்பட்ட ஏகபராபர வஸ்துவாகிய ஒரே நாயகனை துய்தாக்குகிறேன், இன்னும் நம்மிலே தெண்டிப்பவர்களை நம்முடைய பாதைகளளவில் உண்மையாய் நேர்காட்டுவோமென்று திருவுளம்பற்றினுனே, அப்பேர்ப்பட்டவன், இன்னும் தக்குவாவுடைய மூமினனவர்களுக்கு சகலதையும் அறிவிப்பதுகொண்டு பிணையாய், தானே காரிய கர்த்தனுகயிருப்பதின் பேரில், அவனை நான் புகழ்கிறேன். அவ்விதம் தானே பிணையென்பதற்குச் சாட்சியாய் அல்லாஹ்வை தக்குவாச் செய்து கொள்ளுங்கள். அல்லாஹ் சகலதையும் உங்களுக்கு அறிவித்து தருவானென்றும் ஈமான்கொண்டவர்களே! அல்லாஹ்வை நீங்கள் தக்குவாச் செய்வீர்களானுல் உங்களுக்கு ***புறுக்கானை*** ஆக்கிவிடுவானென்றும், அவனுடைய காரியஸ்தர்கள் தக்குவாவுடையவர்களல்லாது மற்ற யாருமில்லையென்றும் திருவுளம் பற்றினுனே அப்பேர்ப் பட்டவன்.

ஆகையால், தக்குவாவுடையவர்கள் அவர்கள் நாயனுடைய **ந:பஹாத்தை** * முகந்துகொள்ள இலக்காகி, சங்கையாகிய அவனுடைய சொல்லளவில் கழுத்தை நீட்டியெட்டிப்பார்த்து நீயே பூராயமுடையவன், அறிவையுடையவன், எங்களுக்கு நீ அறிவித்ததைத்தவிர அறிவில்லை. உன்னைத் துய்தாக்குகிறேமென்றிருந்து விட்டார்கள். அவன் சகலதையும் அறிவித்தான்.

---

* பரிமளங்கள்

நாயனே! அறிவை எனக்கு அதிகமாக்கிவிடு என்ற ஒரு சொல்லைத் தவிர ஒரு வஸ்துவிலும் அதிகத்தைத் தேடும்படியாய் ஏவப்படவில்லையே. அந்தஒருவரின்பேரில் அல்லாஹ் சலவாத்தும்,சலாமும் சொல்வானாகவும், அவர் எப்பேர்ப்பட்டவரானால் அவர் அறியாததெல்லாம் அல்லாஹுத்தஆலா அவருக்கு அறிவித்ததால்அவருடைய வரிசையை மகா பார துாரமானதென்று அல்லாஹ்வால் துதித்துப் புகழ்ந் தேத்தப்பட்டவர்கள். இன்னம், முன்னோர்கள், பின்னோர்களுடைய அறிவுகளென்னும் சலப்பிரளயம் ஊறிவரும் சுனையாகிய ஊற்றுக்கண்ணையும், சிறுபாவம், பெரும்பாவம் சகலதையும் விட்டு காக்கப்பட்ட திவ்விய குணாளரான முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மீதும், அவர்கள் கோத்திரத்தார சினேகிதர்கள் மீதும் தக்குவாச் செய்பவர்களுக்கு அல்லாஹுத் தஆலா புறுக்கானை ஆக்குகிறதுகொண்டும், சகலதையும் அறிவிப்பது கொண்டும் காரிய கருத்தனாக இருக்குங்காலமெல்லாம் அல்லாஹுத்தஆலா சலவாத்தும் சலாமும் சொல்வானாகவும்.

***அம்மா பஃது*** இதாகிறது. நீதம், அநீதம்* இன்னதென கசடறக் கற்று** றசூலின் சொல்லிலும் செயலிலும் பின் சென்று, அவர்களது கற்பனையைக் கண்டு தேறித்தெளியவேண்டி தெண்டித்து, சகலருக்கும் முன்னிலைக் கருத்தர்களாய் அந்தரங்கங்களைக் கொண்டு அல்லாவுடைய சொந்தம் பெற்ற அடியார்களாகிய என தாண்டவமார்களின் வலுப்பந்தங்கிய வார்த்தை களென்னும் சோதிப் பிரகாசத்தில் நின்றும் பந்தமாய்

---

* நீதம் அநீதமென்று துவக்கஞ் செய்திருப்பது ஏதுமொரு கோர்வை செய்பவர்கள் ஆரம்பத்தில் சொல்வதற்கு மாற்றமாக இருப்பதுபோல சிலர் சிந்தையில் ஊசாடப்போது மென்றெண்ணி சில போக்காக மேலே எழுதினேன், சாதிக்கான சாலிக்குக் அதன் அந்தரங்கத்தைச் சொல்லப்படுமல்லாது மற்றவர்களுக்கு சொல்லக் கூடாது.

** கற்கக் கசடற கற்பவைக் கற்றபின் நிற்கவதற்குத் தக.



கொளுத்தி எடுக்கப்பட்ட தீனுடைய அறிவுகளை இதிலே வட்டுருக்கமாக்கப்பட்ட கித்தாபாக இருக்கும். அலகு பிளக்க வெறும் பேச்சாய்ப் பேசுவதில் தீனுடைய இல்மு இன்னதெனக் கண்டு தேருதவர்களின் கண்கள் அவர்களளவில் எட்டிப் பார்க்கப்பட்டு எவ்விடத்திலும் பிரசித்தமாக்கப்பட்டு தான் பெரியவனென்ற மாட்சிமைக்காய் வீறுபேசத் துணிந்தும், ஒருவருக்கொருவர் குற்றப்பாடு பேசியும். இரவாய்ப்பகலாய் கித்தாபுகள் கோர்வை செய்வதிலே காலத்தைப் போக்கி நம்மைப் போலொத்த ஏழைகள் அவர்களைப் பார்த்து மருண்டு வீண்தர்க்கங்களாலும், உபயோகமில்லாத அறிவுகளாலும் அவர்களுடைய கோர்வைகள் நிரம்பியிருப்பது அவர்களுக்கும் பிசகுதலாகி இதுதான் தீனுடைய அறிவென்று மற்றவர்களையும் அவர்கள் பிசகுதலாக்கிக் காரியபாகம் தெரியாத அறிவீனர்களுடைய வார்த்தைகளில் நின்றும் ஒன்றும் நான் இதில் எடுக்கவில்லை.

ஆனதால், வக்த்துகளென்னும் மாணிக்கங்களையும் காலங்களென்னும் இரத்தினாதிகளையும், அபூர்வமாகிய வாழ்நாள்களையும் துன்யாவுடைய அறிவுகளைத் தேடித் தெண்டிப்பது கொண்டே பழுதாக்கிப் போட்டார்கள். ஆகையால் பரிபூரணமாகிய ஆழமான நுட்பங்களுடனே தமிழ் பாஷையில்ஆகிறத்துடைய இல்முகளைச் சேகரித்து இந்த கிதாபை வட்டுருக்கமாய் கோர்வை செய்வதற்கு என்னுடைய ஊசாட்டத்திலுண்டானது.

ஏனென்றால், நான் படித்தபடி நடக்க என்னுடைய நபுசு மூறியாட்டம் செய்வதால், அதற்கு உறுதிப்பாடு உணர்ச்சைக்காகவும், ஞாபகத்துக்காகவும், இன்னும் யாவரும் காதாரக்கேட்டு கல்பில் தரிபடுத்தவும். இன்னும் கியாமத் நாள் வரை நடந்தேறி வரும் தருமங்கொண்டு தருமமிட்டவர்கள் பெற்றுக்கொள்ளும் பதவிகளில் மேலாம்பரமானவைகளில் நான் புகுதவேண்டியும்,

இன்னும் அந்த நபுசானது தன்னைமறந்து புறத்தியாருக்கு உபதேசிக்க உவந்தபடியால் அதனுடைய கருத்துக் கிசைந்து உபாயமாகவும், தந்திரமாகவும், தன்னை மறந்து புறத்தியாருக்கு உபதேசம் சொல்வதின் பேரில் என்னுடைய நபுசை உறுக்கினவனுகவும், பயங்கரம் பூட்டினவனுகவும்,

**அத:முறானன் ஞஸ பில் பிர்றி**

என்ற ஆயத்துபோலொத்ததில் நன்மையைக் கொண்டேவி அதன்படி நடக்காதவர்களைப் பழித்தும், பாரதூரங்கொண்ட அவனுடைய கோபம் அவர்கள் பேரிலுண்டாகுமென்று அல்லாஹ்சொல்லியிருக்கிறதையும் முன்னேர்கள் சகலரும் அப்பேர்ப்பட்டவன் இம்மை மறுமையிலும் பழிப்புக்குள் படுவானென்று சொல்லி யிருப்பவைகளை அந்த நபுசுக்கு ஓதிக்காட்டி என்னுடைய ஊசாட்டப்படி கோர்வை செய்ய எத்தனித்தபொழுது, என்னுடைய கருத்தை நான் நம்பாதபடியால் ஒருவேளை இந்த ஊசாட்டம் தலைமைத் தனத்தை உவந்தததற்காக நபுசுடைய குபாடத்தில் நின்று முள்ளதாக இருக்கப் போதுமென்று என்தன்னிலே ஆலோசித்தவனுகவும், "வமா உபர்ரிவு நபுஸீ" என்ற ஆயத்தையும், "அபறஅய்த்த மனித்தகத" இலாஹஹு ஹவாஹு போலொத்த ஆயத்துகளில் நபுசை நம்பக்கூடாது, அது கெடுதலைக்கொண்டே ஏவிக்கொண்டிருக்கும். நபுசுடைய அவாவே அநேகர்களுக்கு நாயுனக இருக்குமென்று அல்லாஹுத்தஆலா சொல்லியிருப்பவைகளையும் ஓதிக் காட்டிக் கொண்டிருக்கும்போது அல்லாஹ்வுடைய பாதையில் உடன் பிறப்பாகிய முஹம்மதுடைய மகனர் ஹபீபு என்பவர் இது நல்ல ஊசாட்டந்தான். அதளவில் முன்னேக்கி இந்த காரியத்தைநிறைவேற்றவேணுமென்று மிகுதியும் அதட்டுதலாய் விரும்பினர்.

இகு "கைறு"டைய சாடையில் ஹக்கீக்கத்தில் ஹவா நபுசுக்காக செய்வதால் "ஷற்"றில் (தீங்கில்)



விழுத்தாட்ட ஷைத்தானுடைய குபாடத்தில் நின்று முள்ளதாக இருக்குமோ அல்லது றப்பானிய்யத்தாகிய நல்லுதவி கட்டளையில் நின்று முள்ளதோ வென்று அகப்பார்வையால் நான் தெளிந்து கொள்ளத் தகுதி யில்லாதவனுக இருந்ததால், அவருடைய அதட்டுதல் கொண்டும் பாராட்டுதலில்லாமல் அந்தக் கோர்வை யென்னும் கருத்தை விட்டுவிட்டேன், அப்படியிருக்கும் போது நான் இல்மு இபாதத்து போலொத்ததைவிட்டு பற்றறுதலாக மருட்டுதல் துக்கமென்னும் சமுத்திரத்தில் மூழ்கியதின் அலைமோதலால் கல்பு கலங்கியிருக்கும் வேளை சங்கையாகிய றமலான் மாதம் வந்துவிட்டது, ஆகையால், நெஞ்சுகள் மறைத்திருப்பதையும், விழிகள் சுருட்டி விழிப்பதையும் பரிஷ்காரமாய் யாதொரு களங்க மன்றியே அறிந்திருக்கிறவனின் முகத்துக்காகவே நான் திராணி பெற்றமட்டுக்கு என்னுடைய நாட்டத்தைக் கலப்பறுதலாக்கி வைத்து இந்தக் கித்தாபை கோர்வை செய்வதின் பேரில் பராக்காயிருப்பதை இந்த மாதத்தில் மிகவும் வேண்டுதலாக கண்டேன்.

ஆனல் முன்னேர்களாலும், பின்னேர்களாலும் இந்த விசயத்தில் அனேகமாய் கோர்வை யாக்கப்பட்டிருந்தாலும் சிலர்கள் யாவரும் எளிதில் விளங்கி பிரயோசனம் பெறக் கூடாத அடி மூடுகளை யெடுத்துக் காட்டினர்களல்லாது அதின் பிரிவுகளையும், பணர்களையும் எடுத்துப்பேசவில்லை. சிலர்கள் சஹாபாக்கள் முன்னேர்களுடைய ஹால்களையும் நடைபழக்குதலையும் காட்டாமல் இராக்கதை பேசுவதற் குள்ள ஆகங்களை யெடுத்துக்காட்டினர்கள். சிலர்கள் ஹக்காயிக்கு மஃரிபாவில்முங்குதலாய்ச் சொல்லியிருப்பதில் அவாமுக்கும் கவாஸ்ஸுக்கும் இடையிலுள்ள நிலைப் பாட்டைப் பிரிக்கவில்லை, சில ஆரிபூன்கள் ஹோஷ் மாறி இலாஹிய்யத்தாகிய ஹலறத்துக்கு அதபுக் குறைவை வருத்துகிற சில வார்த்தைகளைச் சொல்லியிருப்பதைக் கொண்டும் லாஹிரில் மஃனு துலாம்பரமாயிருக்க இதற்கு அஸ்ருருகிய முருது மஃனு இன்ன இன்னதென்று

லாஹிரை விட்டு மாற்றமாகச் சொல்வது கொண்டும் கோர்வையை நிறப்பிப் போட்டதை மடையர்களாகிய ஸிந்தீக்குகள் மனனமாக்கிக்கொண்டு தாங்கள் தௌஹீதுடைய இல்மையறிந்து தேறினவர்கள் என்றும், கஷ்பு கருமாத்தையுடையவர்கள் என்றும் வழி கெடுக்கும் படியாக ஆகிவிட்டது,

இந்த கித்தாபு அவ்விதமான உளப்பங்கோணல்களை விட்டும் நீங்கியிருக்குமென்பது ஏது எவ்விதம் என்றெண்ணுதே, உன்னுடைய ஆழிய கருத்தினல் பார்வையிட உனக்குத் தோணுதலாகும். ஆகையால் எனது மறுட்டுதலென்னும் தூக்கத்தை விட்டு என்னை யுணர்ச்சைப்பூட்டி இந்த கித்தாபிலுள்ளபடி அமல் செய்பவர்களில் என்னை முந்தினவனுக ஆக்கிவிடவும், இம்மையிலும், மறுமையிலும் சங்கையாகிய அவனுடைய முகத்தை நாடியே கலப்பறுதலானதாக இந்தக் கிதாபைக் கையேற்றுக்கொள்ளவும், இன்னம் அவன் சகலதையும் இல்முல் லதுன்னிய்யால் படித்துக்கொடுக்கும் தலத்திலே சித்தீக்கூன்களாகிய முத்தக்கீன்களுக்கு நல்லுதவி கட்டளை கொடுப்பதுபோல் எனக்கும் நல்லுதவி கட்டளை கொடுக்கவும், இன்னம் சலாமத்தாகிய கல்புகொண்டு அல்லாவிடத்தில் வந்தவர்களுடைய கூட்டத்தில் என்னை ஒதுக்கிச் சேர்த்துக்கொள்ளவும், இன்னம் இந்தக் கிதாபில் முன்னூல்களிலுள்ளதையும், அபிப்பிராயங்களையும் வருவிப்பதில் தப்பிதத்தை விட்டு என்னைக் காத்துக்கொள்ளவும், இன்னம் ஏதாவது ஒரு அறிவை யாருக்கு நானறிவித்தாலும், நானறியப் பெற்ரு லும் அவனுக்குப் பொருத்தமுள்ளதிலேயே என்னை நேர் காட்டவும், எனக்கு உதிப்பைத் தரவும், அல்லாவிடத்தில் ஐயறிவு ஐம்புலனையடக்கியொடுக்கி அஞ்சியும், கெஞ்சியும் அதபுடன் கேட்டு நிற்கிறேன், ஆமீன் யாறப்பல் ஆலமீன்

"இ:லமீ யானபுசில் அம்மாரு வயா ஹபீபு"

தீங்குகொண்டு ஏவுகின்ற என்னுடையநபுசே! இன்னம் இந்தக் கோர்வை செய்யத்துணிந்தபோது நல்மாராயம்



சோபனம் சொல்லிய ஹபீபே! அறிந்துகொள். இந்தக் கோர்வையில் இப்போது தொடுப்பதில் முதலாவது, எந்தக்காரியத்தைத் துவக்கமாக எழுதுவோமென்று யோசித்ததில் அறிவினுடைய விபரங்கொண்டே துவக்கஞ் செய்யவேணுமென்று நல்கருத்தும் உதிப்பு முண்டானது. அப்பால் ஆகிறத்துடைய உலமாக்களில் முஹக்கிக்கூன் களாகிய எனது ஆண்டவமார்களின் கோர்வைகளில் மிகுத்ததையும் அறிவுடைய விபரங்கொண்டே துவக்கஞ் செய்யப்பட்டிருப்பதைப் பார்த்து அதுபோல் நேரான நற்கருத்தும் உதிப்பு முண்டானதற்காய் அல்லாஹுத் தஆலாவை ஷுக்று செய்து சொல்கிறேன்,

ஆனல் இந்தக் கிதாபை நோட்டமிடுகிற உனக்குச் சில வசிய்யத்துச் செய்கிறேன், அதில் முதலாவது என்னுடைய நபுசுக்கும் இரண்டாவது உந்தனக்கும் மற்றவர்களுக்குமாக ஏற்படுத்தப்பட்ட தாகையால் உனக்குத் தேடாப்புறத்தில் அகப்பட்டப் புதையலாகவும் நேர்வழியின்னதென தெரியாமல் குருடராகியிருந்த உனக்கு அகக்கண்ணைத் திறக்க வந்த அருள் பிரகாச மாகவும், ஒருவன் கடுவழி நடந்திளைத்துக் கடும்பசியும் தாகத்துடன் கடுங்காந்தியும் சூட்டுடன் கானகத்தில் அகப்பட்டு ஹலாக்காக முடுகும் வேளை, ஆகாயத்தில் நின்றும் பசுமை பொருந்திய பச்சை மரகதத்தில் ஒன்பது வகை இரத்தினதியாலமுத்தப்பட்ட பாத்திரத்துடன் குளிர்ச்சி பொருந்திய மாளிகையும், காலாள்களும் பதினெட்டு நளபாகத்துடன் ஒஜீவனமும், அமிர்தமாகியத் தண்ணீரும் வந்துவிட்டால் எவ்வளவு மகிழ்ச்சியுடன் அவைகளை அங்கீகரிப்பானே அப்படிப்போல் (பல்) மேலும் சொர்க்க லோகத்தைக் கொடுக்கப்பட்டால் எவ்விதம் சந்தோஷமாய் அதில் புகுத நாடுவானே அப்படிப்போல் (பல்) அதைப்பார்க்கிலும், ஆயிரம், ஆயிரமடங்கு அதிகமாக இதில் ஆசையுடன் சிந்தையைச் செலுத்திப் பார்க்க அல்லாஹுத் தஆலாவுடைய முகத்துக்காய் உங்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

உன் கைவசம் இந்தக் கிதாபு அகப்பட்டதானால் அல்லாவினாணை; அல்லாவினாணை, அல் லாவினாணை அதுகளை ஆராயாமல்வீண் பொழுதுபோக்காதே! அப்பால்இதிலுள்ள படி தெண்டிக்கவும்; அல்லாவுக்காக வேண்டி நபுஸே! ஏஹபீபே! உங்களிடத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன், இதில் ஏதும் குற்றப்பாடு சொல்பவர்களுடைய சொல்லளவில் திரும்பிப் பாராதே. ஏனென்றால் இந்த ஸமானில் அல்லாஹுத் தஆலாவுடைய முகத்தை நாடி இல்மை வெளியாக்குகிறவர்களைக் காண்பதரிது. உலமாக்களென்று பேர் பெற்றவர்கள் சகலரும் ஒருவருக்கொருவர் குற்றப்பாடு சொல்வதை விட்டொழிந்திருக்கவேயில்லை.

ஆனால், இதில் ஏதாவது உனக்கு விளங்காமல் அல்லது முற்பட நீ கேட்டிருப்பதற்கு மாற்றமாக விளங்கினால் நீயாவது அல்லது தஹ்கீகில்லாத உல்மாக்களுடைய சொல்லைக்கொண்டாவது தீவிரம் 'கத்தா'வாக்கி விடாதே. அதனால் மிகுத்த லாபம்இழந்துவிடுவாய், ஆகிறத்துடைய உல்மாக்களில் முஹக்கிக்கானவர்களைச் சந்தித்தாயாகில் கேட்டுத் தெளிந்துகொள், ஆனால் இன்னாளில் அவர்களைக் காண்கிறது பேர்மட்டில் கேட்டு ரூபத்தைக்காணக்கூடாமலிருக்கிற ***அன்காஉல் மக்ரிப்*** என்னும் மகுரிபுருச்சியத்திலிருக்கிற ஆனையராஞ்சிப் புள்ளென்று சொல்லப்படுவது போல் அவர்களும் இருப்பார்களென்றும் கேள்வியாகிறோமல்லாது வேறில்லை. அவர்களின் இரு திருப்பாதார விந்தங்களைத் தெரிசித்தக் கண்களுக்கே சோபனம். உலமா உத்துன்யா வென்னும் துன்யாவினுடைய உலமாக்கள் "கத்தா" வென்று சொல்வதளவில் திரும்பிப்பாராதே. ஏனென்றால் அவர்கள் ஹஸதை விட்டொழியமாட்டார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் உல்மாஉத் துன்யா உடைய வருணிப்பில் அனேகமாய்ச் சொல்லியிருப்பதுடன் அவர்களுக்குப் பின் ஸஹாபாக்களுடைய நாளையில்தானே ஹஸதையுடையவர்கள் ஆகிறத்துடைய உலமாக்களாகிய மகாப் பாரவான்கள் பேரில் குற்றப்பாடு



சொல்லத் தொடுத்து விட்டார்கள், முதலாவது தப்ஸீருடைய உலமாக்களுக்கெல்லாம் நாயகமாகிய செய்யதுனா இப்னு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் குறுஆனுக்கு தப்ஸீரு செய்ததை நாபிஉப்னுல் அஸ்ரகு என்பவர் குற்றப்பாடு சொல்வதும் குறுஆனுக்கு மனம்போல் தப்ஸீர் செய்கின்றாரென்று மிகுத்த நோவினையெல்லாம் செய்கிறவராகயிருந்தார். இன்னமும் அப்துல்லாஹிபுனு உமறையும், அப்துல்லாஹிபுனுஸுபைறையும் சொர்க்கங்கொண்டு நல்மாராயம் பெற்ற ஸஃது றலியல்லாஹு அன்ஹு இவர்கள் போலொத்தவர்களுடைய இல்மிலும், தொழுகை முதலாகிய இபாதத்துகளிலும் சிலர்களெல்லாம் குற்றப்பாடு பேசுகிறவர்களாக இருந்தார்கள். தாபிஊன்களில் அனேகர்களையும், நாலு இமாம்களையும் குற்றப்பாடு சொல்லி அவர்களில் சிலரை காபிரென்றும் சொல்லியிருக்கிறார்கள், அபாயஸீதுல் பிஸ்த்தாமியை ஊரை விட்டும் ஏழு தடவைத் துரத்தினார்கள், இன்னும் தின்னூனில் மிஸ்ரிய்யி, ஸம்னூனில் முஹிப்பு றலியல்லாஹு அன்ஹுமா இவர்களையெல்லாம் ஸின்த்தீக்ஜ நாஸ்த்திகன் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னும் அஷ்ஷெய்குல் அக்பர் றலியல்லாஹு அன்ஹு தங்கள் புஸூஸுல் ஹிக்கம் என்றக் கிதாபில் **லிஸானுல் ஹக்கு** என்றும், வஜ்ஹுல் ஹக்கு என்றும் அளவிடக் கூடாதப் புகழ்ச்சியாய்ப் புகழப்பட்ட அபூஸயீதுல் கர்ராஸ் என்பவர்கள் ஒரு கித்தாபு கோர்வை செய்தார்கள், அதில் ஹக்காகிய சொல்லையே சொல்லியிருக்க, அதில் சிலதைப் பிடித்து ஹஸதையுடையவர்கள் அவர்களை காபிறென்று பத்வா கொடுத்தார்கள். இன்னும் ஸஹ்லுத்துஸ்த்தரிய்யி றலியல்லாஹு அன்ஹு அவர்களை காபிரென்றார்கள். இன்னமும் பஜாயாவென்னும் ஊரிலுள்ள அபூமத்யனுல் மக்ரிபிய்யி றலிஅல்லாஹு அன்ஹு அவர்களை ஸின்த்தீகென்று மிகுந்த வருத்தப் படுத்தி ஊரைவிட்டுத் துரத்திவிட்டார்கள், அவர்கள்

எப்பேர்ப்பட்டவர்களானால், அஷ்ஷெய்குல் அக்பறு றலியல்லாஹு அன்ஹு புதூஹாத்துல் மக்கிய்யாவில் அவர்களைக் கணக்கில்லாத புகழ்ச்சியாய்ப் புகழ்ந்து பின்பு சொல்கிறார்கள்: ஒருபோது நானும் அப்தால்களில் ஒருவரும் **காபு** மலைக்குப் போயிருக்கும்போது அம்மலையை சூழ்ந் துக்கொண்டிருக்கிற நாகத்துக்கருகே நாங்கள் போகையில் நம்முடைய கூட்டாளி என்னைப் பார்த்து இந்த சர்ப்பத்தின் பேரில் சலாம் சொல்லுமென்றார், அப்போது சலாம் சொன்னவுடன் பாம்பானது உடனே ஜவாபு சொல்லி நீங்கள் எந்தத் தேசமென்று கேட்டது. நாங்கள் பஜாயாவெனும் நகரத்திலுள்ளவர்களென்றவுடன் அந்தப்பட்டணத்தையுடையவர்களுடன் செய்குஅபீமத்யன் உடைய நடைபிடி யெவ்விதமாக இருக்கிறதென்று கேட்டது. அப்போது அவரை அவ்வூரையுடையவர்கள் ஸின்த்தீக் என்று சொல்கிறார்களென்று சொன்னோம். உடனே ஆ! புதுமை! ஆதமுடையமக்களுடையமடத்தனமே மிகவும் ஆச்சரியம். அல்லாஹுத்தஆலா அவனடிமைகளில் ஒருவரை ஒலியாக நிறுத்தி அப்பால் அவனுடைய கல்குகளில் ஒருவராவது பொருத்தக்கெடுவார்களென்று அல்லாவின் பேரிலாணையாக நானெண்ணியே யிருக்கவில்லை என்று அரவமானது நாகரீகமாய்ச் சொன்னவுடன் அவரை உனக்கு எப்படித் தெரியுமென்று நாங்கள் கேட்டோம். உடனே ஸுப்ஹானல்லா? பூலோகத்தில் அவரையறியாத ஊர்வினை யுண்டாகியாயிருக்கிறதா? அல்லாவினாணை அல்லாஹுதஆலா அவரைப் பாரதூரமாகிய ஒலியாக எடுத்து அடியார்களுடைய கல்பில் அவர் பேரில் உவப்பையுண்டாக்கியிருக்கிறான். காபிர் அல்லது முனாபிக்கேஒழிய அவரைப் பொருத்தக் குறைவாக இருக்கமாட்டார்களென்று நாகம் சொல்லியது என்று பேசி வருகிறார்கள்.

ஜுனைதுல் பகுதாதீ அபுல் ஹஸனிஷ் ஷாதுலிய்யி றலியல்லாஹு அன்ஹுமா போலொத்தவர்களில் அனேக அனேக அவுலியாக்களை ஸிந்தீக்கென்றும், கஸ்ஸாலி றலியல்லாஹு அன்ஹுவை காபிறென்றும்,



பத்வாக்கள் கொடுத்திருப்பதும் தவிர அவர்கள் கோர்வை செய்த இஹ்யா உலூமுத்தீன் என்ற கிதாபையும் சுட்டுக்கரித்துப் போட்டார்கள். முஹ்யித்தீனிப்னுல் அறபீ றலியல்லாஹு அன்ஹுமா அவர்களை அனேக உலமாக்கள் காபிறென்றும் ஸிந்தீக்கென்றும் பத்வாக்கள் கொடுத்து இருக்குகிறதும் தவிர அவர்கள் பேரில் றத்தாக அனேக கித்தாபுகள் கோர்வை செய்திருப்பதில் சிலதையெல்லாம் நான் பார்த்ததில் அதிலுள்ளதிலொன்றையாவது இதிலெழுத கைகூசுகிறபடியால் விடப்பட்டது. இன்னமும் அவர்களைக் குற்றப்படுத்தி ஹஸதினால் வெட்டிப்போடும்படி சொல்லித் தன்னைத் தப்பிக்கொண்டவர்களை யெடுத்துப் பேச வேணுமானால் அதிக நீளமாகிவிடும்.

இன்னமும் ஆகிறத்துடைய உலமாக்களில் அநேகர்களையும் அநீதமாய் சுல்தான்களிடத்தில் கோள் சொல்லி அவர்களை காபிறென்று பத்வாவும் கொடுத்து வதை செய்து போட்டார்கள், இமாம் அபூபக்குரின்னாபிலிசிய்யி றலியல்லாஹு அன்ஹு அவர்களை மிஸ்று சுல்த்தானிடத்தில் ஸிந்தீக்கென்று ஏற்படுத்திக் கொல்லும்படி ஹுக்கும் செய்தபடித் தலைகவிழத் தூக்கி ஆட்டையுரிப்பது போலுரிக்கும்படி சுல்த்தான் உத்தரவு கொடுத்துப் போட்டார். அதுபோலுரிக்கும் போது உள்ளச்சப்பாட்டுடனும் ஆராய்வுடனும் குறுஆனை ஓதிக்கொண்டிருந்தார்கள், யாதொரு ஈனவிரக்கமில்லாமல் தீர்மானமாக உரித்தே போட்டார்கள்,

இன்னமும் ஹலபு என்ற ஊரிலுள்ள நஸீமீ றலியல்லாஹு அன்ஹு அந்த ஹஸதுடைய உலமாக்களுக்கிடையிலிருந்து சகல இல்மிலும் அவர்களுக்கு மேலிட்டு அவர்களுடைய சொல்களை மிகுந்த அத்தாட்சி கொண்டு தள்ளுகிறவர்களாக இருந்ததின் பேரில் ஹஸதுவைத்து அவர்களை அந்த ஊர் சுல்த்தானிடம் கோள் சொல்லிக் கொன்றுபோட முயற்சித்ததில் முடியா

மல் சூரத்துல் இக்லாசை சிறிய ஒரு காகிதத்திலெழுதி செருப்புத் தைக்கிற செம்மானிடம் கொடுத்து மேற்படி கடுதாசை தோலிடையில் வைத்துப் புதிசாக ஒரு செருப்பு தைத்து அந்தச் செருப்பை நஸீமீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு உகப்பாக வேறே தேசத்திலிருந்து அவர்களை யுவந்தவர்கள் ஹத்யாவாக அனுப்பியது போல் அந்தச் செருப்பை யவர்களிடம் சேர்ப்பித்து வைத்துப் போட்டார்கள்.

அவர்கள் அதிலிருக்கிற மாறுபட்டை யறியாமல் ஹத்யாவைச் சந்தோசமாய் கபூல் செய்து செருப்பைக் காலிலணிந்துக்கொண்டார்கள். அப்பால்ஹஸதையுடைய உலமாக்கள் அந்த ஹலபென்ற ஊர் அதிகாரியிடத்தில் போய் நஸீமீ என்பவர் குறுஆனை மிகுந்துபழிப்பதுந்தவிர அவருடைய பொருத்தக் கேட்டின் தீர்மானம் குல்ஹுவல்லாஹு அஹது என்கிற சூரத்தை எழுதி செருப்பில் வைத்து தைத்திருக்கிறதாகக் கேள்வியாகிறோம். ஆனதால் அதை சோதித்து அதற்கு தகுந்த ஹுக்கும் செய்யவேணுமென்து முறையிட்டபடியால் உடனே அதிகாரியானவர். அவர்களை அழைத்துச் செருப்பைச் சோதித்துப் பார்க்கச் சரியாக இருந்தபடியால் ஷெய்குறலியல்லாஹு அன்ஹு யாதொன்றும் பேசாமலிருந்து விட்டார்கள், உடனே தலைகவிழத்தூக்கி ஆட்டையுரிப்பது போல் உரித்துப் போட்டார்கள். அவ்விதம் உரிக்கும்போது உரிப்பவர்களைப் பார்த்து சிரித்தவர்களாக தௌஹீதில் ஐநூறு பைத்து உண்டு பண்ணினார்கள்.

**இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜி ஊன்.**

**இவ்விதமெல்லாம் அவுலியாக்கள் பேரிலும் ஆகிறத்துடைய** உலமாக்களாகிய நாதாக்கள் பேரிலும் ஹஸது வைத்து ஊரை விட்டுத் துரத்தினதும் கொலை பாதங்கள் செய்ததும், இமாமென்றும் உலமாக்களென்றும் பேர்பெற்ற துன்யாவுடைய உலமாக்களல்லாது அறிவில்லாத அவாமுகள் இவ்வளவு தீராமையாகச் செய்யவேயில்லை. அவ்விதமவர்கள் செய்யவு மாட்டார்கள். ஆனால்



ஹஸதுடைய, உலமாக்களுடையநடவடிக்கையை உனக்கு நான் சைக்கினையாய்க்காட்டினதெல்லாம் இந்தக்கித்தாபில் ஏதும் அவர்களுடைய குற்றப்பாடுண்டாகி நீ அதனளவில் சாய்ந்து நஷ்டவாளியாகி விடுவாய் என்கிறதற்கும், இன்னம் உலமாக்களெல்லாம் இந்தக் கித்தாபில் சொன்னபடி நடக்கிறார்களா? நான் நடப்பதற்கு என்று அவர்களைப் பார்த்துப் பொடுபோக்காக இருந்து ; விடப்போதுமென்பதற்கல்லாது வேறில்லை. ஆனால், ஆகிறத்துடைய உலமாக்களைக் கண்டாயாகில் இதில் சொல்லப்படுவதை அவர்களுடைய செய்கையால் அறிந்து கொள்வாய். **அல் இஷாரத்துத் தகபீ லில் ஆகில்** புத்திமானுக்குச் சைக்கினை போதும். ஆகையால், முகம் வைத்ததில் முன்னோக்கி இல்மைப் படிக்க வேண்டியதே முதலாவது கடமை என்பதற்கு சில அடித்தளங்களைப் போட்டு அப்பால் இல்மிலும் மற்றதிலும் ஒழுங்கின்படி தொடுத்து விடுவோம்.

நபுஸே! அறிந்துகொள்! அல்லாஹுத்தஆலா உன்னைச் சீதேவியாக்கி வைப்பானாகவும், முதலாவது இன்ஸானாய் ரூபமெடுத்தவன் மீது கடமையென்னவென்றால், தன்னிலேதானே யோசிக்கவேண்டும். ஆனால் கடமையென்று ஒருவர் விதியாக்காதிருந்தாலும் அவனுடைய கருத்து ஆராய்வில்லாமல் இருக்கமாட்டாது. அவ்விதம் ஆராய்ந்து பார்த்தானேயானால் இந்த ஜன்மத்தைக்காண மேலாம்பரமானதொன்றுமில்லை யென்பது அவனுடைய சிந்தையிற்றோணும், அப்போது என்ன காரணத்தால்இந்தஜன்மம் மேலானதென்றும்ஏதுகாரணத்தால் மற்ற ஜீவாத்துமாக்களை விட்டும் இது பிரிந்ததாகுமென்றும் யோசிக்கச் சகலதையும் வகைவிபரமாய்ப்பிரித்து அறிவதுடன் அதனதனுடையஒடுக்கம்இவ்விதமாகுமென்ற அறிவெனும் ஒரு சிறப்புக்கொண்டல்லாது வேறில்லை என்பது நிச்சயமாகி சந்தேகமில்லாமல் தோணுதலாகும். ஆனால், அவனுடைய ரூபங்கொண்டல்ல. ஏனென்றால் கானகத்தில் இன்சானுடைய ரூபத்தில் எத்தனையோ

ரூபமிருக்கிறது. அல்லது அவனுடைய திரேகபலவந்தத்தால் என்றால், ஒட்டகை இவனைக் காணத் தேகபலவந்தமானது. சடத்தின் பெருப்பத்தாலென்றால், யானை மிகப்பெருத்தது. அவனுடைய வீரத்தன்மையாலென்றால்ஜவாய்மிருகங்களில் இவனைப் பார்க்கிலும் மிகக் கொடூரந்தங்கிய சுத்த வீரத்தன்மையுடையது, உண்டாகியிருக்கிறது. அதிகமாய் தின்னுகிறதாலென்றால் காளைமாடு இவனைப் பார்க்கினும் மிகுந்து தின்னுகிறதாயிருக்கிறது. போகத்தால் மிகுந்து சுகன்றியடைகிறானென்றால், இரண்டு, மூன்று நாழிகைத் தூரத்துக்கு ஒரே புணர்ச்சியில் நடக்கிற கின்ஸீறு அதிக சுகத்தையும், இன்பத்தையும் அனுபவிக்கிறதாயிருக்கிறது. ஒரு திகதியில் நாலாறு முறை புணரவதா லென்றால் அடைக்கலங் குருவியை மிகைக்க மாட்டான், ஆனால் சேர்க்கை செய்யும் விதம் அழகான மாதிரியென்றால், பெருச்சாளியும் இவ்விதம் தான் செய்கிறது. மிகுத்த திரவியங்களைச் சேகரித்து வைப்பதாலென்றால் எத்தனையோ பிசாசுகள் இராஜாதி ராஜாக்களிடம் காணக் கூடாத திரவியங்கள் இரத்தினதிகளை வைத்திருக்கிறது.

ஆனால் மேலே சொல்லப்பட்ட குணங்களை மனிதர்கள் உவந்து தேடுவதுடன் அறிவாளிகளுக்கிடையிலும் புகழப்பட்டதாயிருக்குதே, இந்தப் பேச்சு மேல்பூச்சே யல்லாது வேறில்லை. ஆழமாக யோசித்தால் இந்தச் சொற்களை உடைத்துப்போடலாமென்று எண்ணுகிறாய். நபுஸே! அப்படி எண்ணாதே. ஹயவானிய்யத்தாகிய அல்லது ஷைத்தானிய்யத்தாகிய அந்தக் குணங்களையே நீ இச்சித்து அதிலே மருண்டு அகப்பார்வையிழந்து வருடங்கள், மாதங்கள், வாரங்கள். நாட்கள் பல் (அல்ல) மேலும் எல்லா ஒவ்வொரு மூச்சுவிடும் தோறெல்லாம் ஹக்கீகத்தில் ஒவ்வொரு மிருகத்தின் குணத்தையும் சில சில வேளை சகல மிருகத்தின் குணத்துடன் ஷைத்தானுடைய குணத்தையும் அடைய வளைத்தலாக நீ தரித்து அந்த குணத்திலே மூழ்கி, ஆகிலும் ஹக்கீகத்தில் அதுவாகவே நீயிருப்பதாலும் இன்ஸானிய்யத்தாகிய



அறிவென்னும் அகக்கண் உனக்குக் குருடாகியிருப்பதால் அவ்விதம் எண்ணுகிறாய்.

ஆராய்ந்துப்பார்! ஒருவனுக்கு எப்போதும் அதிக சுமை எடுக்கிறதே வழக்கமாயிருந்தால் அவனை ஒட்டகம் போலென்றும், அல்லது ஒட்டகையேயென்றும், அதிகமாய் தின்கிறதால் மாடென்றும் ஒருவன் எந்நேரமும்கோபத்தை பூண்டவனாகயிருந்தால் அவனுக்கு நாய், பேய்க்கு கோபம் வருவதுபோல் வருகிறதென்றும், நாயேஎன்றும், தீட்பாகிய செய்கையை செய்தால் பன்றியென்றும் கழுதையென்றும். குரங்கென்றும் அதிக ஹஸதுடையவனை நரியென்றும், ஒரே பிடிவாதமாக இருக்கிறவனை கரடி என்றும், மிகுத்த திரவியங்களைத் தங்கரீகம்செய்து ஈயாதவர்களை பேயானது புதையலைக் காத்திருப்பது போல் காத்திருக்கிறானென்றும், பிசாசென்றும், இப்படிப்போல் சகல மிருகங்களுடைய குணத்தையும் ஒன்றையாவது விடாமல் சகலரும் சொல்லி யழைப்பதைச் சோடித்துப் பார்த்துக்கொள். இப்போது சொல்லப்பட்டவைகளெல்லாம் குறுஆனுடைய அத்தாட்சி கொண்டு உனக்கு தலீல் சொன்னதல்லாது மனோகரப்படி யொன்றும் சொல்லவில்லை. ஆனால் ஹதீதில் பன்றியுடைய ரூபமாகவும்.' நாயுடைய ரூபமாகவும். சில பாவிகளை எழுப்பப்படுமென்றும், இன்னம் மிஃராஜுடைய ஹதீதில் அனேகமாய் வந்திருப்பதும் தவிர ருபிஅத்துல் அதவிய்யா றலியல்லாஹு அன்ஹா போலொத்தவர்கள் சில அவுலியாக்களை மாத்திரம் மனிதராகக் காண்பதாயும், மற்றவர்களைப் பல பல மிருகங்களாய்க் காண்பதாயும், சொன்னதைப் பிரத்தியட்சமாய்ச் சிலர் சோதித்திருப்பதும் தவிர எவ்வளவோ பேர்களுடைய றூஹுகளானவை மவ்த்தானதின் பின் ஆவேசமெனும் பிசாசுகளாய் ஐயோவென்றலைந்து திரிவதில் கோடியிலொன்று சில சமயங்களில் சிலர்களுடைய பார்வையில் வெளியாகியு மிருக்கிறது. அச்சக்கரை முதலாகிய இடங்களில் சில கபுறுகளிலிருந்து அந்த றூஹானது ஓர் வகை மிருகமாய் இரவு காலங்களில் வெளிப்படுவதில் அதற்கு வீரமுட்டிப் பிசாசென்றும் சொல்கிறார்கள்,

ஆனால் நம்மிலுள்ள ஆரீபீன்களும் முஷ்ரீக்கீன்களி லுள்ள சிலரும் பாவிகள் மவுத்தானதின் பேரில் அவர் களுடைய அறுவாஹுகள் மிருகங்களாயும், ஷைத்தான் களாயும் ரூபமெடுப்பதை மறைவில்லாமல் பரிஸ்காரமாய் பார்த்திருப்பதால் அல்லாவுக்கு மாறுசெய்து இன்ன இன்ன விதமான தாழ்ந்த குணத்தையுடையவன் மறுபிறப்பில் நாய், பன்றி முதலாகிய பல பல ரூபமெடுப்பான் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னதெல்லாம் ஆலம் பர்ஸகில் அவ்வித மிருப்பதைக் கண்டபடிக்கு அல்லாது வேறில்லை. ஆனால் பாவிகளா யிருப்பவர்கள் மவுத்தாகிற தற்கு முற்பட துன்யாவிலிருக்கும் போதில் தானே சில அவுலியாக்களுக்கு மிருகசாதியாகத் தோற்றப்படுவார்கள். சில அவுலியாக்களுக்கு மவுத்தானதின் பேரில்தான் தோணுதலாகும். அதினுடைய விகற்பம் எப்படியென்றால் சில ஆரிபூன்களுக்கிடையில் சகலரையும் எழுப்பப்படுகிற விதத்தில் கிலாபு விகற்பம் வந்தது போலாயிருக்கும் அதென்னவானால் சிலர் ரூஹைத்தான் எழுப்பப்படுகிறது. சரீரத்தை எழுப்பப்படுகிறதில்லை யென்றார்கள். சிலர் இவ்விடத்திலிருப்பதுபோல் சரீரத்தையும், ரூஹையும் ஒன்றாகவே எழுப்பப்படுமென்றார்கள். ஆனால் இவர்களுக் கிடையில் முஹக்கிகூன்கள் இரு வகுப்பாரும் அவரவர்கள் கண்டதைச் சொன்னார்கள் என்றார்கள். அதென்னவானால் ரூஹைத்தான் எழுப்பப்படும். சரீரத்தை எழுப்பப்படா தென்று அவர்கள் சொன்னதெல்லாம் துன்யாவில் சரீரத்தில் ரூஹு மறைவாக இருப்பதுபோல் ஆகிறத்தில் சரீரம் ரூஹுல் மறைவாக இருக்கும், ஆகையால் சரீரத்தை அவர்கள் காணாதபடியால் அவ்விதம் சொன்னார் களென்றார்கள். இரண்டையும் எழுப்பப்படுமென்று சொன்னவர்கள் இரண்டையும் கண்டபடியால் அவ்விதம் சொன்னார்கள் என்றார்கள், அப்படிப்போல் துன்யாவிலி ருக்கும்போது சரீரத்துடைய திரையால் ரூஹானிய்யத் தாகிய குணம் மறைந்திருக்கும். அகஸ்ஸுல் கவாஸு களுக்கு அது தோணுதலாகும். சில கவாஸுகளுக்கு அவன் மவுத்தாகி சரீரத்தின் திரை நீங்கி அவனில்



மிகைப்பாகியிருந்த ரூஹானிய்யத்தாகிய குணத்தின்படி ரூபமெடுத்ததின் பின்னால்தான் வெளியாகும்.

ஆகையால் ஹக்கீகத்தில் எவனெவனில் எந்தெந்த மிருகத்தின் குணம் மிகைப்பாக இருந்ததோ அந்த மிருகமாகத்தான்இப்போதையிலுமிருப்பான், இவ்விடத்தில் எந்தக் குணமும் ரூஹில் மறைந்து ரூஹு சரீரத்தில் மறைந்துவிடும். மவுத்தான உடன் அந்தந்த மிகைப்பாகிய குணத்தின்படி ரூஹானது ரூபமெடுத்து இவ்விடத்தில் இருந்த சரீரம் ரூஹில் மறைந்து போகும். ஆனால் பாவிகள் படும்பாடுகள் இவ்விதமிருக்க ஆரீபீன்களுடைய சொல்லை விளங்காமல் இஸ்லாமானவர்களில் தனாஸுகிய்யாக்கள் என்ற ஒரு கூட்டம் அவரவர் செய்த பாவத்துக்குத் தக்கபடி நாயாய், பன்றியாய்,கழுதையாய் இவ்விடத்திலே பிறப்பானென்றும் காபிர்களும் அப்படியே சொல்கிறார்கள். ஆரிபீன்களுடைய சொல்களில் சிலதில் மாற்றி பிறக்கிறது தானென்று தாறுமாறாக சிலர்கள் விளங்கினதை யறிந்து அவர்களை பழித்துத் தாங்கள் அவ்விதம் கருத்துவைக்கவில்லையென்று சொல்லியிருக் கிறார்கள்.

ஆனால், அல்லாவையறிந்த அவுலியாக்களும், பல் (அன்றி) அன்பியாக்களும் தின்னாமலும் திரவியம் தேடா மலும் ஜமாவு செய்யாமலுமா இருந்தார்களென்று நீ கேட்கப்போதும். (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்) இதுகளில் ஒன்றையும் செய்யாமல் பிணம் போலிருந்து செத்துப்போவென்று நான் சொல்லவில்லை. பணங்காசு தேடித்தின்று ஜமாவு செய்யாதிருந்தால் அன்பி யாக்களும் அவுலியாக்களும் எவ்விதம் வெளியாவார்கள். ஆனால் உனக்குச் சரியான அறிவிருந்தால் இவ்விதமான கேள்வியில் தீராண்மையாக மாட்டாய். ஆகிலும் அறிந்து கொள்! றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் களுக்குசேகரமாய்ஒன்பதுநம்பிராட்டிகளிருந்தே இருக்கிறார் கள். சஹாபாக்களிலும், அவுலியாக்களிலும் அனேகர்களும்

மிகுந்த பணங்களைத் தேடியே யிருக்கிறார்கள். ஆனால் இதுகளில் ஷர்உ உடைய வரம்பை கடக்காமல் நிறை வேற்றி வருவதுடன் துன்யாவில் எந்தக் கருமத்தின் பேரில் சஞ்சரித்தாலும் ஆகிறத்தை மறக்காமல் தேட்டமும், நாட்டமும் அதுவே சிந்தையாக இருக்க வேணும். ஆகிறத்தை ஏது காரியம் மறக்கச் செய்யுமோ அவைகளை விட்டு உடனே நீங்கினாலல்லாது ஒடுக்கம் ஈமான் சலாமத்தை ஆதரவு வைப்பது மிகவும் அரிதாகயிருக்கும். ஏனென்றால், எந்த எண்ணத்தில் மனம் கொளுகி யிருந்ததோ அந்த எண்ணத்தின் பேரில் மவுத்தாக்கவும் படும். எழுப்பவும் படுமென்று ஹதீதில் வந்திருக்கிறது.

ஆனால், வெளிரங்கத்தில் கோடையிடி முழங்கும் போல் கலிமாச் சொல்லி மவுத்தானவர்கள் யாதொன்றும் பேசாமல் மவுத்தானவர்களைப்பார்க்க அல்லாஹுத்தஆலா விடத்தில் அப்லலு வரிசை என்று சொல்ல முடியாது. அவரவர்களுடைய கல்பு கொளுகி யிருப்பதில் காரிய மல்லாது வேறில்லை.

றூஹானது சடலத்தை விட்டும் பிரியும்போது எந்த குணம் மிகைப்பாக இருந்ததோ அப்படியே ரூபமெடுத்து விடும், அதற்காகத்தான் ஆரிபீன்களிற் சிலர் அல்லாவை யறிந்தவர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் மாற்றிப் பிறக்கிறதை விட்டொழிய மாட்டார்கள் என்றார்கள். இதுவெல்லாம் மவுத்தானதின் பிற்பாடேயல்லாது திரும்ப துன்யாவில் வந்து பூதங்களாற் சமைந்த தேகமெடுப்ப தில்லை. தாறுமாறாய் விளங்காதே. ஆகையால் முகம் வைத்ததளவில் மீளுகிறேன். இப்போதுசொல்லப்பட்டதால் மனிதத் தன்மையென்பதும் எவ்விடத்திலும் அந்த ரூபம் உருக்குலையாமல் பேதகமாகாதிருப்பதும் அறிவும் பூராய மும் கொண்டல்லாது வேறில்லை.

ஆனால், இன்சானை அறிவு ஒன்றுக்காய்ப் படைக்கப் பட்டதல்லாது வேறில்லை. எப்படியானால் குதிரை கழுதை யோடு சுமை சுமப்பதில் கூட்டாயிருப்பதுடன் இடசாரி,



வலசாரியாலும், அழகிய ரூபத்தாலும் மேலாகியிருக் கிறது. ஆகையால் அந்தத் தன்மையால் குதிரையை, கழுதையைவிட்டுப் பிரிவாகப் படைக்கப்பட்டிருப்பது போல் பிரிவாகவும் அதை மேன்மையாகவும் பாவித்து வருகிறோம். அந்தசாரி முதலாகிய வருணிப்பை அதில் காணப்படா திருந்தா கழுதையுடைய நிலைமையிலாகி விடுவதுடன் இது குதிரையல்ல கழுதையே கழுதை என்றும் சொல்லப் படும்.

அப்படிப்போல் இன்சானானவன் கழுதை, குதிரைக்கு சில காரியத்தில் கூட்டாகி அவனுக்குச் சொந்தமாகிய கருமங்களில் பிரிந்துவிடுகிறான். அவனுக்குச் சொந்தமான கருமந்தான் அல்லாவுக்கு முடுகு தலாக்கப்பட்ட மலாயிக் கத்துகளுடைய வருணிப்பில் நின்றுமுள்ளது, அதற்காகத் தான் இன்சானாகிறவன், மிருக ஜாதியுடைய நிலைமைக் கும் மலாயிக்கத்துகளுடைய நிலைமைக்கும் ஊடாலிருக் கிறானென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதென்னவானால் இன்சானில் ஊண்தீன் பழக்கம் உண்டாகியிருப்பதால் விருட்சாதிகளுக்கு ஒப்பாகிறான். உசும்புதல். ஐயறிவுமிருப் பதால் மிருகத்துக்கு ஒப்பாகிறான். அவனுடைய ரூபம் உயரம் பருப்பத்தால் சுவரில்சித்தரிக்கப்பட்ட கோலத்துக்கு ஒப்பாகிறான். இன்சானிய்யத்தெனும் மனித தன்மையெல் லாம் சகல வஸ்துக்களின் அந்தரங்கங்கள் இன்னதெனத் தெரிகிறதேயல்லாது வேறில்லை.

ஆகையால் இன்சானானவன் தன்னுடைய அகம் புறம் உசும்புதல் ஒடுங்குதல்சகலதையும் அறிவின்பேரிலும், அதின்படிக்குள்ள அமலின் பேரிலும் செவ்வுறுதலாக்கிச் சீராய் நடத்தி வந்தானேயானால் மலாயிக்கத்துகளைக் கொண்டு ஒப்பாகி அவர்களுடனேயே சேர்ந்து சஞ்சாரிக்க வும். இன்னும் மலக்கென்றும், றப்பானிய்யியென்றும் நாயகத் தனத்தளவிற் சேர்க்கப்பட்டவனென்றும் சொல லத்தகும். அப்படியெல்லாமல் திரேகத்தில் இன்பங்களை அனுபவிக்கவும் அதற்குள்ள உபாய தந்திரத்திற்

கருத்தைச் செலுத்திக்கொண்டிருந்தால் மிருகத்துடைய குணங்களையெடுத்து மிருகமாகி அல்லது ஷைத்தானுடைய குணமெடுத்து, ஹகீகத்தில் அததாகயிருக்கும் வேளை மவுத்து வந்து விட்டால் றூஹு அந்த ஹகீகத்தாக ரூபமெடுத்து விடும். வல்இயாது பில்லாஹ் அல்லாவிடத்தில் கார்மானம் தேடுகிறேன்.

நபுஸே! ஹுஷ்யார் ஹுஷ்யார் நபுஸே! உணர்ச்சையாயிரு. ஆகையால் இன்சான் இன்சானுகயிருப்பது அறிவு கொண்டுதான் என்பது அக்குலால் நல்லாகத் தோனுதலாகிவிட்டது போல், அல்லாஹுத்தஆலா சகலரையும் படைத்ததும் அன்பியாக்களை அனுப்பினதும். வேதங்களை இறக்கினதும் ஆதம் அலைஹிஸ் ஸலாம் நாள் முதல் இதுநாள்வரைக் கோர்வை செய்பவர்களுடைய கோர்வையும், உபதேசிப்பவர்களுடைய உபதேசமும், முன்னுலே நோட்டமிடுபவர்கள் நோட்டமிடுவதும், அன்னை சுற்றம் கிளை கோத்திரங்களை இழந்து தேசாந்திரிகளாய் காடு வனந்திரங்கள் சென்று சருகு முதலானவைகளைப் புசித்து இரவாய்ப் பகலாய்ப் தூக்கமுதலாகிய சுகண்டிகளை யிழப்பதும், இராஜாதி ராஜாக்கள் இல்லறத்தை இழப்பதும், அறிவொன்றுக்கல்லாது வேறில்லை என்பதும், முஸ்லிம் காபிர் சகலரும் ஒற்றுமையாய்ச் சொல்வதாலும் சகலருக்கும் அதுகொண்டு, இல்முல்யக்கீன் திட்டமான அறிவு உண்டாகி இருப்பதாலும். ஹக்குக்கும், கல்குக்கும் அதைப் பார்க்கச் சிறப்பான வர்ணிப்பு ஒன்றுமில்லாததாலும், அதனுடைய வரிசையில் வந்திருக்கிற குறுஆன் ஹதீதுகளையும் மற்றும் வேதாந்தம் சித்தாந்தங்களையுமெடுத்து உனக்கு அத்தாட்சி காட்டவேண்டியதில்லை.

ஆனல் நபுஸே! உனக்குச் சுருக்கமாக ஒரு உபதேசம் சொல்லுகிறேன் எனது மாதா பிதாக்களிருவரும் எனக்குக் கல்வியை கற்பிக்க முயற்சித்தார்கள். நீண்டகாலம் நான் முரண்டு பண்ணினேன். அப்பாலதிற் பூணுதலாகியும் நாளிதுவரை நான் நாடியிருக்கிற அறிவில் ஓர்



அணுவளவும் நான் அறியாதிருந்தும் அந்த அறிவுக்கு பகரமாய் இந்த உலக முழுவதையும் ஏக சக்கரவர்த்தியாய் ஒரு குடையில் ஆளும்படி எனக்குக் கொடுக்கப்பட்டாலும் பல் மேலும் எட்டு சொர்க்கலோகங்களையும் கொடுக்கப் பட்டாலும் இந்த அறிவைப் பார்க்கிலும் இவைகளைத் தெரிந்து கொள்வது ஷிர்க்கு பெரும் பாவமென்றும் மருட்டுதலென்றும், மடத்தனமென்றும் திட்டவட்டமான அறிவு எனக்குண்டாகி யிருப்பதுடன் உன்னுடைய மயக்கத்தாலும் நான்கு சத்துருக்கள் செய்யும் சதிமானத்தாலும், மோசத்தாலும், மேலெண்ணத்தாலும் நான் மோசம்போகிறேனல்லாது அறிவுடைய மேலாம்பரம் உனக்கு தெரியாததல்ல. உணர்ச்சை பெற்றுக்கொள்!

ஆனல் அறிவுடைய பாரதூரம் துலாம்பரமாகி விட்டது. அறிவு அறிவென்று சொல்லுகிறுர்கள். அறிவு என்பதின்னதென்று நிச்சயமாக்குகிறுர்களில்லை. உலமாக்ளென்று பேர்பெற்றவர்களும் ஒரே சொல்லாகச் சொல்லவில்லை.

ஆகையாலறிந்து கொள்! இல்மாகிறது அல்லாவுடைய ஒளிவுகளில் நின்றுமுள்ள ஒளிவாகயிருக்கும், அதை அவனுடைய அடியார்களில் நின்றும் தான் நாடியவர்களுடைய கல்பில் வைத்துச் சோதிப் பிரகாசமாய் ஏகமாய் எரிக்கச் செய்கிறுன், அந்த ஒளிவினல் சகல வஸ்துவின் அந்தரங்கத்தின் பேரில் உதயமாகிப் பார்க்கும் படியாய் அடிமையுடைய உள்ளத்தில் ஆண்டவன் நிறுத்துகிற ஓர் பொருளாக யிருக்கும்.

அதாகிறது வெளிப்பார்வைக்குச் சூரியனுடைய பிரபை எப்படி இருக்கிறதோ. அப்படிப்போல் அகப்பார்வைக்கு இல்முடைய பிரகாசம் அதென்னவானுலும் சூரியனில்லாதிருந்தால் வெளிக்கண் யாதொன்றையும் பார்க்கமாட்டாது. இரவு காலத்திலானுலும் சூரியனுடைய சொச்ச ஒளிவினல் பார்வை தெரியுமல்லாது வேறில்லை.

சூரியனுடைய பிரகாசம் செல்லாத சிறிய கட்டுமானங்களில் கூரிய இருளில் நேத்திரங்களை விழித்துப் பார்த்தாயாகில் கண்குருடாய் ஒன்றும் தோணுதிருப்பதை அறிவாய். ஆனால் சந்திரன் முதலாகிய மற்ற தீபங்களுடைய பிரகாசத்துக்கும் சூரியன் தான் அஸலேயல்லாது வேறில்லை.

அப்படிப்போல் அகப்பார்வை இல்மெனும் சூரியனால் தான் சகல வஸ்துவின் அந்தரங்கத்தை அகக்கண் காணுமல்லாது வேறில்லை. ஆனால் இப்போது வருவிக்கப் பட்டதால் இல்மென்கிறது. அல்லாவுடைய ஒளிவில் நின்று முள்ளதென்றால் எல்லோருக்கும் அவரவர் மட்டுக்கு ஒருவருக்கு மிகுதமாயும், சிலருக்குக் கொஞ்சமாயும் அறிவு இருக்கிறதென்று நீ எண்ணுகிறாய். அப்படியெண்ணாதே. ஏனென்றால், சிரைக்கத் தெரிவதும் ஒரு அறிவு தான். அந்த அறிவை அதில் நாடப்பட்டதல்லை. ஆகிலும் அது அறிவாகவுமாட்டாது. அதையெல்லாம் அறிவென்று சொல்கிறதானால் மிருக ஜாதி சில அறிவில் இன்சானைப் பார்க்கிலும் ஆயிரமாயிர மடங்கு அதிக அறிவுடையதாகயிருக்கிறது. ஏனென்றால், இன்சான் கைத்தொழில் மிகவும் தந்திரமாகச் செய்கிறானென்றால். கறையான் தேன்குளவி முதலாகிய சில புழு பூச்சிகளும், தூக்கணத்தான் குருவி முதலாகிய சில பட்சிகளும் செய்வதுபோல் செய்யமாட்டான். ஆகிலும், குரங்குக்குள்ள கூர்மையாவது மாட்டுக்குள்ள மதியாவது மனிதனுக்கில்லை என்பது நன்றாய்த் தெரிய வருகிறது.

ஐயறிவுக்குத் தோற்றாத கால நிகழ்ச்சி வேளை நிகழ்ச்சியிலும், காகம் கரிக்குருவி கோட்டான் கிள்ளை சேவல் செம்போத்து முதலானது இன்சானுக்குஉஸ்தாதாக விருக்கிறது. சத்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் என்ற ஐயறிவிலும் அதுவே மிகைப்பாக இருக்கிறது. மொத்தத் தொகையிலாராய்வுடன் ஆலோசிக்குமிடத்தில் இல்வாழ்க்கையிலின்பத்தையும் இச்சையையும் நிறைவேற்றுவதற்குள்ள சகல விஷயங்களிலும் இன்சானைப் பார்க்க விலங்கினமே மேலானதாயிருக்கிறது.



ஆகையால் மாண்டு பிழைத்து மானிடனாய் ஜென்ம மெடுக்கு மகிமையை அறிவது ஒன்றேயல்லாது வேறில்லை. ஆனதால் வார்த்தைகளால் மெறுட்டி மறுட்டி மதிமயங்கியும், மயக்கியும் அறிவாளிகளென்ற பேர்பெற்று குர்ஆன் ஹதீது முதலாகிய சகல அறிவுகளும் தெரிந்து மஷ்ரிக்குத்தொடுத்து மஃரிபுவரைக் கீர்த்தியாகியிருப்பவர்களில் மிகுத்தவர்களும் அந்த ஒளிவுக்குக் குறுக்கிட்டு அந்த அறிவுகளைத் தெரிந்திருப்பார்களென்றெண்ணாதே, அந்த அறிவு தூரந்தேபோய்விட்டது. கொஞ்சத்தைத்தவிர. அந்த அறிவையுடையவர்களை கண் படைத்தவர்கள் காண்பார்களல்லாது முகத்திலே இரண்டு புண்படைத்தவர்களால் காணக் கூடாது.

இக்காலத்தில் உலமாக்களென்று பேர்பெற்றவர்களில் மிகுந்தவர்களும் சரியான அறிவுடையவர்களல்லவென்று நான் சொல்வது உனக்கு அதிகத் தூரமாகயிருக்கும். ஏனென்றால், அவர்கள் தாங்கள் உஷாராகாமலும், நீயும் மேல்ப்பூச்சான அவர்கள் சொல்லையே கேட்டு அவர்களையே கனமாகக்கண்டு உலமாக்களுடைய வரிசையில் வந்திருக்கிற பாரதூரங்கொண்ட ஹதீதுகளையெல்லாம் அவர்களிலேயே வைத்துப்பார்த்து உன்னுடைய இஃத்திக்காதை அதிகப்படுத்திப்போட்டாய். அப்படியானால் அவர்களில் சில சோதனையைப் பார். எல்லாத்தையும் விட்டுப்போட்டு ஈமானுடைய பாபில் அல்லாவைக்கொண்டு ஈமான் கொள்ளவேணு மென்பார்கள். ஆனால் அல்லாவென்றது ஏதாயிருக்குமென்றால், நம்முடைய கருத்தில் அல்லது காபிருடைய கருத்திலாவது ஊசாடாமலிருக்குதே. அதையே திரும்பவும் சொல்வார்கள். எப்படியானால் அல்லா கட்டையனல்ல, நெட்டையனல்ல, கருப்பல்ல என்பார்கள். இந்தச் சொல்லுக்கு முற்பட நம்முடைய கருத்து மாற்றமாக எண்ணியிருக்கவேயில்லை,

ஆகிலும் இந்த விஷயத்தில் எவ்வளவு பேசினாலும் ஒரு குறிப்பைக் காட்டாத படியால் இதைவிட்டுவிடுவோம்.

அப்பால் மலாயிக்கத்துகளென்பது ஏதென்றுல், அதிலும் அவர்கள் சொல்லித் தருகிறது மூடலாகயிருக்கிறதல்லாது வேறில்லே. அப்பால் வேதம் என்பது ஏதென்றுல், நாம் தட்டழிவதுபோல் தட்டழிகிருர்கள். அப்பால் றசூல்மார்கள் முதல் சகலதிலும் அப்படியே ஆகிவிடுகிருர்கள், அப்பால் இஸ்லாமுடைய காரியத்தில் கேட்டாலும் அப்படியேயிருக் கிருர்கள். இன்னமும்ஏதாவது இது என்ன காரணத்துக்காக பறுளாக்கப்பட்டது? ஹறுமாக்கப்பட்டது? இதுக்கு 'சிர்று' என்னவென்றுல், இதுவெல்லாம் வந்தபடி வணங்கக் கடமையேயல்லாது இவைகளுக்கெல்லாம் காரணம் கேட்பது மடத்தன மென்கிருர்கள். அவர்கள் சொல்வது ஹக்கான சொல்லாகயிருந்தாலும் விளங்குகிறவர்களும் விளங்காதவர்களுமுண்டு. விளங்கியதனுல் ஈமானுடைய 'நூறு' அதிகமாகவும் போதும் அப்படியிருக்க அந்தக் கேள்வியின் பாபை அடைத்துப் போடுகிருர்கள். அதிலும் தங்களுக்குத் தெரிந்தால் அவ்விதம் சொல்லமாட்டார்கள். கூடியவரை இழுத்துப்போட்டாவது சொல்லியே தீர்த்துப் போடுவார்கள்.

ஏனென்றுல், வாய் மூடியிருக்க வேண்டிய பாபை அவர்கள் திறந்து தௌஹீதென்றும், மஃரிபா வென்றும் ஹக்காயிக்கு என்றும் கங்கு கரையில்லாமல் பேசி கால் சருகச் செய்வது மல்லாமல் தாங்களும் காரியபாகம் தெரியாமல் சருகி விடுகிருர்கள். ஆகையால் இல்மென் பதும். அறிவாளிகளென்பதும்: அல்லாவை யறிவதும் அறிந்தவர்களுமல்லாது மற்ற அறிவெல்லாம் வீணறிவே யல்லாது வேறில்லே.

இதற்காகத்தான் சாலிஹானவர்களில் ஒருவர் சொல்கிருர் : குறுஆன் ஹதீது முதலானதுகளே மிகுதமாய் ஓதிய ஆலிமாகிய ஒருசினேகிதர் எனக்கு இருந்தார். அவர் மவுத்தானதின் பேரில் இருளடைந்த ஓர் காம்பரையில் அவரிருக்கப் பார்த்து நீர் மிகுந்த இல்மை உடையவராக இருந்தீரே, அல்லாஹுத்தஆலா உமக்கென்ன பிரசண்டு (அன்பளிப்பு) செய்தானென்று கேட்டபோது அல்லா



என்னே கடிந்துறுக்கி துன்யாவைவிட்டு என்னே அறியாமல் நீ புறப்பட்டாயல்லவா என்று சொன்னுனென்ருர். லாஹிர் வெளிரங்கமான இல்மில் எவ்வளவு மேலிட்டாலும் அல்லாவை அறியக்கூடாது. ஆகிலும் பறுளு ஷர்த்துகளே அறிகிற மட்டுக்கு அதில் படித்தால் போதும். அதற்கு உலமாக்களால் அறபுத் தமிழில் கோர்வையாக்கப்பட்டிருக் கிறது. போதும், போதும் இமாம்கஸ்ஸாலி றஹிமஹுல்லா போலொத்தவர்களில் அனேகர்களும் லாஹிறுடைய இல்மில் காலத்தைப் பழுதாக்கிப் போட்டதைப் பற்றி மிகவும் கவலேயடைந்தார்கள், தீர்மானம் அபூபக்கரில் பாஸகானிய்யி என்ற புக்கருக்களிலுள்ளவர்களே யடுத்த தின் பேரில் அல்லாவை அறிகிற இல்மின் பேரில் தெண்டித்தார்கள். இன்னம் பகுருர்ராஸீ றஹிம ஹுல்லாவென்ற இமாம் லாஹிறுடைய இல்மில் கங்குகரையில்லாச் சமுத்திரம் போலாகியும் முஹயித்தீனிப்னுல் அறபிய்யி றலியல்லாஹு அன்ஹு, பகுருர்ராஸியை குறைத்தலாய்ப் பேசி மிகுந்த வஸிய்யத் தெல்லாம் செய்திருக்கிருர்கள். எத்தனேயோ பேர்கள் காலமெல்லாம் லாஹிறுடைய இல்மில் வாழ்நாட்களேத் தொலேத்ததின் பேரில் அழுது சலித்து இருக்கிருர்கள்.

இவ்வளவு மட்டிலுனக்குப் போதும், ஆகிலும் அறிவில்லாமல் வணக்கம்கூடவே மாட்டாது. அறிவில்லாத வனுடைய வணக்கமும், காபிருடைய வணக்கமும் தட்டப் பட்டதாக யிருக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் அறிவைப் படிப்பதெல்லாம் வணங்கவேயல்லாது வேறில்லே, அதற்காகத்தான்,

**வமா கலக்த்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லியஃபுதூன்** என்ற ஆயத்துக்கு ஜின்னேயும் மனுவையும் என்னே வணங்கவே யொழியப் படைக்க வில்லே என்ற மஃனயிருக்க **ஐ லியஃரிபூனீ** என்னே அறியவே யொழியப் படைக்கவில்லேயென்று இப்னு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு தப்ஸீர் செய்திருக்

கிறார்கள். ஏனென்றால், வணக்கமென்பது அடிபணிகிறது. ஒரு வஸ்துவின் வலுப்பத்தையும், மேலாம் பரத்தையும் அறியாமல எவ்விதம் பணியக்கூடும்.

இன்னமும் அவர்கள் இவ்விதம் தப்ஸீரு செய்ததே சரி என்று வேறே ஆயத்தும் ஹதீது குதுசியிலும் வந்திருக்கிறது. ஆகையால், அறிவும் அதின்படி வணங்கவும் வேணும் இது இரண்டையும் தவிர உள்ளது இன்சானுக்கு அஸ்லாகியக் குணமேயில்லையென்று திட்டவட்டமாய்த் தோணுதலாகி விட்டது.

ஆனால் உவமையில், இல்மாகிறது மரம் போலும். இபாதத்தாகிறது கனிபோலு மென்றும், அனேக அனேக உவமானங்களைச் சோடித்துச் சொல்லலாம். இது இரண்டிலுமிகுந்தச் சிறப்பு பொருந்தினது இல்முதான். ஏனென்றால், அது அஸ்லாகயிருப்பதால். ஆனால் காயாத மரத்துக்குச் சிறப்பில்லை, இல்முதான் சிறப்புடையதென்ப துக்கு அத்தாட்சி வேண்டியதில்லை. ஏனென்றால், இபாதத்துக்கு வகுத்து நேரமுண்டும். இல்முக்கு வகுத்து இல்லை. அணையாடைப்பிள்ளையாயிருப்பது தொடுத்து கபுறில் புகுதும் வரை இல்முக்கு வகுத்து உண்டென்றும் லாஹிர் ஹுக்கமாக்கள் சொல்லியிருந்தாலும் இல்முக்கும் மஃரிபாவுக்கும் மவுத்துக்குப்பின்னாலும் தீர்ச்சையில்லை.

இல்மைப் படிப்பதால் இபாதத்துக்கு இடஞ்சலில்லாமலும், இபாதத்துச் செய்வதால் இல்முக்கு இடஞ்சலில்லாமலும் இருக்க வேணும். ஆனால் இவ்வளவு மட்டில் நீளமாக இல்மை படிக்க வேணுமென்று சொன்னதால் நீ உசாராகி அறிவையுண்டாக்கிக்கொள்ளும் வழி தெரியாமல் ஏங்கி மயங்குகிறாய். இன்னமும் உலமாக்களுடைய மஜ்லிஸில் போய் ஹாலிராகி அதபுடன் கால்மடித்துக் கேட்கவேணுமென்றும் எண்ணுகிறாய். ஆனால் இவர்களிடம் நீ போய் கேட்டவுடன் கிதாபு வீட்டிலிருக்கிறது. நான் ஹதீது சொல்ல நினைத்து வராதபடியால் கொண்டு வரவில்லை. ஆகையால், நாளை கொண்டு வந்து சொல்கிறேன் என்கிறார்.

அல்லது நீ கேட்ட கேள்வியானது, தீனில் யாவர் மீதினும் அறிய வேண்டிய **பர்ளு அய்னாக** இருக்க அவருடைய சிந்தையில் ஒரு போதிலும் ஊசாடாத படியாலும், நீ கேட்டதின் பேரிலாவது நாமும் தெரியவேணுமேயென்ற எண்ணமுமில்லாமல், நல்லது கிதாபைப்பார்த்துச் சொல்லுகிறேன் என்றதில் அவருக்குத் தட்டுப்படாமல் அல்லது தெரியாமலிருந்ததிலும் வேறேயொரு இல்மாளியிடம் கேட்டுப் படிக்கிறாருமில்லை.

ஆகையால் கிதாபில் இல்மிருக்க அதைப் பார்த்துச் சொல்பவர் இல்மாளியாக மாட்டார். தவிரவும் தான் படிக்கவேணுமென்பது தனக்குக் தெரியாதவர் இடம் இல்மைப்படிக்கிறது எவ்விதம்?

ஆகையால், அறிந்த நாயகமார்களிருப்பார்களெங்கிற இஃத்திக்காது நிர்ணயத்துடன் உலக முழுது மிவ்விதமே மயங்கி நபியுல்லா வுணர்ச்சைப் பூட்டிக் குறிப்பிட்டுச் சொன்ன நாள் திட்ட வட்டமாய் வருஷம் ஆயிரத்துக்கு முற்படவே வந்து விட்டபடியால் நம்மிலே நாம் யோசிக்க வேணுமல்லாது, உலமாக்களென்று பேர் பெற்று அந்தரங்கத்தில் ஒன்று மில்லாதவர்களிடம் நாம் செல்லாதிருப்போமாகவும்.

ஆண்டவர்கள் சொன்னதாவது இஸ்லாம் நவமாய் ஆரு மற்றப் பரதேசிபோல் வெளியாச்சுது. இனிமேலும் அப்படித் தானாகி விடுமென்றார்கள். ஆகையால் இல்மில் யோசிப்போம். முதலாவது நம்முடைய ஊசலாட்டத்திலுண்டாகிற தென்னவென்றால், ஆராலும் அளவிடக் கூடாத அற்புதமாய் அழகு பொருந்திய இடைவிடா இரகசியங்களைப் பொதிந்த இந்த ரூபம் எவ்வித மெடுத்தோம், வேறேயொரு வஸ்துவின் அதிகாரம் நம்மிற்

செல்லாமல் நாமாகவே ஜீவித்திருக்கிருமா? அல்லது இன்னமொரு வஸ்துவின் வருதிப்படிதான் நிலே நிற்கிரேமா? என்று யோசித்த உடன் வருதிப்படிதான் என்பது நிச்சயமாகிறது.

ஏனென்ருல், உதிர்ந்து போகிற ஒரு ரோமத்தை நிறுத்தவும், அழகுக்காய் விரும்பிய ஒரு ரோமத்தைத் தோற்றச் செய்யவும் வேண்டாத கொட்டாவி திடுக்கம் துளும்புதல் போலொத்ததை விலக்கவும் நினேக்க வேண்டியதை நினேக்கவும் வேண்டாததை விட்டு மறுக்கவும் நம்மால் முடியவில்லே.

அப்படியாளுல் இந்த அதிகாரம் நம்மில் அந்த வஸ்துவுக்கு இப்போது இடையிற் குறுக்கிட்டதா? அல்லது ஆதியிலுள்ளதாவென ஆராயுமிடத்தில் நமக்கு இப்போது ❖ முப்பத்திநாலு பிராயம் நிரப்பமாகி நடுவயதாகி யிருப்தால் இது தொடுத்து நம்முடைய தோற்றத்துக்கு ஆதியெதுவோ அதுவரை ஆராய்ந்து பார்ப்போமாக. நாமிதற்கு மூன்று வருஷத்துக்கு முன் வாலிபமாகவும், அதற்கு முன் சிசுவாயும், பாலகளுகயும், மதலேயாயும், அப்பால் கெற்பக் குவளறையில் தசைக்கட்டியா யிரத்தக் கட்டியாய் நுத்துஃபாவாய் இந்திரியமாய் அப்படியே பிதாவின் சிரசிலும், அப்பால் தந்தை, தாய் புசித்த பழவர்க்கம், தளவர்க்கம் மாமிசவர்க்கமாய் அதற்குண்டான சுவையாயும், நிறமாயும், சத்தாயும், அதனதின் குணமான குளிர்ச்சி, சூடு, சீதளம், வரட்சி, வாதபித்த சேத்துமமென்ற நாடிக்குணங்களாயும், மாமிசவர்க்க முதலானதுக்கு ஏதேது குணமுண்டோ அதுவாயும் பிருதவி. அப்பு, தேய்வு, வாய்வு. ஆகாயம் என்ற பூதங்களாயும், அதற்கு

❖ இதைக் கோர்வை செய்தவருக்கு 34 வயதாகி விட்டதால் இங்ஙனம் அதைக் குறிப்பிடப்பட்டது. மனிதனுக்கு 17 பிராயம் வரை சிறுபிள்ளே என்றும், அதுமுதல் 34 வரை வாலிபமென்றும் அதுமுதல் 60 வரை நடுவயதென்றும், அதுமுதல் கடைசிவரை விருத்தாப்பியமென்றும் சொல்லப்படுகிறது.



மேல் சொல்லப்படுகிறபடி ஒளிவாயும், அதற்கப்பால் சொல்லேது பொருளேதென்று காட்டொண்ணு அந்தரங்கமாயும் இருப்பதில் எவ்விதமும் சகலதுக்கும் ஆதியான ஒன்று வேண்டியதாகவே யிருக்குதென்ருல் தீர்மானம் முற்ருது.

அப்படியொன்றில்லே; நாமாக படிப்படியாயிறங்கி வருகிரேமென்ருல் வித்தில்லா விருட்சமும். குலாலனில்லா குடமும் தச்சில்லா மாளிகையு முண்டாகுதென்றதாகிறது, நாம் வந்த வழி நமக்குத் தெரியாதிருந்த போதிலும் நம்முடைய பார்வையிலாவது, அபிப்பிராயத்திலாவது அடி மூலமில்லாமலொன்றுண்டாகக் காணவுமில்லே, தோற்றவுமில்லே. அப்படிஎல்லாம்நம்முடைய(**அக்லுக்கு**) அத்தாட்சி சொன்ளுலும் ஏத்துக்கொள்ளாது.

ஏனென்ருல், ஒன்றே சகலதுக்கும் அடி மூலமாயும். ஆதியாயும் சொன்ளுல் அது எவ்வித முண்டாச்சுதென்றும் அடிமூலமொன்றில்லேயென்ருல், மற்றது எப்படி யுண்டாச்சுதென்றும் இரண்டும் பேசாமல் தட்டழிந்து மதி மயங்கிப் பொறிகலங்கி நிற்கும் வேளை றசூல்மார்களென்ற சிலர்களால் சகலதுக்கு மொரு ஆதி உண்டாகியே யிருக்குதென்றும், அந்த ஆதி என்ற ஒரு வஸ்துவானது எங்களுடன் பேச நாங்கள் கேட்கிரேமென்றும், அதிற் சிலதை வேதமென்றும், இன்னம் அந்த அக்லானது கண்டிருப்பதற்கும், கேட்டிருப்பதற்கும் மாற்றமாய்ச் சில திருஷ்டாந்தரமான அற்புதங்களேயவர்கள் செய்தும், நாங்கள் சொல்கிறபடி நீ நடப்பாயாகில் நாங்கள் சொன்ன உண்மையை யறிவாயென்றும் சொல்லும்போது நீதப்படி ஆதியொரு வஸ்து வுண்டாகியிருக்குதென்ற கட்சியே வலுவாகிறது,

ஏனென்ருல், இரண்டும் பேசாமலிருந்த அக்குலின் பேரில் அதிகாரம் செலுத்தி இன்னவிதமான நம்புதலில் ஆயிருவென்று நிறுத்தாட்ட வந்தவரும் நிஜஸ்தராக

யிருப்பதாலும், இரண்டாலொருத் தீர்ப்புக் கிடைக்கவேணு
மென்று வழிபார்த்து இருந்தபடியால் அவர்கள்சொன்னதே
ஹக்கு உண்மையென்றும் நிச்சயித்தோம்.

ஆனுல், றஸூல்மார்கள் அந்தக் காலத்திலிருந்தார்
களல்லாது இப்போது இருக்கிருர்களா? அல்லது
றஸூல்மார்களை இன்னுரின்ன விதமென்று அணுவள
வாவது ஊசாட்டத்திலும் உண்டாகாமலும், இந்த
குறுஆன் முதலிய வேதங்களின்னதென்றும், அறவே
யறியாமலிருக்கிற காபிரானவர்களும் சகலதுக்கும் மூலப்
பொருளாய் முதன்மையாய் ஒரு வஸ்து உண்டாகியே
யிருக்கிறதென்றும், வேதங்கள் நாலு உண்டாகியேயிருக்
கிறதென்றும் எவ்விதம் சொல்கிருர்களென்று நீ கேட்கப்
போதும். ஆனுலுன்னுடைய குருட்டுத்தனத்தாலவ்விதம்
கேட்டாயல்லாது றஸூல்மார்கள் வந்து நமக்குத் தீர்ப்புச்
செய்தார்களென்றதில் வெளியிலவர்கள் ரூபமெடுத்து வந்த
தையும் அவர்கள் காலத்திலவர்கள் வாக்கால் திருவுளம்
பற்றியதையும் யோசித்து ஒருவரையொருவர்த் தொடர்வ
தென்னும், தக்லீதாகிய ஈமானையுண்டாக்கிக் கொள்ள
நாடுகிருயோ அதைவிட்டுவிடு. நான் சொல்வதொன்றை
யாவது உந்தன்னை விட்டகலாமல் அவர்கள் தாங்களே
குறுஆனுகை யிருந்த ஆரிபீன்களுடைய சொல்லளவில்
ஆராய்வைச் செலுத்துவதுடன் அதிலும் உன்னுடைய
கருத்து கொண்டு கடத்தேற வேணுமல்லாது. சொல்கிருர்
களே ஒப்புக்கொள்ளத்தானே வேணுமென்ற கலக்கத்தை
விட்டுவிடு.

அதென்னவானுல், ***(அல்மௌஜூதாத்து கலிமாத்துல்லா அல்வாரித்தாத்து ருஸுல்லா)***
உண்டாக்கப்பட்டவை களடங்கலும் அல்லாஹ் உடைய
கலிமாக்களென்னும் வார்த்தைகளாயிருக்கும். நினைக்காமல்,
யோசிக்காமல் கருத்தில் வருகிற நல்ல எண்ணங்களடங்
கலும் அல்லாஹ் உடைய தூதர்களாகயிருக்கும் என்று
சொல்லப்பட்டிருக்கிறது.



ஆகையால், நாம் தானே சமைந்தோமா அல்லது
ஒரு வஸ்துவிலிருந்து நம்மையுண்டு பண்ணினதாவென்று
யோசித்துக்கொண்டிருக்கும்போது இந்த எண்ணங்களை
யடக்கியொடுக்கி அல்லா ஒருவனிருந்து தானுண்டு
பண்ணுகிருனென்று கருத்தில் வம்பாய் வருகிறவைகளா
யிருக்கிறதை றஸூல்மார்களென்று சொல்லப்படுகிறது,
இவ்விதம் சொல்லப்பட்டதால் வெளியில் றஸூல்மார்களி
ருக்கிருர்களா அல்லவா என்று நீ எண்ணுகிறதாகத்
தோணப்படுகிறது. ***(அஸ்தக் பிறுல்லா)***

உனக்கு நான் இந்தச் சொல்லை வெளிப்படுத்தின
தெல்லாம் றஸூல் மார்களுடைய தகுதியையும்.
பாரதூரத்தையும் அதிகமாக்கி அவர்களைக்கொண்டு
ஈமானை அதிகப்படுத்தவேயல்லாது வேறில்லை. முஸ்லிம்
காபிர் சகலருடைய கல்பிலும் அக்குலின் பேரில் தீர்ப்புச்
செய்கிற நல்வழியில் சேர்ப்பி வைக்கிற நீதமாகிய
நல்ல எண்ணம் எப்போதும் அடந்தேறலாக வருகிற
துடன் அதனளவிற் கூர்ந்து யோசிக்காமல் காபிர்கள்.
குபுரிலும் முஸ்லிமானவர்களில் மிகுத்தவர்களும் தங்கள்
மருட்டதலிலாகி விடுகிருர்கள். காபிர் கூர்ந்துயோசித்தால்
முஸ்லிமாகி நேர்வழி பெறுகிருன். முஸ்லிம் இபாதாத்து
முதலானவைகளை அதிகப்படுத்துகிருன்.

ஆகையால், ***(ஆலம் கைபில்)*** மறைவான ஆலத்தில்
அவர்கள் தான் அவ்விதம் வெளியாகியிருப்பதும் ***(ஆலம்
ஷஹாதாவிலும்)*** அவர்கள்தான் வெளியாகி நேர்வழியில்
அழைக்கிறதும் என்று உணர்ச்சை பெறுவதுடன் இந்த
ஒரு அஸ்லை நல்லாக ஆராய்ந்தாயாகில் மிகுத்த இல்மும்
உனக்கு வெளியாகும். ஹக்கீகத்தில் அக்குலுக்குத்
தீர்ப்புச் செய்பவர்கள் அவர்களாயிருப்பதுபோல் லாஹிரி
லும் மனிதப் பண்பான குணமெடுத்து வந்து அவர்களே
தீர்ப்புச் செய்வார்கள்.

ஆராய்ந்து பார்! ஒருபோது அல்லா படைத்ததில்
முந்தினது அக்குலென்றும், ஒருபோது அல்லாபடைத்ததில்

முந்தினது கலமென்றும், ஒருபோது (ஜாபிரே) அல்லா படைத்ததில், முந்தினது உம்முடைய நபியுடைய ரூஹென்றும், மூன்று ஹதிலும் மூன்று விதமாகச் சொல்லி யிருப்பதும் முருது ஒன்றேயல்லாது வேறில்லை. ஆனால் அல்லாவுடைய வஹ்தானிய்யத்தைத் தரிபடுத்தி வைக்கிற தில் இரண்டுக்கிடையில் ஆமென்றும், அல்லவென்றும் சொல்லாமல் மயங்கினது அக்குலுல் மஆஷேயல்லாது வேறில்லை. ஏனென்றால், அக்குலாகிறது. அக்குலுல் அவ்வலென்றும். அக்குலுல் குல்லென்றும், அக்குலுல் மஆஷென்றும் மூன்று வகையாயிருக்கும்.

அல்லா படைத்ததில் முந்தினது, அக்குலென்றதில் அதுகொண்டு முருது, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமில் நின்றும், ஜிப்ரீலுடைய அஸ்லானதால் நீதமாக அல்லா ஒருவனிருக்கிறானே வென்று சிந்தையில் வருகிறது. அதின் பிறத்திலுள்ளதாகவும் அல்லா ஒருவனென்று வஹ்தானிய யத்தாக்கிறதுக்கும் ஈமான் கொள்ளவும், தீர்ப்பு சொல்கிறது. றசூலுடைய புறத்தில் நின்று முள்ளதேயல்லாது வேறில்லை. முந்தி படைத்த தென்றது அக்குலுல் அவ்வலை நாடப்பட்டதாகயிருக்கும். அக்குலுல் குல்லென்றது அதற்கு இரண்டாம்படியிலும் அக்குலுல் மஆஷீ யென்றது மூன்றாவதாயும் அதுதான் பலவிதமான உத்தேசத்தையும் பொய்யான ஊசாட்டங் களையும் கொண்டு வருகிறது. ஆனால் இந்த மூன்றும் காரியந்தன்னில் ஒன்றேயல்லாது வேறில்லை. இதின் விபரங்களைப் பின் விபரிக்கப்படும்.

இன்சானாய் பிறக்கும்போதே அல்லா ஒருவனுண்டு மென்றும் அவனுடைய வஹ்தானிய்யத்தைத் தரிப்படுத் திப் பிறப்பதும் தவிர, மூமின் காபிர் சகலரும் அல்லா வெனும் பராபர வஸ்துவாகிய கடவுளென்றொருவனி ருக்கிறானென்றே நிச்சயித்திருக்கிறார்கள், அந்த எண்ணம் வாரித்தாதென்னும் றசூல்மார்களல்லாது வேறில்லை. இதற்காகத்தான் றசூல்மார்களை அல்லா ஒருவனுண்டு



மென்று அறிவிக்கிறதற்காக அனுப்பப்படவில்லை, ஆனால் உண்டாயிருக்கிறானென்ற உறுதிப்பாடு அவர்கள் புறத் தாலே கல்பில் உண்டாகியிருக்கிற எண்ணம் பலவிதமாய்க் குலைந்து போகாமல் அந்த எண்ணத்தைத் தரிபடுத்தி தௌஹீதென்னும் ஓர்மைப்படுத்தி வணங்க வேண்டியே அழைக்க வந்தார்கள்.

அதற்காகத்தான் குர்ஆனில் முஹம்மதே! அந்த கல்குகளிடத்தில் அவர்களைப் படைத்ததாரெனக் கேட்ட போதில் அல்லாவென்று சொல்லுகிறார்கள் என்றும் அல்லாஹுத் தஆலா மனிதர்களை யாதொன்றின், பேரிலுண்டு பண்ணியிருக்கிறானே அந்தப் பிறவிக் குணத்தையே பூண்டுக் கொள்ளுங்கள், அல்லா படைத்த விதத்தை பதல் செய்யக்கூடாது. அதுவே நிலைபாடான மார்க்கம், ஆகிலும் மனிதர்களில் மிகுந்தவர்களும் அறிய மாட்டாரென்றும், இன்னு மிகுந்த இடத்திலும் முஹம்மதே! நீர்சகலருக்கும் ஞாபகத்தையும், நினைப்பையும் உண்டாக்குமென்றும், இப்படிப்போல் அனேக ஆயத்து களும் இன்னும்ஏதோதிரவியங்களைசேகரிக்கவும்சகலரையும் அடக்கி அரசாண்டு தான் பெரியவரென்று சகலரும்பணிய எண்ணங் கொள்கிறாரென்றும், குறைஷி காபிர்கள் எண்ணி நபியுல்லாவுடைய கருமத்தில் பதவிசாய் தனிப்பட இருந்து யோசிக்காமல் ஏகக்கூட்டங்களாய் கட்சி வாதமாய் அவர் எதைச் சொன்னாலும் எவ்வித அற்புததிருஷ்டாந்தரங்களைக் காட்டினாலும் ஒப்பாமல் ஆட்சேபித்து அவர்களை முகப்பங்க மாக்கிப் போடவே வேணுமென்ற எண்ணங்கொண்டே முரண்டு செய்தார்கள்.

அப்போதையில் அனேக திருஷ்டாந்தரங்கள் காட்டி யும் ஒப்புக்கொள்ளாதிருந்தபோது குறுஆனில் குறைஷி களே! உங்களுக்கு நான் உபதேசம் சொல்கிறேன். அதென்னவெனில், அல்லாஹுத் தஆலாவுக்காக வேண்டி நீங்களிந்தக் கூட்டங்களை விட்டொழிந்து இரண்டிரண்டு பேராயும் தனித்தனியாயு மிருந்து உங்கடவனில்

ஜனன்னில் ஏதாவது பயித்திய மற்றது இருக்குதாவென்று யோசித்துப்பாருங்கள் என்று முஹம்மதே! சொல்லுமென்று அல்லாஹுத் தஆலா திருவுளமானன் அவ்விதம் யோசித்தவர்கள் ஒப்புக்கொண்டு மூமினுகி பலம் பெற்ருர்கள். அல்லாதவர்கள் காபிராகி செத்தார்சள்.

இன்னமும் சற்குணங்களே நிறப்பமாக்கி வைக்கவே என்னே அனுப்பப்பட்டதென்று நபியுல்லா திருவுளமாயிருக்கிருர்கள். இன்னமும் மூசா, ஈசா அலேஹி மஸ்ஸலாம் உடைய நாளேயிலுள்ள ஹுக்கமாக்களில் சிலர் நீர் கொண்டு வந்த மார்க்கமும், இல்மும் சரிதான். ஆகிலும் எங்கள் கல்பில் அதற்கு மாற்றமாக ஒன்றுமில்லே. உம்மைக்கொண்டு நாங்கள் ஈமான்கொண்டு கலிமாச் சொல்லவேணு மென்கிறதில்லே என்று விலகிக்கொண்டார்கள். ஆனலிந்த ஹுக்கமாக்கள் நுபுவத்தை இன்காறு செய்ததெல்லாம் அவர்கள் சொல்லுகிருர்கள். ஆராகிலும் சரீர இச்சைகளே வெறுத்து லோகத்தில் வழங்கி வருகிற நீதமான சற்குணங்களேச் சரியாக கொண்டுவந்து கல்பைத் தெளிவாக்கினல் மேலோகத்திலுள்ள ரூபங்கள் முழுவதும் அவனிலே பதிவாகி கய்புகளெல்லாம் வெளியாகி விடும். ஊடாலே யாதொன்றும் அவனுக்குச் செலவில்லேயென்ருர்கள்.

அதற்காகத்தான் முன்னூல்களாலும், தங்கள் கருத்தாலும் யோசிக்கத்தக்க புத்திசாலியில் அனேகர்களும் அவர்களுடைய நோட்டம் ஐயறிவு புத்திகளாலும் யோசித்து தாங்கள் அல்லாவை அறிந்த உலமாக்களாகி விட்டோமென்றெண்ணுகிருர்கள், தக்குலீதுடைய ஈமான் சிஹ்ஹத்தில்லேயென்றும் சொல்லுகிருர்கள், காரியந்தன்னில் அவர்களுடைய அக்குலேயும், ஐயறிவையும் நோட்டத்தையும் தொடர்ந்து சில சமயம் சரியானதை தப்பிதமாகவும், தப்பிதமானதைச் சரியாகவும் எண்ணுகிருர்கள்.



ஆகையால், அல்லாஹ் ஷறுஆக்கியதைத் தவிர எதைத் தொடர்ந்தாலும் கால் சருகுதலேக் கொடுக்குமல்லாது வேறில்லேயென்று ஷெய்குல் அக்பர் றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிருர்கள், இதில் முஅத்திலாக்களென்ற ஒரு கூட்டம் இந்த லோகம் தன்னலே உண்டாகி தன்னலே அழியுதேயல்லாது சிருஷ்டிக்கிறவனெருவனில்லே யென்கிருர்கள். அந்தச் சொல்லே குப்பாறுகளே றத்துசெய்து வேர்ப்பிடுங்கலாய்ப் பிடுங்கியும் அவ்விதம் பேசுகிறவனே அவர்களே சாதிவிலக்கி வைத்து அவன் மானம் மரியாதை யிழந்திருப்பதால் அந்த மூதேவிகளுடைய * தஅவாவை இதில் இழுத்துப் பேசாதிருப்போமாகவும்.

ஆனல், காரியந்தன்னில் அவர்களுடைய தற்செயல் குணத்திலும் நாயன் ஒருவனுண்டென்பது எப்போதும் அடைந்தேறலாய் வந்துக்கொண்டிருக்குமல்லாது வேறில்லே. ஆகையால் அல்லா ஒருவனுண்டுமென்பது தற்செயல் குணமாகவே நிச்சயமாகிவிட்டது. அப்படியானல் அவன் நாயனும், நாம் அடிமையுமாக இருப்பதால் அவனுக்குப் பொருத்தமான விதம் நாம் நடக்கவேணுமென்பது சிந்தையில் ஊசாடும். ஏனென்ருல், ஒருவரை எண்ணத்தில் கனமாய்க்கண்டால் அவருக்குப் பணிந்தும், அவருக்குப் பொருத்தமாயும் நடக்கவேணுமென்பது நம்முடைய சிந்தையில் ஊசாடுவதும் தவிர அப்படியே நடத்தி வருகிருேம். ஆகிலும் அவர்களால் யாதொரு தீங்கையும், நலவையும் ஆசைவையாதிருப்பதுடன் பணிந்தும் அவர்களுடைய ஏவலுக்கு வழிப்பட்டும் விலகல்களேத் தவிர்ந்தும் நடக்கிருேம். காபிர் முஸ்லிம் சகலரும் பாவம், புண்ணியம் இரண்டுண்டும் என்றும், இந்த உலக வாழ்க்கையை நம்பக்கூடாது. பொய்யான வாழ்க்கை என்றும், பொய்யான மாய்கையென்றும்

---

* இப்படிப்பட்டவனுக்கு பரம சண்டாளனென்றும் வேதவிரோதி என்றும் நாஸ்திகனென்றும் சொல்வார்கள்.

தொழாமை ஈயாமை முதலாகிய ஏது பாவங்களுண்டோ அதையெல்லாம் பாவங்களென்றும், தொழுகை ஸக்காத்து முதலானவைகளை நன்மையென்றும், நன்மைகளைச் செய்தவர்களுக்கு சொர்க்கமென்னும், மோட்சக்கதியடைவார்களென்றும், தின்மையைச் செய்தவர்கள் நரகமெனும் அதோ கதியடைவார்களென்றும், முஸ்லிம் காபிர்ச் சகலரும் ஒற்றுமையாக இருப்பதுடன் ஆயிரத்திலொன்றில் காபிர் விதர்ப்பமாகிறதானாலும் அவர்களிலும் ஆழமாகிய கருத்தையுடையவன் நம்மிலுள்ள ஷறுஇலுள்ள காயிதாப்படிக்குள்ள கற்பனையைக் கேட்டு அவர்கள் இரண்டிரண்டு பேராக அல்லது தனித் தனியே யிருந்து யோசிப்பார்களாகில் யாதொரு விதர்ப்பமில்லாமல் இந்த மார்க்கத்தையே ஒப்புக்கொள்வார்கள்.

இதற்கு திருஷ்டாந்த மென்னவானால், காபிர்களில் மிகுத்தவர்களும் தங்கள் மார்க்கத்தைப் பொய் என்று தள்ளி இதில் வருகிறார்கள். இஸ்லாமிலுள்ளவர்கள் அப்படிப் போகவில்லை. அப்படியே போனாலும் இதனுடைய உண்மையைக் கண்டு தேறாதவனாயிருப்பதுடன் அதில் போரதால் ஏதாவது பொருள் பெண் ஆஸ்தி அல்லது உத்தியோகம் கால சீவனம் சேமமாய் கழிவது முதலாகிய ஓர் பிரயோஜனத்துக்காக வல்லாது வேறில்லை. இது பொய் அது உண்மை யென்று அணுவளவும் கவனத்தில் ஊசாடி அற்பமும் விவேகமும் உடையவன் அதில் செல்ல மாட்டான். குபுரிலிருந்து இவ்விடத்தில் சாப்பாட்டுக்காய் வருபவனை பாராட்டாத்ததுபோல் இதிலிருந்து அதில் புகுதுகிறவனையும் பாராட்டமாட்டோம். எதிலும் விவேகமுடையவர்களை சமுகமாக்குவோம்.

ஆகையால் காபிர் முஸ்லிம் சகலரும் ஒற்றுமையாய் இருப்பது போல் நம்முடைய சிந்தையிலும் நாமீடேற்றம் பெறுகிறதற்கு வழியெவ்விதமென்றும் எவ்வித வழிப்பாட்டை நாம் வழமையாக்கித் தகுந்த பிறத்தியாகிய



கூலியென்னும் மோட்சத்தைப் பெற்றுக்கொள்ளலாம். எதை நாம் உண்மையாய் நம்பி அகமும் புறமும் ஒன்றாய் கண்ணாரக்கண்டதுபோல்கண்டு வழிபட்டுஅதுடன்ஒன்றையும் கூட்டாக்காமல் ஓர்மைப்படுத்தியதின்வலுப்பத்தையும் அறிந்து அப்பால் பிரத்திட்சமாய்க் கண்டு களிகூர்ந்து இருக்கவேணுமென்று இருதயத்தில் இடைவிடா இரகசியமாய் எப்போதும் ஊசாடிக்கொண்டேயிருக்கிறது.

ஆகையால் நபுஸே! ஆராய்ந்து பார், குறுஆனில் தீனில் வம்பிக்குதலில்லை வழிகேட்டைவிட்டு நேர்வழி வெளிச்சமாகி விட்டதென்றும், உங்களின் பேரில் தீனில் ஒரு வருத்தத்தை வைக்கவில்லை யென்றும், நபிகணாயகம் சற்குணங்களை நிரப்புவதற்காகவே என்னை யனுப்பப்பட்டதென்றும் திருவாய் மலர்ந்தருளியபடி இந்த மார்க்கத்தின் கட்டளையடங்கலும் தன் தன் இயற்கைக் குணமென்னும் வழக்கத்தில் சாயாமல் நீதியைக்கண்டு கடைந்தேறக் கருதியிருக்கும் கூரிய விவேகிகள் சிந்தையில் உணடாகும் ஊசாட்டத்துக்குச் சரியாயிருக்குமல்லாது வேறில்லை.

ஆனால், சிலதுகளின் முடிவின்னதென தெரியாதிருக்கும் வேளை அதில் றஸூலுடைய கட்டளை இவ்விதமென்று வெளியானவுடன் அதை ஏற்றுக்கொள்வார்கள். ஆகையால் தீனில் வம்பிக்குதலும் யாதொரு வருத்தமும் கிடையாது

இப்போது சொல்லப்பட்டதற்கு திருஷ்டாந்தம் உன்னுடைய சிந்தையில் ஓர் வழிப்பாட்டால் கூலியைப் பெறுவது வழக்கமாயிருப்பதால் ஏதை நம்புவோம். நம்பினால் [1] எவ்விதம் வழிப்படுகிறது. [2] வழிப்படுவதில் பிரயோசனம் கொடாத்த தொன்றையும் கூட்டாக்காமல் எவ்விதம் ஓர்மைப்படுத்தி [3] அதின் தகுதியை யறிந்து [4] தேர்ந்து தெரிசிக்கிறது யென்ற நினைப்பு உன்னுடைய கருத்திலுண்டானதே.

---

1. இதுதான் ஈமான், 2. இதுதானிஸ்லாம், 3. இதுதான் தௌஹீது. 4. இதுதான் மஃரிபத்து.

தீனும் அதனுடைய நாலு பறுளுமல்லாது வேறே ஒரு கட்டளை ஒன்றும் கிடையாது. ஆகையால் றஸுல்மார்களை அனுப்பப்பட்டதும், வேதங்களை இறக்கப் பட்டதும் அறிவாளிகளுடைய அறிவிற்கும் மெஞ்ஞானி களின் அனுபவத்திற்கும் ஒற்றுமையா யிருக்குதல்லாது வேறில்லை. ஆனல் தீனுடைய அறிவென்று யாதொரு உபயோகமல்லாமல் ஏற்பாடாயிருப்பதை இவ்வளவென்று எழுத்தாலும், சொல்லாலும் அளவிடக்கூடாத வீணுகிய அறிவுகளை யெல்லாம் உலமாக்களென்று பேர் பெற்ற வீணர்கள் ஏற்படுத்தி, என் போற கொற்ற வீணர்களை மருட்டி போட்டார்கள், ஆகையால். நபுஸே! அந்த மயக்கமும், மருட்டுதலும் உன்னை விட்டு நீங்கி தீனுடைய அறிவுகளை நீ கண்டுதெளிந்து கடைத்தேறப்போதுமென்ற ஆசையோடு உனக்கு உறுதியாகவும், உபதேசமாகவும் சொல்லத் துவக்குகிறேன்.

## தன்பீஹுன் வஹி:லாம்

நிச்சயமாய் அல்லாஹுத் தஆலா உங்களுக்கு அந்த வழிப்பாட்டைத் தெளிவாக்கி யிருக்கிருன். ஆகையால் நீங்கள் வழிப்பட்டவர்களாக யிருக்கும் போதல்லாது மாண்டு போகவேண்டாமென்று யஃகூபும், இபுருஹீமும் அவர்களுடைய மக்களுக்கு வஸிய்யத்துச் சொன்னதாக அல்லாஹுத் தஆலா குறுஆனில் திருவுளமானன். இந்த வழிப்பாடு மார்க்கமென்று குறிப்பிட்டால் கேட்பவர்களுக் குத் தெரிந்ததாகயிருக்கவேணுமல்லவா? அதற்காகத்தான் வேறே ஆயத்தில் அல்லாவிடத்தில் மார்க்கமாவது இஸ்லாமென்னும் வழிப்பாடாயிருக்கு மென்று வந்திருக் கிறது.

ஆகையால், மார்க்கமென்பது வழிப்பாடாச்சுது, வழிப்பாடு அடிமையில் நின்று முள்ளதானபடியால் மார்க்கம் அடிமையில் நின்று முள்ளதுதான். மார்க்கம் அல்லாவிடத்தில் நின்று முள்ளதென்று சொல்லப்படுவ தெல்லாம் அடிமை வழிப்படும் விதத்தை அவன் ஏற்படுத்



திய ஷறுஆக யிருக்கும் எப்படியானல் ஒரு ராஜன் குடி ஜனங்களுக்குச் சில பணிவிடைகளைக் கற்பித்து அதின்படி குடி ஜனங்கள் நிறைவேற்றினல் இராஜனி லுள்ள பணிவிடையென்று சொல்வது போலாயிருக்கும்.

ஆகையால, தீனெனும் மார்க்கங்கொண்டு நிலை நின்று நிறுத்தாட்டுகிறவன் அடிமையாயிருக்கும். அவன் நடக்கும் சட்டங்களாகிய ஷறகுஎனும் மார்க்க ஏற்பாட்டை ஏற்படுத்தினவன் நாயகனயிருக்கும்,

எப்படிப் போலானல் தொழுகை யென்னும் வணக் கத்தை யேற்படுத்தினவன் நாயகனகவும் அதை நிலைப் பாடாய் நிறுத்தினவன் அடிமையாகவும் இருப்பதுபோலா யிருக்கும். அதற்காகததான் குறுஆனில் மிகுந்த இடங் களிலும் தீனை நிறுத்தாட்டி வையுங்களென்றும் தொழுகையை நிலைப்பாடாய் நிறுத்தாட்டி வையுங்க ளென்றும் ஏவப்பட்டிருக்கிறது.

இந்த நுணுக்கம் தெரியாமல் சில ஸிந்தீகுகள், தொழுகையை நிலைப்படத் தொழுகிறதென்று வந்திருக் கிறது. கல்பில் எப்போதும் நிலைப்படுத்தி வைக்கிற அகமியத் தொழுகையென்று வாய்மதம் பேசுவார்கள். ஆகையால், இஸ்லாமல்லாத்ததை மார்க்கமாகத் தேடுவானே யானல் அவனில் நின்றும் அதை ஒப்புக் கொள்ளப்படாது, ஆகிறத்தில் அவன் நஷ்டவாளர்களில் நின்று முள்ளவனயிருக்குமென்று அல்லாஹுத் தஆலா குறுஆனில் திருவுளமானன்.

ஆகையால் ஷறுகு என்னும் மார்க்க விதிப்படி நிலை நிற்பதென்ற தீனெனும் சொல் கூலியைப் பெற்றுக் கொள்ள நேமமாய் வழிப்படுதலென்ற மூன்று விளக்கத் தைப் பொதிந்ததாயிருக்கும். ஏனென்ருல், ஆராகிலும் பணிவிடையைக் கற்பித்ததில் அதற்குள்ள வழக்கம்போல் வழிப்பட்டுக் கூலியைப் பெற்றுக் கொள்ளக்கூடுமல்லாது

வேறில்லை. அப்படிப்போல் அல்லாவுடைய கட்டளைக்கு அவன் ஏற்படுத்திய வழக்கம்போல் வழிப்பட்டால் கூலி கிடைக்குமல்லாது மனோகரப்படி நடந்தால்வழிப்பாடென்று சொல்லக் கூடாத்ததும் தவிர, தண்டனையும் செய்யப்படும். ஆனாலிதில் ஒரு நுணுக்கமிருக்கிறது. அதென்னவானால் பூலோகத்திலுள்ள இராஜாக்கள் முதல் எவர்களும் ஏதொரு கட்டளையிட்டாலும் மனதில் அனேக வருத்தம், சடைவு கோபமிருப்பதுடன் வெளிரங்கத்தில் அதற்கு விதர்ப்பம் செய்யாத பாவனையாக நிறைவேற்றிப் போட்டால் ஏற்றுக்கொள்வார்கள்.

அல்லாவாகிறவன் கருத்துக்கும், சொல்லுக்கும். செய்கைக்கும், அகம்புறமிரண்டுக்கும் நாயகனாகவும் ஓயாதொழியாததுகளில் உதயமாகிப் பார்த்திருப்பவனாகையாலும்,ஊசாட்டம் ஒடுங்குதல் உசும்புதல் சகலதும் இவ்வித நிறையிலிருக்க வேணுமென்று கற்பித்திருப்பதாலும் வெளிப்பாவினைகளை யேற்றுக்கொள்ளமாட்டான். கலப்பறுதலாகிய தீன்தான் அல்லாவுக்குடையதென்றும் அல்லாவுக்கு தீனைக் கலப்பறுதலாக்கி வைத்தே வணங்கும் படிக்கும் தீனெங்கிற சொல்லை குறுஆனில் எழுபதே சொச்சம் தலத்தில் அல்லாஹுத்தஆலா மடக்கி மடக்கிச் சொல்லியிருக்கிறான். அல்லாவிடத்தில் தீனென்பது இஸ்லாமென்னும் தலைசாய்குதலாயிருக்கும். அதுவே வழிப்பாடாயிருக்கும், வழிப்பாடென்பது உன்னுடைய செய்கைதான். ஆகையால் உன்னில் நின்றுமுண்டாகிறது கொண்டே பொழிய நீ சீதேவியாகிறதில்லை. அதின் மாற்றமும் அப்படிப்போலேதான். உன்னுடைய செய்கை யுனக்குச் சீதேவி தனத்தை தரிபடுத்திவைத்தது போல் நாயகத்தனத்தளவிற் சேர்க்கப்பட்ட திருநாமங்களே யொழிய அவனுடைய செயல்களைத் தரிபடுத்தி வைக்க வில்லை, அந்த திருநாமங்களாகிறது நீயாகயிருக்கும். அந்த செய்கைகளாகிறது புதுசாக்கப்பட்டதுகளாயிருக்கும் இதில் நீ என்று உன்னை யேதிர்ப்பாக்கிச்சொன்னது



உண்டாக்கப்பட்டது சகலதையும் நாடப்பட்டதாயிருக்கும். நீ யாகிறவன் ஆலங்களுடைய அந்தரங்கங்களையும் அஸ்மாக்களடங்களையும் பொதிந்திருப்பதால் உன்னை ஒருவனை யெதிர்ப்பாக்கிச் சொன்னதால் போதுமாயிருக்கும், ஹக்குடைய அடையாளங்களைக் கொண்டு நாயனென்று அவனுக்குப் பேர் வைக்கப்பட்டது. உன்னுடைய அடையாளங்களைக் கொண்டு உனக்குச் சீதேவியென்றும் பேர்வைக்கப்பட்டது, ஆகையால் உனக்கு அவன் கற்பித்த ஷறுகுஎன்ற பணிவிடையளவிற் சேர்ந்து வழிப்பட்டு தீனையும் நிறுத்தாட்டி வைத்தாயாகில் அவனுடைய பேட்டியென்னும் சரியிருப்பிலுன்னையிறக்கி வைப்பான். தீன் அடங்கலும் அல்லாவுக்குடையதாயிருக்கும், அதடங்கலும் உன்னில் நின்றுமுள்ளதுதான். அடிமுட்டைப் பார்க்கிறது கொண்டேயொழிய யாதொன்றும் அவனில் நின்று முள்ளதல்ல, இப்போது எழுதப் பட்டதுகளில் நின்றுமுள்ள நுணுக்கமும் அதற்கு இந்த லோகத்தில் முகாந்திரமும் எப்படியானால், இந்த லோக முழுவதையும் ஏக சக்கரவர்த்தியாய் ஒரே குடையில் கட்டியாளத் தகுந்த வல்லமையும்,நீதியையும்,அன்பையும், கிருபையையும், இரக்கமும். அமர்த்தி முதலாகிய சகல விவேகமும் உடையவராய் ஒருவரிருக்கிறார். அவருக்கு இராஜனென்கிற பேர்நாமம் வெளியாகவில்லை. அப்போது லோகத்திலுள்ள சகலரும் அவரையே இராஜாவாக ஆக்கி வைத்ததில் இராஜாவென்று அவருக்கும்,சிலபணி விடைகளை அவர் கற்பித்தபடி நிறைவேற்றியவர்களுக்குச் சீதேவியென்ற பேரும் கொடுத்துத் தன்னுடைய சிம்மாசனத்தில் சரியிருப்புக் கொடுப்பது போலுமாயிருக்கும், அப்படிப்போல் ஹக்குத் தஆலாவுடைய நாயகத் தனத்தளவில் சேர்க்கப்பட்ட அஸ்மாக்கள் மறைவாக யிருந்ததில் கல்குகளை யுண்டாக்கினதால் அவைகள் வெளியாச்சுது. அடிமையுடைய சீதேவித்தனமும், மூதேவித்தனமும் அவன் ஏற்படுத்திய ஷறுஐக்கொண்டு தான் வெளியாகி அவனுடைய செய்கையால்தான்

சீதேவியென்றும், மூதேவியென்றும் பேர் ஏற்கிறான், ஆனால் அந்த ராஜன் நீதனாகவும், இரக்கவாளியாகவு மிருப்பதுடன் களவு செய்தவனைக் கையைத் தறிக்கவும், தொழுகை விடுவது முதலாகிய கொள்வதற்குப் பாத்திர மாகிய செய்கையைச் செய்வதால் கொல்வதாலும், சகல துர்ச்செய்கைகளுக்கும் அதற்குள்ள தண்டனைக் கண்டினை நடத்துவதாலும், பந்துகானா ஜைல்கானா உண்டுபண்ணி அவைகளில் அடைத்து வைக்கவேண்டியவர்களை அடைத்து மறியலில் வைப்பதாலும். நீதஸ்தர் இரக்கவாளியென்ற பேர் நீங்காதிருப்பதுடன் கொல்கிறவர் தண்டனை செய்கிற வர் சிறைச்சாலைக்காரர் என்கிற பேர்களெல்லாத்தையும் குடிஜனங்கள்அவருக்குதரிபடச்செய்துபோடுவார்கள், அப்ப டிப்போல்அல்லாஹுத்தஆலா றஹ்மான், றஹீம், ஹன்னான் மன்னானாகயிருப்பதுடன் நம்முடைய செய்கையினால், முன்த்தகிம், ஷதீதுல் இக்காபு ஷதீதுல் அதாபு வேதனை செய்கிறவன் வேதனை கடிசானவன் என்று பேர்கொண்டு தஜல்லியாகிறான், ஐ வெளியாகிறான், அந்த ராஜன் தீர்மானமான இரக்கவாளியாக இருந்தாலும் நீதியை நடத்தவேண்டியதற்காகச் சகல ஆக்கினைகள் செய்வது போல் கல்குகளாலும், அவர்களுடைய செய்கைகளாலும் தான் அல்லாஹுத் தஆலாவுடைய அஸ்மாக்கள் வெளியா கிறது. அந்தஇராஜவானவர்எப்போதும் குடிஜனங்களுக்கு தானும் உபதேசிப்பதுடன் தன்னுடைய வேலைக்காரரை யும் எப்போதும் குடிஜனங்களில் ஒருவருக்கொருவரையும் நீதமாய் நடப்பதின் பேரில் உபதேசிக்கும் படிக்கும் செய்கிறார். அப்படிப்போல் சகலதிலும் சோடித்துப் பார்த்துக்கொள். அல்லாஹுத் தஆலா சொர்க்கலோகத் தளவிலழைக்கிறான். ஈடேற்றத்தையுடைய வீட்டள விலழைக்கிறான் என்று குறுஆனில் அவ்வல் தொடுத்து ஆகிறுவரைக்கும் பாவத்தளவிற் சாடாமல் உபதேசமே யல்லாது வேறில்லை. அவர்கள் தங்களை தாங்களே அநீதம் செய்துகொள்கிறார்களென்றும் குறுஆனில்திருவுள யாயிருக்கிறான், அதற்காகத்தான் உலகத்தில் நடக்கிறது சகலதையும் கைறுன்குல்லிய்யி என்னும் அடங்கலும்



கைறுனதென்றும் ஷற்றுன்ஜுஸ்யிய்யி சிலவிஷயங்களால் தீங்காகிறதென்றும் சொல்லப்படுகிறது. எப்படி யானால், அல்லாஹுத் தஆலா சகலரையும் தன்னுடைய கிருபை கொண்டே வெளிப்படுத்திச் சகலரையும் நேரான பாதையில் நடந்து இருபதியிலேயும் சுகத்தையும், இன்பத் தையும் அனுபவிக்கவே பொருத்தமாகயிருப்பதுடன், அவனுடைய றசூல்மார்களையும் அனுப்பி அந்த இன்ப வீட்டளவில் அழைக்கும்படி செய்திருக்கிறான். அவர்கள் அதற்கு வழிப்படாதபடியால் அதற்குத் தகுந்த புறத்தி செய்ய வேணுமென்று நரகத்தைப்படைத்ததாய்வருகிறது. அதுவே தவிர அவனுடைய பொருத்தத்தில் நின்றுமுள்ள தல்ல. இன்னான் தீங்கு செய்து நரகத்திற்கு பாத்திர மாவானென்று அவனுடைய நாட்டத்திலிருந்தாலும் சரி, எப்படியானால் லோகத்தில் குடிஜனங்கள் பேரில் இரக்க முள்ள இராஜனுக்குப் பொருத்தமும், சந்தோசமும் சகலரும் நீதியாக நடந்து வருவதுடனும் ஒருவரையும் கண்டனை தண்டனைக் குள்ளாக்காதிருக்க வேணுமென்பதே பிரியமாக யிருப்பதுடன் ஒவ்வொருவனை அவர் பார்த்ததில் அவனுடைய பிறவிக் குணத்தால் அல்லது இயற்கையால் சேர்க்கையால் அல்லது வீருப்பு வராகி மறுட்டுதல் சூது முதலாகியக் கொள்கைகளுக்கு இவனுடன் பட்டுத் தண்டனைக்குள்ளாவான் என்று அவருடைய சித்தத்துக்குத் தோணுதலாகி எவ்விதமான நீதி நூல்கள் வேதாந்தம், சித்தாந்தம் முதலானவைகளைக்கொண்டு நல்லுபதேசம் செய்தாலும் அவனது துற்குணம் துற்செய்கை நீங்கா தென்று திட்டவட்டமாய் அவர் மதித்திருப்பதுடன் நல்மொழிகளை யவனுக்கு உபதேசிப்பதும் நீதிதான், அப்பாலவருக்கு பொருந்தாத நடைபிடியைச்செய்தபோது அவனுக்குத் தகுந்த சிட்சைசெய்வதும் நீதியிலுள்ளது தான். ஆனால்! நீ தீனை நிறுத்தாட்டி அல்லாஹுத் தஆலா உன் பேரில் ஷறுஆக்கிய மார்க்க விதி தவறாமல் நடத்தி வருவதால் உன்னுக்குள் மறைவாக யிருந்த மனிதத்தன்மையுடைய வன்னிப்பை நிறப்பமாக்கிவைக்க

யோக்கியவான். மனிதத்தன்மையுடையவன்சீதேவித்தனம் பொருந்தியவன் என்ற பேரை உன்னுடைய செய்கையால் உனக்கு அவன் கொடுப்பதுபோல் அவனுக்கு மறைவாக இருந்த நாயகத் தனத்தளவிற்சேர்க்கப்பட்ட அற்றஹ்மான் அல்மலிக்கு அற்றப்பு அல்காலிக்கு போல் கொற்ற (கமாலிய்யத்தாகிய) நிறப்பமாகிய அஸ்மாக்களை நீயும் உன்னுடையசெய்கையும் அவனுக்குத் தரிபடுத்திவைக்கிற தாயிருக்கிறது அகந்தை வராகி மறுட்டுதலால் அவன் ஏற்படுத்திய ஷறுவுக்கு மாற்றம் செய்தவனுக்கு அவனில் மறைவாகி யிருந்த மூதேவி துஷ்டன் அநீதக்காரனென்ற பேரையுனக்கு அவன் கொடுப்பதுபோல் அதற்கெதுகை யாகிய அவனில் மறைவாகி இருந்த நாயகத்தனத்தளவிற் சேர்க்கப்பட்ட அல்கபீறு அல்முன்தகிம் அல்கஹ்ஹாறு அல்ஜப்பாறு துல்பதுஷி ஷதீது போல் கொற்ற ஜலாலிய் யத்தாகிய அகங்காரமென்னும் அஸ்மாக்களை கொண்டு உன்னில் தஜல்லியாகி வெளியாகும்படி செய்துக்கொள் கிருய். தாத்திய்யத்தாகிய அஸ்மாக்களையும் ஜலாலிய்யத் தாகிய ஜமாலிய்யத்தாகிய அஸ்மாக்களையும் சகலதிலும் சோடித்துத் பார்த்துக் கொள். தன்னலே தான் கெட்டால் அண்ணவியென்ன செய்வான். தனக்கு வினை தானே தேடிக்கொண்டான். தன்புத்தியால் தலையெடுப்பாராயிரம் பேர், தன் புத்தியால் தலையழிவாராயிரம்பேர்' என்ற பல மொழிபோற் கொற்றவைகளை பன்றியும் கூட்டாயிருக்கிற நிர்வாகமாகிய வயிற்றுடைய இன்பத்திலும் அபத்துடைய இன்பத்திலும் வைத்துப் பார்த்து இது போற்கொற்ற தீனுடைய அறிவுகளில் மதிமயங்கிப் பொறி கலங்கி யுளருதே. ஆனல் தீன் என்னும் சொல், வழிப்பாடு, வழக்கம், கூலி என்ற மூன்று விளக்கத்தைப் பொதிந்த தென்று நான் சொன்னதில் குறுஆனில் அடிமைகளை நோக்கி உங்களுடைய தீனென்று சொல்லியிருப்பதில் அடிமை வழக்கமாய் வழிப்படுவதால் கூலி கிடைக்கு மென்பது தெரிந்ததுதான். அல்லா இடத்தில் தீனென்ற தற்கு அல்லாஹ் ஏற்படுத்திய ஷறஉ என்றும்சொன்னதும்



சரிதான். தீனீ என்னுடைய தீனென்றும், தீனுல்லா அல்லாவுடைய தீனென்றும் குறுஆனில் சொல்லியிருக் கிறபடி அல்லாவும் வழக்கமாய் வழிப்படுவதால் கூலியைப் பெற்றுக்கொள்ள வேணுமென்ற விளக்கமுண்டாக வேண்டிய திருக்கிறதே யென்றும் கேட்கப்போதும்.ஆழிய கருத்துக்கொண்டு யோசித்தாயாகில்உனக்குவெளியாகும். அதெப்படி யென்ருல் அடிமை நாயனுக்குப் பொருத்தமா யுள்ளதில் 'வழிப்பட்டால் அடிமைக்குப்பொருத்தமாயுள்ள' தவாபு கூலி சொர்க்கலோக முதலானவைகளைக் கொடுப் பது கொண்டும் நாயன் வழிப்படுகிருன், ஹதீதில் கமாத் ததீனுத்து தானு' நீ வழிப்படுவது போலுனக்கு வழிப்படப்படும் என்று சொல்லப்பட்டதுபோல், அடிமை விதர்ப்பம் செய்தால் ஒரு வேளை பொறுத்துக்கொள்ளும் படிக் கேட்பதற்கு அவன் வழிப்படுகிருன். அல்லது பொறுக்கக் கூடாத்ததில் வேதனை செய்ய இவனுடைய இயற்கையும், சேர்க்கையும் கேட்டுக்கொண்டபடி வேதனை செய்வது கொண்டு வழிப்படுகிருன். ஆனல் அந்தரங்கத் தில் வெளிரங்கத்தில் மாற்றம் செய்கிறவனும் அவன் பேரில் ஹுக்கும் செய்கிற அஸ்மாக்களுக்கு வழிப்பட்ட வனே யல்லாது வேறில்லை. ஒரு வேளை கபூறெனும் பிழைபொறுக்கிறவன் என்ற இஸ்முக்கு அல்லது முன்த்தகிம் என்னும் வேதனை செய்கிறவனென்ற இஸ்முக்கு வழிப்பட்டவனுக இருப்பானல்லாது வேறில்லை. அதை வழிப்பாடென்று சொன்ன கருத்தெல்லாம் அவனை வேதனை செய்ய வழிப்பட்டான் என்கிறதல்லாது வேறில்லை, உலகத்தில் எத்தனையோ பேர் தூக்குவதற்கு பாத்திரமான வேளை, அதிகாரிகளைப் பார்த்து தாமதிக்க வேண்டாம். என்னைத் தூக்கிப் போடென்று தூக்கில் விழுகிறவனும், அக்கிரமித்து ஓடினதின் பேரில் வம்பாய்ப் பிடிக்கப்பட்டு தூக்கப்படுகிறவனு மொன்றே யல்லாது வேறில்லை. இதற்காகத்தான் சொல்லப்பட்டிருக் கிறது.

## ஷிஃறு பைத்து

**குல்லுன் யதீனு பிதீனில் ஹக்கி லௌபத்தினு வுலேஸ தீனுன் லிகைய்றில் ஹக்கி மஷ்றூஉ.**

அடங்கலும் ஹக்குடைய தீன் கொண்டே வழிப்படு கிறதாயிருக்கிறது. ஹக்கு அல்லாத்ததுக்கு ஏற்பாடாக் கப்பட்ட வழிப்பாடே கிடையாது. கல்குகளைப் படைத்தது அவனை வணங்கவல்லாது வேறில்லை. அவனல்லாத்ததுக்கு உஜூது உள்ளமையில்லாத்ததால் இல்லாத்ததை வணங்க ஒருவருக்கும் தகுதியே யில்லை. அடிமுட்டிலேயே அந்த வணக்கத்தின் பேரிலேயே சிருஷ்டிக்கப்பட்டிருக் கிறார்கள், அல்லாவுக்கு வழிப்படாத வஸ்து ஒன்றுமே யில்லை, இதற்காக குறுஆனுடைய அத்தாட்சியும், ஹதீதும் ஆரிபீன்களுடைய சொல்களும் உண்டாகியிருப் பதுடன் சரியான விவேகத்துடன் கொஞ்சமேனும் இல்மென்னும் வாடையைமுகந்தவர்களுடைய சிந்தையில் யாதொரு தலீலும் தேடாமல் திட்டவட்டமான அறிவுண் டாகியே இருக்கிறது. சில நிருமூடர்கள் அவர்களை ஏற்றிப் புகழ்ந்து இமாம்களென்ற பேரையும் அவர்களில் நடத் தாட்டப்பட்டிருக்கிற சில அறிவீனர்கள் இப்பேர்ப்பட்ட சொற்களை நமது நாயகமார்களாகிய லோகரெட்சகர் களான மஷாயிகுகளென்ற மெய்குருக்களான நாயகங் களுடைய கிதாபுகளில் கண்டு அதைக் குபுரென்றும் ஸன்தகாவென்றும் பலவிதமாக உளறியிருப்பதில் திரும்பிப் பாராதே.

இன்னமும் இந்தச் சொற்களின் அந்தரங்கங்களைக் கண்டுத் தேறித் தெளியாமல் அதை யொப்புக்கொண்டு தங்களுடைய கல்பிலிருக்கும் குபுறுக்கும் செய்தானிய்யத் துக்கும் உதவியாக இந்தச் சொல்லையே அத்தாட்சியாக்கி இபாதாத்து முதலானது சகலதையும் விட்டு முந்தின குபுறோடு குபுறையும் முந்தின செய்தானிய்யத்தென்னும் மூரியாட்டத்தோடு மூரியாட்டத்தையும் அதிகப்படுத்திக்



கொள்கிற மூதேவியாகியத்தோஷிகள் ! அந்தச் சொற்களை யேர்ந்துக் கொள்வது கொண்டும் பாராட்டாதே.

அந்த நாதாக்களிப்படிக் கொற்றதை அவர்களுடைய கித்தாபுகளில் வருத்தினதெல்லாம் அல்லாவுடைய வஹ்தானியத்தைச் சகலரும் தரிபடுத்தி லாஹிருடைய வணக்கத்தையும். பாத்தினுடைய வணக்கத்தையும் சகலரும் அதிகப்படுத்தவும் எறும்பு கடையானை முதல் எண்பத்து நான்கு நூறாயிரம் சீவசந்தும் பல (அன்றியும்) ஒரு அணுவாகிலும் அவனுடைய வழிப்பாட்டை விட்டுப் புறப்படாதென்கிற உறுதிப் பாட்டைச் சகலரும் கல்பில் தரிபடுத்தவும், அவனுடைய ராஜாங்கம் நடக்கிற வலுப் பத்தாலும், குதுறத்தாலும் ஒருவராலும் அவனுடைய கற்பனையை அக்கிரமித்து நடக்கக் கூடாது. சகலரும் அவனுடைய வழிப்பாட்டுக்குள்ளடங்கி நடப்பார்களல்லாது மீறி நடக்க முடியாதென்கிற உறுதிப்பாட்டை உண்டாக் கிக்கொள்வதற்கல்லாது வேறில்லை.

எப்படியானால் இந்த உலக முழுவதையும் ஒரு குடையில் கட்டி யாளுகிற இராஜன் சில பணிவிடைகளை குடிஜனங்களுக்குக் கற்பித்ததில் இன்னானின்னானிதை நிறைவேற்ற மாட்டான். அப்போது நம்முடைய ஆக்கினைகளை யவனில் செலுத்துவோமெனக் குறிப்பிட்ட படி சிலர் வழிப்பட்டார்கள். வழிப்படாதவர்கள் அவருடைய ↑சித்தத்திலுள்ளபடிக்கும் நடந்தார்கள். அவர்களுக்குச் சில ஆக்கினைகளை நடத்தினதில் அதற்கு வழிப்பட்டார்கள். ஆனாலும் அல்லாவுடைய வலுப்பமும் அவனுடைய சித்தமும் கமாலிய்யத்துடைய தாகையால் ஒருவனை மூதேவியென்று அவனுடைய சித்தத்தில் கற்பித்தபடி வழிப்படுவானல்லாது மாற்ற முண்டாகாது. அவன் வேதனை செய்யப் பிடித்தபோது வழிப்படுவானல் லாதுமீறவும் மறைந்துக் கொள்ளவும்கூடாது, ஷறுயின்படி வழிப்பட்டவன். வெளி ஏவலுக்கும், நாட்டத்துக்கும் வழிப்பட்டான். ஷறுஐ மீறினவன் நாட்டத்துக்கு வழிப்

பட்டான். மற்றஇராஜாக்களிலும் அப்படித்தானென்ருலும் அவர்களுடைய சித்தத்தில் நேர் செய்வானென்றெண்ணப் பட்டவன் தப்பிதவானுயும், தப்பிதவானென்றெண்ணப் பட்டவன் யோக்கியவானுயும், வெளிரங்கத்தில் சரியாய் பணிவிடையை நிறைவேற்றினவனுய் வெளிப்பட்டவன் காரியம் தன்னில் முற்றிலும் மோசக்காரனுயும், அவர் களுடைய ஆக்கினைக்கு மறைந்துக் கொள்ளவும், அக்கிர மிக்கவும் கூடும். இதுபோல் ஆராய்ந்துக் கொள்.

ஆகையால், தீன் என்கிற சொல்லுக்குள் மூன்று விளக்கமும் ஹக்கிலும் கல்கிலும் சரியாவதற்கு ஒன்ருவதாகிய வழிப்பாட்டில் விளங்கியபடி இரண்டாவது கூலியென்பதில் எப்படியானுல் வழிப்பாடென்றதே இரு புறத்திலும் கூலியாகி விடுகிறது. ஹக்குக்குப் பொருத்த முள்ளபடி வழிப்படுவதால் அடிமைக்குப் பொருத்தமான கூலியைக் கொடுப்பதால் அவனே இவன் பொருந்தச் செய்தான் இவனையவன்பொருந்தச்செய்தான். அவனுக்கு பொருத்தமில்லாத்ததைச் செய்வதாலிவனுக்குப் பொருந் தாத்ததைச் செய்கிருன். துன்பத்துக்குள் பட்டவன் குத்தக் காரன் பாவி விலங்குக்காரன் மறியல் வீட்டில் கிடந்து மனமடிவாய் கஷ்டத்தோடு வேலைபார்க்கிறவன் என்பது போல் கொற்ற எண்ணருத தாழ்ந்த வர்ணிப்புகளை உனக்கு அவன் கொடுக்கிருன். ஆகையால் அவன் உன் மீது ஜலாலிய்யத்தாகிய கஹ்ஹாறென்னும் அடக்கி அரசாளுகிறவன் முஅத்திபு என்னும் வேதனை செய்கிற வன். ஷதீதுல் இக்காபு எனும் வேதனை கடிசானவன் என்ற அஸ்மாக்களைக் கொண்டு தஜல்லியாகும்படி செய்து கொள்கிருய்.

ஆனுல், அவனுக்குக் குறைவான பேரை அவனுக்குக் கொடுக்கிறதானுல் அவனும் அப்படியே கொடுத்தால் தானே சரியான கூலியாகுமென்று விளங்காதே. உலகத் தில் நீதமான இராஜாக்கள் இரக்கவாளி தருமபுத்திரர் என்ற வர்ணிப்பு போலொற்றதை ஏற்றுக்கொள்வதே அவர்களுக்கு நிரப்பமான வர்ணிப்பும் மேலாம்பரமாகவும்



இருந்தபோதிலும் தூக்கில் கழுவிற் போட வேண்டியவர் களை அவ்விதம் செய்தால் பழிவாங்குகிறவரென்று பேர் கொண்டு அவருக்குக் குறையுண்டாகாது. ஆராய்ந்துக் கொள். ஆனுல்இப்போதுசொல்லப்பட்டதில்அல்லாவுடைய ஏவலுக்கு மாறுசெய்தவன் அல்லாவுடைய நாட்டத்துக்கு வழிப்பட்டவன் தானே. அப்படியிருக்க இவனை வேதனை செய்கிறது. இவனுடைய நாட்டத்துக்கு விரோதமானுல் இருபுறத்திலும் கூலி சரியாக மாட்டாதே யென்று நீ கேட்கப்போதும்.

அவனுடைய தற்செயல் குணம் ஏந்துக்கொள்ளா விட்டாலும் அவனுடைய கொள்கை ஏந்துக்கொள்ளும். எப்படியானுல் உலகத்தில் ஒருவன் குற்றம் செய்ததற்காக கை, காலில் விலங்கு பூட்டியிருக்க அவனுக்கு அடங்காத துன்பமாயிருக்கதன்னுடையதண்டித்தோழர்களைப்பார்த்து மெய்ப்பாக இதில் என்ன குறைவிருக்கிறது? நம்முடைய தாய், தகப்பன்மார்கள், கை காப்பு, கால் காப்பு போட வில்லையாவென்று சொல்வதுடன் அவனுக்குத் தீர்ப்பான காலம் தீர்ந்து பந்துகாறுவை விட்டு நிவாரணையானதின் பேரில் திரும்பவும் அவ்விதம் தண்டனைக்குள் படுவதும் தவிர நூறு தடவையானுலும் மீளவும் போதும்.

ஆனுல் உன்னுடைய இந்தக் கேள்வி மிகவும் பாரதூரமானதாலும் அநேக விரிவாக விரித்துப் பேச வேண்டியதிருப்பதாலும் பின் நரகலோகத்துடைய அதாபு இன்னதென்று வகைவிபரமாய்ப் பேசுமிடத்தில்இவைகளை யாதொரு களங்க மன்றியே பயான் செய்திடுவோம்,

தீனென்ற சொல்லுக்கு மூன்ருவது விளக்கமான வழக்கமென்றதில் ஹக்கிலும், கல்கிலும் அந்த வழக்க முண்டாகிறது. எப்படியென்ருல் வழக்கமென்றதை புத்தியால் ஆராயுமிடத்தில் ஒரு காரியத்தை ஒருவன் செய்து மடக்கியும் அதைச் செய்வதற்குச் சொல்லப்படு கிறது, ஷறுயின் ஒழுங்குப்படி இவன் வழக்கம் செய்து வந்தால் நல்ல கூலியைக் கொடுப்பதே அவனுடைய

வழக்கம். இவன் கெட்ட வழக்கம் பண்ணினுல் கெட்ட கூலியைக் கொடுப்பதே அவனுக்கு வழக்கம். ஆகையால் இப்போது எழுதப்பட்டவைகளில் விளங்கப்பட்ட தென்ன வென்ருல், தீனென்பது இஸ்லாமென்றும், அதுவே வழிப்பாடென்றும், அதுவே கூலி என்றும், அதுவே வழக்கமென்றும் விளங்கிவிட்டது. ஆகையால் தீனென்பது ஏதாயிருக்குமென்று கேட்கப்பட்டால் வழிப்பாடென்று சொன்ஞல் மற்ற இரண்டு விளக்கமும் கூலியென்று சொன்ஞல் மற்ற இரண்டும் வழக்கமென்ருலும் அதுபோல் விளங்கவேபடும்,

எப்படியாஞல், ஒருவன் ஏதாவதொரு காரியத்தில் ஒருவருக்கு வழிப்பட்டு ஒரு கூலியைப் பெற்றுக்கொள் கிறது, வழக்கமாயிருந்தால், இவனுக்கு வழக்கம். இதுதானென்ருல், வழிபட்டுக் கூலியைப் பெற்றுக் கொள்கிறதுதான் இவனுக்கு வழக்கமென்று விளங்கப் படுமல்லாது வேறில்லை, இப்படிப்போல் மற்றஇரண்டிலும் சோதித்துக் கொள்ளவும்.

இப்போது சொல்லப்பட்டவைகளெல்லாம், வெளிரங்க மானப் பேச்சாயிருக்கும். அவைகளுடைய இரகசியமும் உள்ரங்கமுமாகிறது. ஹக்குடைய வுஜூதெனும் கண்ணுடி யில் தஜல்லியாகும். ஹக்கில் நின்றும் அடிமைகளின பேரில் அவரவர்களுடைய கொள்கைகளில் அவர்களுடைய உள்ளமைகள் கொடுக்குமே அந்த ஒன்றேயொழிய மீளமாட்டாது. ஏனென்ருல் அவர்களுக்கு எல்லாக் கொள்கையிலும் ஒரு ரூபமுண்டும், அவர்கள் கொள்கைகள் விதர்ப்பமாகிறதற்காக வேண்டி அவர்களுடைய ரூபங் களும் விதர்ப்பமாகும், ரூபங்கள் விதர்ப்பமாகிறதற்காக வேண்டி தஜல்லியும் விதர்ப்பமாகும்,

ஆகையால், உண்டாயிருக்கிற விதங்கொண்டு அடிமையில் குணபாடு விஷயமாகும். ஆகையால் நல்லதை யும் அவனுக்கு அவனைத் தவிர யாரும் கொடுக்கவில்லை.



தீங்கையும் அவனல்லாதவன் அவனுக்குக்கொடுக்கவில்லை. ஆகிலும் அவனே அவன் தன்னை சுகண்டியாக்கிவைக்கிற வனும் துன்பத்துக் குள்ளாக்குகிறவனுமா யிருக்கிருன். ஆனபோதே அவன் தன்னையே யொழிய அவன் பழிக்க வேண்டாம், இன்னும் அவன் தன்னையே யொழிய புகழ வேண்டாம்.

ஆகையால், அல்லாவுக்கு அந்த அடிமையின் கொள்கையைக் கொண்டு அறிந்திருக்கிறதில் தீர்மான மெற்றிய கடப்பான முகாந்திரம் உண்டு. அறிவு அறியப் பட்டதைத்துடர்வதற்காக வேண்டி இதோ எழுதப்பட்டது. கத்றுடையஸிர்றை வெளிச்சமாகப் பேசினதாக இருக்கும், இதில் கூலியை மட்டிலும் குறிப்பிட்டுப் பேசியிருந்த போதிலும் தீனுடைய விளக்கத்தில் மூன்ருவதாகிய வழக்க மென்பதையும் பயான் செய்யப்பட்டேயிருக்கிறது ஏனென் ருல், இவனுடைய வழக்கம் எப்படியோ அப்படித்தானி ருக்கும் அவனுடைய வழக்கமென்று விளங்கப்படுகிறது. ஆனல், தீனுடைய சிர்றில் இப்போது எழுதப்பட்டதை நீ விளங்குகிருயோ, எப்படியோ தெரியவில்லை. ஆகிலும் சைக்கினையாய் நானெழுதுவதில்நோட்டத்தைஆழமாக்கிப் பார்த்தாயாகில் விளங்கிக் கொள்வாய்.

அறிந்துகொள்! ஹக்கும் அவனுடையஅஸ்மாக்களும் தரிபாடாகிய குறிப்புகளென்னும் கண்ணுடிகளில் வெளி யாகும், இன்னமும் பல குறிப்புகளும் ஹக்குடைய உஜூதெனும் கண்ணுடியிலும் வெளியாகும், இது இரண்டில் நின்றும் எல்லாம் மற்ற ஒன்ருென்றுக்கும் கண்ணுடியாகயிருக்கும். ஆகையால், கூலி யென்பது தய்யானென்னும் கூலி கொடுக்கிறவனென்ற அவனுடைய திருநாமத்தில் நின்றும் அடிமைகளென்ற குறிப்புகளுடைய வீதங்கொண்டு ஹக்குடைய வுஜூதெனும் கண்ணுடியில் ஹக்கு தஜல்லியாகிறதற்குச்சொல்லப்படுகிறதா யிருக்கும்,

ஆகையால், வழிப்பாடு கொண்டும் அதற்குக் கூலி கொண்டும் கற்பிக்கும்படிசெய்து கொண்டது உண்டான தெல்லாம் ஹக்கை பல குறிப்புகளும் தேடினதுகொண்டா யிருக்கும். ஆகையால் பல கொள்கைகளில் நின்றும் எதின்பேரில் அவர்களிருக்கிருர்களோ, அந்த ஒன்றைக் கொண்டு அவர்களை தக்குலீஃபெனும் ஏவல் விலகல் செய்வதின் பேரிலும், அதற்குத் தகுந்த கூலிகொடுப்பதின் பேரிலும் ஹக்கை அவர்கள் வருத்துகிருர்கள்.

ஆகையால், கல்குகளுடைய கொள்கைகளில் அவர் களுடைய உள்ளமைகள் தேடினதே அந்த ஒன்றைத்தவிர கூலியெனும் கொள்கை ஹக்கில் நின்றும் அடிமைகள் பேரில் மீளமாட்டாது, அதுகளுக்கு நயமானதும் அதுகளுக்குத் தீங்கானதும்அதுகளில் நின்றுமுள்ளதுதான். அதல்லாத்ததில் நின்று முள்ளதல்லை. ஹக்கில் நின்றும் அதுகளுடைய உள்ளமையளவிற் சேர்க்கப்பட்டகொள்கை களென்னும் ரூபங்களுக்கு வுஜூதைக் கொடுப்பதுண்டு. ஆகையால், கொள்கையுடங்களிலும் அந்தந்த கொள்கை தேடினதே அப்படிக் கொற்ற சொந்தமான ரூபம் அதுகளுக்குண்டும், கொள்கைகளும் விதர்ப்பமாகும். ரூபமும் விதர்ப்பமாகும். அப்போது தஜல்லியாகப்பட்டுக் கொள்கிறது, தங்கரீகம் தேடுகிற விதர்ப்பங்கொண்டு இலாஹிய்யத்தாகிய தஜல்லிகளும், அதுகளுடைய கொள்கைகளும் விதர்ப்பமாகும்.

ஆகையால், பல குறிப்புகளென்ற அடிமைகள் தங்களைத் தாங்களே அதாபு செய்துக்கொள்கிருர்கள், தங்களைத் தாங்களே சுகண்டியாக்கியும் கொள்கிருர்கள். ஆகையால் வழி கேட்டிலாகி அதாபுக்குப் பாத்திரமான வேளை அல்லாவிடத்தில் நாயனே! எங்களால் யாதொரு உசும்புதல் ஒடுங்குதலில்லையே, நேர்வழி காட்டுகிறவனும் நீயே, வழி கெடுக்கிறவனும் நீயே, எங்களுக்கு நேர் வழியை ஊசாடச் செய்தாயாகில் நாங்கள் பாவத்தை



நாடோமே என்று கேட்பாராகில் அவர்கள் பேரில் கேடாக கடப்பாகிய முகாந்திரம் அவனுக்குண்டு.

ஏனென்ருல், அதனதின் கொள்கையும்,இயற்கையும் எதின் பேரிலாயிருக்கிறதோ அதையறிந்து அதனதின் வீதங்கொண்டுதான் தஜல்லியாவான். முன் எழுதப்பட்ட தில் ஹக்கும் அதினுடைய அஸ்மாக்களும் தரிபாடாகிய குறிப்புகளென்னும் கண்ணுடிகளில் வெளியாகுமென்றும், பல குறிப்புகளும் ஹக்குடைய உஜூது என்னும் கண்ணுடியில் வெளியாகுமென்றும், அதில் எல்லா ஒவ்வொன்றும் மற்ற ஒன்றுக்கு கண்ணுடியாகயிருக்கு மென்றும் சொன்னதாவது, அல்லாஹுத் தஆலா இன்னதின்னது இன்ன விதமென்று அறிந்த சமுகத்திலே நாயகத்தனத்தளவிற் சேர்க்கப்பட்ட திருநாமங்களின் அந்தரங்கங்கள் ரூபமாகயிருந்தபடி தரிபாடாகிய குறிப்பு களெனும் கண்ணுடிகளில் ஹக்கும் அவனுடைய அஸ்மாக் களும் வெளியாகிறதென்றும், பல குறிப்புகளும் ஹக்குடைய வுஜூதெனும் கண்ணுடியில் வெளியாகிற தென்றும் சொல்லப்படும்.

அதின் விபரம் எப்படியாளுல் ஒரு குயவன் * மண்ணி ளுல் சில பாண்டங்களை யுண்டுபண்ணச் சேகரமாய் மண்ணை எடுத்து இன்ன இன்ன வஸ்துவை வைப்பதற்கு இன்னின்ன பாண்டங்கள் செய்யவேணுமென்றுக் கருதிய படி தன்னுடைய கருத்தில் சகலதையும் ரூபமாக்கிப் பார்ப்பதற்கு அவனுடைய கருத்தில் தரிபட்டக் குறிப்பு களென்று சொல்லப்படும்.

அதின்படி தான் பிற்பாடு வெளியாகும். தவிரவும், ஒரு ஆலவித்தில் ஆல்முழுதும் சுருண்டதாயும், ஆல் முழு வதிலும் வித்தைத் தோற்றப்படச்கூடிய கண்ணுடியாயும் அது முழுதும் அதிலே தோற்றக்கூடிய கண்ணுடியாயும் உவமான மாக்கிக் கொள்.

---

* குயவனுக்கும் ஸானிஃ என்று பெயர். அல்லாவுக்கும் ஸானிஃ என்று பெயர்.

ஆனல், ஹக்குடைய உஜூதெனும் கண்ணுடியில் கல்கெனும் குறிப்பு தோனுகிறதும். கல்கெனும் உஜூதென்னும் கண்ணுடியில் ஹக்கு வெளியாகிற விதமும். மஃரிபாமுஷா ஹதாவை விபரம் செய்யுமிடத்தில் துலாம்பரமாகும்,

ஹக்குடைய அஸ்மாக்கள் சகலதும் அதனதின் ஊர்ஜிதம் நடப்பதற்குள்ள ஒவ்வொரு குறிப்பைத் தேடும், ஹக்குடைய இஸ்மில் தய்யானென்பது கூலி கொடுக் கிறவனென்ற மஃனவையுடையது. அந்த இஸ்முடைய மஃனு,வெளியாகிறதற்கு அடிமைகளென்னும்குறிப்புகளே. ஏதும் எங்களுக்கு ஓர் வழிப்பாட்டைக் கற்பித்துக் கூலியைத் தாவென்று தேடுகிறபடி அதினுடைய தஜல்லி நடக்கிறது. ஹாதீ என்ற இஸ்மின்படி அதின் கற்பினைக் குள்ளாகி நேர்வழி பெறுகிறுர்கள். முலில்லு என்ற இஸ்மின் ஊர்ஜிதத்தைத் தங்களில் நடத்தி வைக்கத் தேடுகிறவர்கள் அவ்விதம் நடந்து வழி கெடுகிறுர்கள்.

ஆனல், இப்போது எழுதப்பட்டவைகளால் சகலதும் ஊழ்விதிப்படி நடப்பதும் தவிர எவனெவன் என்ன கஷ்டப்பட்டாலும் நரகத்திற்குப்பாத்திரமானவன்சொர்க்க வாதியாயும், சொர்க்கத்திற்குப் பாத்திரமானவன் நரகவாதியாயும் ஆகிவிடுகிறதில்லை யென்றும் விளங்கப் படுவதால், நாம் பலவிதமான இபாதாத்துச் செய்யவும் மனமிச்சித்தவைகளை மறுத்து நடப்பதிலும் வீணன மனமடிவும், கஷ்டமும் நேரிடுகிறது, தற்காலத்தில் அநேக நஷ்டத்தையுண்டு பண்ணுகிறதா யிருக்கிறதே என்ற ஊசாட்டம் உன்னில் உண்டாகுமானல் அதை நீக்காமல் அந்த எண்ணத்தில் தானே தரிப்பட்டு நடப்பா யாகில், அதுவே நரகத்துக்கு வழி. பல் (அன்றியும்) அதுவே நரகமென்றெண்ணிக் கொள். ஏனென்றுல். ''கல்லா லௌத்தஃலமூன இல்மல் யக்கீன் லதறவுன்னல் ஜஹீம தும்ம லத்தறவுன்னஹா அய்னல் யக்கீன்'' நீங்கள் நிச்சயமாகிய அறிவாக அறிவீர்களானல்,திட்டவட்டமாய்



உங்கள் உள்ரங்கத்தில் நரகத்தைக் காண்பீர்கள்.அப்பால் நிச்சயமாக கண் காட்சியாக காண்பீர்களென்றும், அல்லாஹுத் தஆலா குருஆனில் திருவுளமாகியிருக் கிருன்.

சீமானென்ற பேரை ஏற்க, அல்லது தன்னுடைய கனுஅத்தைப் போதுமான மட்டில் போதுமாக்கிக்கொள்ள நாடினவர்கள் அதற்குத் தகுத்த நடப்பை எடுக்காமல் ஊழ் விதிப்படி நடக்குமென்று பிணம்போலிருந்துவிட்டால் தரித்திரவானென்றும்,சோத்துக்கில்லாமல்சாகக்கிடக்கிறவ னென்ற வருணிப்பையும் உண்டாக்கிக்கொள்வானல்லாது வேறில்லை, உலகத்தில் ஒவ்வொரு முயற்சியாலும், கோலத்தாலும், அதற்குள்ள வர்ணிப்பையும்,அவைகளால் வரும் நயத்தையும். தீங்கையும் அனுபவிக்கிறதுபோல் தீனிலும் அப்படித்தான். தீனுடைய சிர்றில் இப்போ தெழுதப்பட்ட சிர்றைப் பார்க்கிலும், மேலாம்பரமான சிர்ருகிறது, ஆலத்திலுண்டான பல இடம்பாடாகிய குறிப்புகளென்னும் கல்குகளாகிறது, அறவே யில்லாத்த தென்கிற அதினுடைய அடி மூட்டின்படிக்கே இருக்கிற தல்லாது வேறில்லை,

சகலதும் இன்ன இன்ன விதமானக் குறிப்பென்று குறித்தபடி வெளியாகினதிலும் அதுகளுக்கு யாதொரு வுஜூதும் கிடையாது, உண்டானதுகளின் கொள்கை யுடைய ரூபங்களைக் கொண்டு அணைந்ததாக ஹக்குடைய வுஜூதைத் தவிர வெளிரங்கத்திலும் யாதொரு உஜூதும் கிடையாது,

ஆகையால், பலவித தஜல்லியெனும் வெளியான ரூபங்களைக் கொண்டு இன்பம் பெறுகிறதும், துன்பம் பெறுகிறதும் ஹக்கேயல்லாது வேறில்லை. அவன் நாடினல் அவனுடைய கல்கைக் கொண்டு அவன் தனக்கு வழிபட்டுக் கூலியை வழமையாக்கிக் கொள்கிருன், இதற்காகத்தான், பைத்து சொல்லப்படுகிறது.

**பல்பஹ்று பஹ்றுன் அலா மாக்கான மின்க்கிதமி**
**இன்னல் ஹவாதி:த அம்வாஜுன் வஅன்ஹாறு**

சமுத்திரம்பூர்வீகத்திலாயிருந்தபடி சமுத்திரம்தான். அதில் புதுசாயுண்டாகிறதுகள், அலைகளும் ஆறுகளுமாயிருக்கு மென்றும், ⁂பொன்னென்றதில் பல பணியதுமாகி பேறும் உண்டாக்கினேன்தான், அஹ நாமென்றும், இன்னமும் ஆராய்வுடன் எதைப் பார்த்தாலும் வுஜூதது ஒன்றென்பதற்கு அத்தாட்சியாகு தல்லாது வேறில்லை. இன்பமென்றும், துன்பமென்றும் சொல்லப்படுவது உண்டான வஸ்துக்களின் வர்ணிப்பில் நின்றுமுள்ளதா யிருக்கும், அது இரண்டையும் ஹக்களவிற் சேர்த்ததா கிறது. இரண்டு பாதையில் ஒன்றுக்காயிருக்கும் அது. இறங்கும் தலத்தில் உண்டானதென்ற வருணிப்புகளைக் கொண்டு அது வருணிப்புப் பெறுவதாலும், இன்னமும் உண்டான தெங்கிறதும் அதினுடைய வருணிப்புகளும் ஹக்களவில் மீளுகிறதற்காக வேண்டியுமாயிருக்கும். எல்லாமொன்றே ஒன்றென்கிறதைப் பிடித்துப் பார்க்க அடங்கலும் அதிலே மாண்டதாகவே யிருக்கிறது, ஆகையால், இன்பமுமில்லை,துன்பமுமில்லை ஏனென்றால், உண்டானதுக்கே வுஜூதில்லை யென்றால் இதினுடைய பலவித வர்ணிப்புக்கு எப்படி வுஜூதுண்டாகியிருக்கும்.

---

⁂ பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னில் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன் கரணங்களாம்
தன்னில் மறைந்தது தன் கரணங்களே
குன்னென் றெழுந்தது தன்வடிவாகி
கூடுமதுதானே முச்சுடராகி
மின்னென் றெழுந்ததில் வெளிச்சமுமாகி
மீண்டுமவ் வொளிதானே மின்னுள்ளொடுங்கி
சொல்லடி பெண்ணே சொல்லாயோ பெண்ணே
துய்மை மயவெளிதன்மயம் பெண்ணே



இதற்காகத்தான், (பைத்து)

**வஅஸ்லமுத்தீன வத்துன்யா லித்தாலி பிஹா**
**வஸய்ய றுல்கல்ப லில் மஹ்பூபி அவ்த்தானு**

தீனெனும் ஆகிறத்தையும், துன்யாவையும் அதுகளைத் தேடுகிறவனுக்குச் சாட்டிப் போட்டு கல்பை மஹ்பூபுக்குக் குடியிருக்கும் தானங்களாக ஆக்கிக்கொண்டார்கள் என்று ஆரிபீன்களின் ஒருவர் சைக்கினை செய்தார்கள்.

## பஸ்லுன் (பிரிவு)

தீனுகிறது இரண்டு தீனுகயிருக்கும். முதலாவது அல்லாவிடத்திலேயும் ஹக்குத் தஆலா அவருக்கு அறிவித் தானே அந்த ஒருவரிடத்திலும் ஹக்கு அவருக்கு அறிவித் தானே அந்த ஒருவர் அவருக்கு அறிவித்தாரே அந்த ஒருவரிடத்திலும் தீனுகயிருக்கும். இரண்டாவது கல்குகளி டத்தில் தீனுகயிருக்கும், அதை அல்லாஹுத் தஆலா மற்றவர்கள் உறுதிபெறும் பொருட்டு சொல்லிக் காட்டி யிருக்கிறான்.

அல்லாவிடத்தில் தீனுகயிருக்கிறதைத் தான் அல்லாஹுத் தஆலாத் தெரிந்துகொண்டான். இன்னம் கல்குகளிடத்திலுள்ள தீனைக்கான மேலாம்பரமான பதவியை அல்லாஹுத் தஆலா அதற்குக் கொடுத்தான், அந்த தீன் தான் அன்பியாக்கள் கொண்டாடி வந்து அவர்கள் மூலமாய் மற்றவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

கல்குகளிடத்திலுள்ள தீனென்றது ஹக்குடைய நூர் கொண்டு நேர்வழி பெற்று அம்றுடைய ஆலத்திலும் கல்குடைய ஆலத்திலும் யோசித்துத் தாங்களாக தங்க ளுடைய நப்சுகளை யடக்கி யொடுக்கி சகல இச்சைகளையும் விட்டு நீங்கி கல்குகளை விட்டுத் தனித்து வைத்த ஹிம்மத்தைச் சறுகவிடாமல் ஈசா அலைஹிஸ்ஸலாமுடைய

மார்க்கத்திலுள்ள பாதிரிமார்கள் நூதனமாகச் செய்ததாக யிருக்கும். அப்படிப்போல் சரியான அநேக மெய்ஞ்ஞானிகளும் தெண்டிக்கிறார்கள்.

ஆனால், இமாம் அப்துல் கரீமுல் ஜியலிய்யி றலியல்லாஹு அன்ஹு தங்களுடைய இன்சான் காமிலென்னும் கித்தாபில் அறுபத்தி மூன்றாவது பாபில் சகல தீனுடைய ஸிர்றுகளைப் பேசி வருகிறதில் விதர்ப்பமாகிய சகல மார்க்கங்களும் பத்து (அஸ்லென்றும்) அதிலுள்ள பிரிவுகள் மிருத்திருப்பதால், தீர்ச்சையாகா தென்றும் சொல்லியிருப்பது (புகூஸில்) சொல்லியபடி இரண்டு தீனென்று மேலே யெழுதினதற்குப் பிணங்காது. ஆராய்ந்து கொள்ளவும், இன்சான்காமிலில் சொல்லியபடி மிகுந்த சுருக்கமாய் பழவரக்காட்டு ஜான்முஹம்மது லெப்பைஹறில் ஆலிம் நாயகம் தர்ஜுமாச்செய்திருப்பதைப் பார்த்துக் கொள்ளவும். ஆனால் அதை அவர்கள் விரிவாக்காமல் சொல்லியிருப்பதைத் தாறுமாறாய் விளங்காதே. மொத்தத்தில் தீனென்பது வழிப்பாடென்பதை மறந்து விடாதே. வழி கூடி நடப்பதில் சரியான பாதையளவில் போய் தீபரம் நாடும் தலத்தை யெத்திக் கொள்கிறது முண்டு, பாதை வழித் தெரியாமல் பாதை தப்பி அநேக கஷ்ட நஷ்டத்துடன் துன்பப்பட்டு வருத்தப் பட்டு மதிமயங்கி பொறிகலங்கி அப்பால்எத்திக் கொண்டாலும் அவரவருடைய தகுதிக்குத் தக்கபடி இன்பத்தை யனுபவிப்பார்கள்,

ஒரு இராஜனிடத்தில் சிம்மாசனத்தில் ஒன்றாகச் சரியிருப்பு இருப்பவர்களும், அப்புறமிருப்பவர்களும் நிற்பவர்களும் மேலிட்ட பணிவிடையால் மேலிட்ட சுகண்டியிலும் தாழ்ந்த பணிவிடையால் தாழ்ந்த சுகண்டியிலும் பல பல விதமிருப்பார்கள். அவரவர்களுடைய கருத்துக்கும், தகுதிக்கும் தக்கபடியே அவர்களுடைய முயற்சிகளைக் கையேற்றுக் கொள்ளப்படும்.



ஒருபோது ஈசா அலைஹிஸ்ஸலாம் கானகத்தில வழி கூடி நடக்கும்போது, தோல்வேலைசெய்கிறஒருசெம்மான், சுஜூதிலிருந்து சொல்லுகிறான். நாயனே! நீ ஏறுகிற கழுதையை எனக்குக் காண்பித்தாயானால், அதற்கு அழகான ஒரு சேணம் ஜீன் சரிக்கட்டி வைப்பேன் என்று மிகுந்தப் பேராசையுடன் சொல்வதைக் கேட்டு. ஈஸா அலைஹிஸ்ஸலாம் ஒய் புத்தியில்லாதவனே! நாயனுக்குக் கழுதையுமிருக்குமோ? அவன் கழுதைமீதினும்ஏறுவானோ வென்றவுடன், அல்லாஹுத் தஆலா, ஓய் ஈஸாவே! நம்முடைய அடிமைக்கும் நமக்குமிடையில் திரையை உண்டாக்காதிரும், அவனுடைய தகுதிக்குத்தக்கது நம்மை முனாஜாத்துச் செய்ததை நாம் அதிக சந்தோஷத் துடன் ஒப்புக்கொண்டோம் என்று உத்தரவாச்சுது,

இன்னமும் ஒருபோது றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ஸவ்தா வென்ற வெள்ளாட்டியைப் பார்த்து அல்லா எங்கே யிருக்கிறானென்றபோது வானத்திலென்றவள் சொன்னவுடன் கஃபாவையுடைய நாயனை இவள் ஈமான் கொண்டவள் என்றார்கள்,

இன்னமும் ஒரு கோவிலில் இருந்த விக்கிரகத்தை அதிக குஷூவுடன் பூசித்துக்கொண்டிருந்த ஒருவருடைய கூப்பிடுதலுக்கு அல்லாஹுத் தஆலாவிடத்தில் நின்றும் லப்பைக்க என்று மாறுத்தாரம் உண்டானதாக அஷ்ஷைகுல் அக்பர் நக்கல் செய்திருக்கிறார்கள். ஆனால், இன்சான் காமில் என்னும் கித்தாபில் பலவிதமான குப்பாறுகள் தீர்மானம் ஒரு வகை இன்பம் பெறுகிறதாக யிருந்த போதிலும். நீண்ட காலம் நரகலோகத்திலிருந்து தீர்மானமானதுன்பங்களை யனுபவித்ததின்பின்னாலல்லாது வேறில்லை யென்று சொல்லுகிறார்கள்.

அடுத்தாமையாகச் செம்மானுடைய ஆகத்திலும் சவ்தாவென்ற வெள்ளாட்டியுடைய ஆகத்திலும் அப்பால் விக்கிரகத்தைப் பூசித்தவனுடைய செய்தியையும் பேசி வந்ததில் ஒரு கேள்வியுண்டாகி இருக்கிறது. அதென்ன

வானால், மேற்படி மூவரும் திட்டவட்டமான காபிறென்று
லாஹிரில் நாம் ஹுக்கும் செய்வதும் தவிர அவர்கள்
சொன்னதைச் சரி கண்டவனையும் முர்த்தத்து என்றாக்கி
லாஹிர் ஷறீ அத்தின்படி அவர்களைக் கொன்று போடும்
படிக்கும் ஹுக்குமுண்டாகியிருக்கிறதே தவிரவும்
உலகத்தில் குப்பாறென்று சொல்லப்படுகிறவர்களெல்லாம்
ஒவ்வொரு விதம் மேற்படி மூவரும் கொண்டிருக்கிற
இஃத்திக்காது போல் கொற்ற ஒவ்வொரு வகை நிருணயங்
களைத் தானே விசுவாசித்திருக்கிறார்கள். அப்படியிருக்க
அவர்களோடு போர்ச் செய்யும்படிக்கும் போர்க் களத்தில்
மடிந்து போன முஸ்லிமுக்கு ஜயம் பெறுதலும் கிடைக்க
வேண்டிய தென்னவென்று கேட்கப்போதும்.

அறிந்து கொள்! இந்தக் கேள்விக்கு ஜவாபுசொல்வது
கொண்டு புக்லாயிருக்கத்தகுமாகிய கேள்வியாயிருப்பது
டன் நானெழுதுவதை ஆராய்ந்துபார். குப்றென்பதுக்குப்
பொருளாவது திரை என்றதாயிருக்கும். காபிறென்பது
மறைந்தவன் தடைப்பட்டவனென்றதாகயிருக்கும். ஆனால்
ஹக்கை விட்டுத் தடையாகி மறைந்தவனும் உண்டு.
தீனை விட்டுத் தடையாகி மறைந்தவனுமுண்டு, முஷ்ரிக்
கானவர்கள் ஹக்கை விட்டும் மறைந்தவர்கள் வேதத்தை
யுடைய எஹூதீ நஸாறாக்கள் தீனை விட்டுத் தடுக்கப்பட்ட
வர்கள். ஹக்கை விட்டுத் தடுக்கப்பட்டவர்கள், தீனைவிட்டு
தடுக்கப்பட்டவர்களாகவே யிருப்பார்கள், தீனை விட்டுத்
தடுக்கப்பட்டவர்கள் ஒரு வேளை ஹக்கை விட்டுத் தடுக்கப்
பட்டவர்களாக இருக்க மாட்டார்கள்.

அதென்னவானால், முஷ்ரிக்கானவர்கள் பல வஸ்து
வுக்கும் அது தன்னிலே ஒவ்வொரு குணபாட்டைக்கண்டு
அவைகளை யெல்லாம் நாயனென்பார்கள், வேதத்தை
யுடையவர்கள் ஒரே நாயகனை வணங்குவதுடன் வழிப்
பாட்டின் முறைத் தவறி நிற்பார்கள், ஆனால், வேதத்தை
யுடையவர்கள் வேறே ஒரு வஸ்துவுக்கு குணபாடு
உண்டுமென்றால், முஷ்ரிக்காகி விடுவார்கள். முஸ்லிம்



எண்ணினாலும் அப்படித்தான், இந்த இரண்டு
குப்ரிலும் குப்று ஜஹ்லெனும் அறியாமை
யினாலுள்ள குப்றும்,குப்று நிபாக்கென்னும்
(ல,ா யி லா ஹா வு லா,யி வ லா யி லா ஹா வு லா யி)
இந்தக் கூட்டத்தளவிலாவது.அந்தக் கூட்டத்தளவிலாவது
சேராமல் முஸ்லிம் முஷ்ரிக்குச்சகலருடனும் உள்ளொன்று
புறமொன்றாகயிருக்கிற குப்றொன்று, குப்று இனாதெனும்
மூரியாட்டமாய் முரண்டாயிருக்கிற குப்றொன்று, குப்று
ஸந்தக்கத்தென்னும் எந்த வழிப்பாட்டைச் சொன்னாலும்
தர்க்கிப்பதுடன் முஷ்ரிக்காவது முஸ்லிமாவது கொண்டாடி
வருகிற நல் நடத்தையைப் பழிப்பதுடன் தன் இஷ்டப்படி
ஏதோ ஒரு வணக்கங்கொண்டுத்தான் ஈடேற்றம் பெற்றுக்
கொள்வதுபோல் பேசுவதுடன் சில சமயம் நிபாக்கில்
ஒரு வகையும் அவனிலுண்டாகி இருக்கும்.

இன்னமும் குப்று ஆதிய்யி என்னும் வழமையளவிற்
சேர்க்கப்பட்ட குப்றொன்று, அதென்னவானால்,முன்னோர்
கள் கொண்டாடி வந்ததுபோல் நடக்கவேணும் என்பதில்
அதுவே சரியென்று நம்புதலாய் சொல்கிறதுமுண்டும்.
அல்லது சரித்தப்பென்று 'கருத்துக்குத் தோணப்பட்டிருப்
பதுடன் நாமென்ன செய்கிறது முன்னோர்கள் ஏற்படுத்திய
படி நடந்து தொலைக்க வேண்டியதுதான். முறைமை
யென்று தங்களுடைய ஆராய்வில் தோணுதலானதைப்
பின் செல்லாமல் வழக்கத்தையே பெரிதாகக் கண்டு
காலத்தைக் கடத்திப்போடுகிறது. இவ்விதமாய் குப்றுகள்
பலவிதமிருப்பதில் குப்று ஜஹ்லாகயிருப்பவர்களுக்கு
தீனுடைய விபரங்களை யெவ்வகை விரிவாய்ச் சொல்லிக்
காட்டினாலும், குப்றுக்கும் இஸ்லாமுக்கு மிடையிலுள்ள
(பற்க்கு) வித்தியாசமின்னதென்றும் ஒருபோதும் விளங்கிக்
கொள்ள மாட்டார்கள். அவர்கள் காபிறுடைய கோல
மாகவே யிருந்து மாண்டுபோவார்கள். சிலர்முஸ்லிமுடைய
கோலமாகவேயிருந்தும் குப்றுக்கும், இஸ்லாமுக்குமிடையி
லுள்ள வித்தியாசம் இன்னதென்றுதெரியாமலிருப்பதுடன்

இஸ்லாமிலேயேயிருந்து மாண்டு போவதுடன் இஸ்லாமுடைய ஹுக்குமை அவர்களின் பேரில் நடத்தாட்டி வைத்து தொழுவித்தே அடக்கிப் போடுவோம். இந்த முஸ்லிமும், இந்த காபிறும் தன்னில் ஒன்ருயிருக்க அவனே முஸ்லிமென்றும். இவனைக் காபிறென்றும் ஹுக்கும் செய்வோம்.

ஆனலிருவரும் இஸ்லாமுடைய வணக்கத்தைச் சொன்னலும், குப்பாறுகளுடைய வணக்கத்தைச்சொன்ன லும் இரண்டையும், ஆண்டவனுக்குள்ள பணிவிடையென்றே ஏற்றுக்கொள்வார்கள். அதிகமான துஷ்ட்டத் தனங்கள் செய்யமாட்டார்கள். முனபிக்கானவன் ஒன்றையும் ஏற்க மாட்டான். முஸ்லிமுடைய கோலத்திலும் முனபிக்கிருப்பான். காபிறுடைய கோலத்திலுமிருப்பான். அப்படியிருக்க, வெளி கோலத்தைப் பார்த்தே நாம் ஹுக்கும் செய்வோம், காரியம் தன்னில் இரண்டிலும் அவன் சேரமாட்டான். குப்று ஸந்த்தக்காவென்னும் ஸிந்த்தீக்கென்ற காபிறு ஒரு மார்க்கத்திலும் சேராதிருப்பதுடன் கோலத்தைப் பார்த்தே ஹுக்குமை நடத்தாட்டி வைக்கிருேம். ஆனல் குப்று இனதென்பது எப்படியிருந்தாலும் நம்முடைய குல ஆசாரத்தை விடக் கூடாது, அதற்கு மாற்றமாய் சொல்பவர்களுடன் பொருள் உயிரிழந்தாலும் போர்ச் செய்வதல்லாது சறுகக் கூடாதென்ற துணிகரத்தோடிருக்கிறது. இவனைப்பார்த்துத்தான் ஏதும் விவேகமில்லாத ஏழைகள் ஜஹ்லாக குப்ரிலாகிப் போகிறதும். (ஆதத்தை) வழக்கத்தைப் பார்த்து அதின் படியே இவர்களைத் தொடர்ந்தே குப்ரில் தரிப்பட்டுப் போகிறது மாயிருக்கிறது. அதற்காகத்தான் குறுஆனில் (பகாத்திலூ அஇம்மத்தில் குப்ரி)குபுறுக்குஇமாம்களென்ற முன்னிலை யானவர்களை கொன்று போடுங்களென்றுக் குறிப்பாய் ஏவப்பட்டுது.

இப்போதெழுதப்பட்டதை ஆராய்ந்தாயாகில் முஸ்லிமுடைய கோலத்தில் முனபிக்காய் காபிறைக் காணக்



கெட்டவனுமிருப்பான். ஸிந்த்தீக்குமிருப்பான். காபிறென்றும், முஸ்லிமென்றும் சொல்லக் கூடாத யாதொரு அறிவும் இல்லாதவர்கள் இரண்டு கோலத்திலுமிருப்பார்கள். இரண்டிலேயும் வழக்கமொன்றையே மார்க்கமாகக் கண்டு அநேகரிப்பார்கள். ஆகையால் இஸ்லாமுடைய கோலத்தில் இருப்பவர்களில் அநேகர்களும் வெட்டுக்குப் பாத்திரமாகிய முனபிக்காகவும் ஸிந்த்தீக்காகவும் வழக்கமொன்றையே மார்க்கமாக்கிக் கொண்டவர்களாயுமிருப்பார்கள். காபிறுடைய கோலத்திலிருப்பதுடன் யாதொரு பகுத்தறிவும் தெரியாதிருப்பதால் ஹக்கீகத்தில் அவர்களைக் கொல்லக் கூடாதவர்கள் அநேகமிருப்பார்கள். குப்ரிலிருப்பதுடன் அநேகர்கள் இஸ்லாமையுண்மை யென்று நம்பியும் இஸ்லாமிலிருப்பதுடன் அநேகர்கள் இஸ்லாமை யுண்மையென்று நம்பாமலுமிருக்கிருர்கள்.

ஒருவன் தொழுகை முதலாகிய நல்ல அமலைச் ஜாதிமானம் குல ஆசாரத்துக்காகக் கொண்டுவருவதுடன் அறவே அதில் ஒரு பயனில்லை என்றெண்ணியிருக்கிருன். ஒருவன் யாதொரு நல் அமலைச் செய்யாதிருப்பதுடன் நிர்ணயத்தில் அமல் செய்தால் ஈடேற்றம் பெறலாம் நாம் தப்பிதவாளிதானென்றெண்ணி யிருக்கிருன். இவ்விருவரிலும் யார் மூமின்? யார் காபிறென்று ஆராய்ந்துபார்.

இப்படியெல்லாம் அளவிடக்கூடாத பல பிரிவாக இருப்பதால் மொத்தத்தில் ளாஹிரு நமக்குதெரியுமல்லாது வேறில்லை. ஆகையால் காபிர்களோடு போர்ச்செய்யும்படி ஏவப்பட்டது. ஏனென்ருல், அவர்கள், அவர்கள் பாட்டிலிருக்கட்டு மென்று விட்டுவிட்டால் அது மேலிட்டு அல்லாவுடைய வஹ்தானிய்யத்தைத் தரிபடுத்துகிறது நாளிலே மறைந்து போய் விடும். ஃபத்துறத்துடைய காலத்தில் மறைந்து போனதுபோல். இதற்காகத்தான் அவர்கள் இஸ்லாமுடைய இராஜதானியத்துக் குள்ளடங்கி ஏதும் திறைக் கொடுப்பதாய்க் கட்டுப்பட்டால் விட்டுவிடும்படி

யாய் ஏவப்பட்டது, எப்படிப் போலானால், திரேகத்தில் ஒரு உறுப்பில் ஏதும் புழுவெட்டு அல்லது ஒரு ஒரு நீருண்டாகி அது மேலிட்டுக் கொண்டு வந்தால் கூர்மை யுடைய பரிகாரிகள் அந்தப்பிணி பரவாதிருக்கும்பொருட்டு அந்த உறுப்பை வெட்டி யெடுத்துப் போடச் சொல்லு கிறார்கள், மேலிடாமல் அந்த உறுப்பிலே அந்த நீர் தரிபட்டு நின்றால் நாளிலே அதை ஆற்றுகிறதல்லாது வெட்டமாட்டார்கள்.

இப்படிப் போல் உயிருடையதெல்லாம் ஒன்றே யல் லாது வேறில்லை, குப்றென்பது சில்வுறுப்பில் வந்த நீர் போலாகயிருக்கும். அது வேறே சவுக்கியமுள்ள இஸ்லா மெனும் உறுப்பைக் கடக்காமல் தன்னிலே யடங்கி நின்றால் நாளிலே அதை யடக்கி மருந்து செய்வதுடன் சவுக்கியத்தையும் ஆசைவைப்போம், சுகமாயிருக்கிற உறுப்புக்குக்கடந்தால் அதை வதைத்திடுவோம். தவிரவும் இஸ்லாமென்ற பயிர் செய்ததில் பயிருக்கு கெடுதலான குப்றெனும் வேரே புற்பூடு முளைத்துக் கெடுதல் செய்வ தானால் வேர்ப்பிடுங்கலாய்ப் பிடுங்கிவிடுவோம்,பயிருக்குத் தாக்கமாய் அல்லது அதுவும் ஓர் வகை வித்தைக்கொடுக் கிறதாயிருந்தால் பிடுங்காமல் விட்டு அதனால் சொற்பப் பிரயோசனத்தைப் பெற்றுக்கொள்வோம்.

ஆனால் மேலே சொல்லப்பட்ட மூவரைக் கொல்லப் படாமல் இரண்டு றஸூலும் கஷ்புடைய ஒரு ஆரிபும் ஏற்றுக்கொண்டதெல்லாம் இம்மூவரால் அதை பார்க் கிலும் மேற்கடக்க முடியாது என்பதை அவர்கள் தெரிந்து கொண்டதல்லாது வேறில்லை. (குல்லுன் முயஸ்ஸருன் லிமா குலிக லஹு) சகலதும் எதற்காக படைக்கப்பட் டிருக்கிறதோ அந்த ஒன்றையே அதற்கு இலேசாய் இணக்கமாக்கப்பட்டதாயிருக்கும் என்று ஹதீதில் சொல் லப்பட்டிருக்கிறது.

இன்னமொரு கருத்து என்னவானால் அல்லாவை அறிந்தவன் எந்த ஸூறத்தில் வெளியானாலும் வணங்கப்



பட்டதெல்லாம்ஹக்கு தானென்றறிவான். புத்துகளானாலும் சரி ஜின்னானாலும் சரி மலாயிக் கத்தானாலும்சரி, ஆகையால் மூவரில் விக்கிரகத்தை பூசித்தவர் ஆரிபானதால் அதை மலுஹறுக எண்ணினாரல்லாது ஷிற்காக்க வில்லை. எது எப்படியிருந்தாலும் நாம் லாஹிறு ஹாலை அறிவோமல் லாது வேறில்லை. ஹல்லாஜுடைய லாஹிர்பேச்சு குப்ருக விளங்கினதால் கொன்றவர்களுக்கு தவாபு கொடுக்கப்படு மல்லாது வேறில்லை. அப்துல் காதிறுல் ஜைலானிய்யி ஆண்டவர்கள் நானிருந்தால் கொல்லாமல் கை தூக்கி விட்டு விடுவேனென்றார்களல்லாது கொன்றவர்களைக் குற்றம் சாட்டவில்லை. குப்பாறுகளில் எத்தனையோ கோடி கத்திக்குப் பயந்து கலிமாச் சொன்னார்கள். வெளி ரங்கத்தில் திட்டவட்டமாய்த் தெரிய அவர்களைக் கொல்லாமல் இஸ்லாமிலே சேர்த்துக்கொண்டார்கள்.

சஹாபாக்களில் ஒருவர் ஒரு சண்டையில் ஒரு காபிரோடு போராடி வெட்டுவதற்கு ஆரம்பிக்கும் சமயம் அவனுடைய இருதயத்தில் இனி நம்மால் முடியாது, நாம் மாண்டு போவதில் சந்தேகமில்லையென்று நிச்சயமாக்கிக் கொண்டபடியால் இனிமேல் தப்பும்வழி கலிமாச்சொல்வது கொண்டல்லாது வேறில்லை யென்றெண்ணி கலிமாச் சொன்னதை அவர்கள் அவனுடைய இருதயத்தில் யாதொரு உண்மை நம்புதலில்லாமல் உயிரையும், முதலையும் தப்பி வைத்துக் கொள்ளச் சொல்லுகிறானென திட்டவட்டமாய் தெரிந்துகொண்டபடியால் அவன்கலிமாச் சொன்னதைப் பாராமல் அவன் கழுத்தை யறுத்துக் கொன்று போட்டார்கள், இது சங்கதி நபியுல்லாவுக்குத் தெரிந்தவுடன் அந்த ஸஹாபியை வருத்தி ஏனிந்தவேலை செய்தீரென விசாரணை செய்தபோது அல்லாவுடைய றஸூலே, நாயகமே, அவன் அல்லாவையும் தங்களையும் உண்மையாய் நம்பி கலிமாச் சொல்லவில்லை. ஆகிலும் என்னுடைய வாளுக்குப் பயந்து தன்னைத் தப்பித்துக் கொள்ள வேண்டி கலிமாச் சொன்னானல்லாது வேறில்லை. ஆனதால் கொன்று போட்டேன் என்று சொன்னவுடன்

நபிநாயகம் அவர்கள் அவரை குறைசொல்லி அவனுடைய கல்பை நீர்பிளந்து பார்த்தீரா என்றார்கள். அதின் கருத்தாவதுலாஹிறில் நமக்குத் தலைசாய்த்தால் போதும். அப்பால் அவனுடைய நிய்யத்துக்குத் தக்கது அல்லா கூலி கொடுப்பான் என்றதாயிருக்கும்.

ஆனால் இதெல்லாத்தையும் விட்டுவிடுவோம். இப்போது நாம் முஸ்லிமென்று கோலங் கொண்டவனில் நடத்தாட்டி வைப்பதை யோசிப்போம். அதென்னவானால் ஒரு முஸ்லிம் தொழுகை, நோன்பு பறுளென்று சொன்னதார்? அதுவெல்லாம் வீண் சொல்லென்றான். அதற்காக அவனை கொல்ல ஆரம்பித்தபோது நான் தவ்பாச்செய்து மீளுகிறேனென்றவுடன் திட்டவட்டமாய் தன்னுடைய உயிரைக் காப்பாற்றும் பொருட்டாய்ச் சொல்லுகிறான். அவனுடைய இருதயத்தில் ஒன்றுமில்லை என்பது பரிஸ்காரமாய் தெரிந்திருந்தாலும் விட்டுவிட வேணுமல்லாது வேறில்லை.

இன்னமும் குப்பாறுகளில் சிலர் நபியுல்லாயிடத்தில் உங்களைக் கொண்டு நாங்கள் ஈமான் கொள்வதானால் ஐந்துநேரத் தொழுகையில் இஷாவென்றும் சுப்ஹென்றும் இரண்டு வேளைத் தொழுகையை நாங்கள் தொழுக மாட்டோம். அது வருத்தமான நேரமாக இருக்கிறது. அப்படி சம்மதமாகி எங்களை சேர்த்துக்கொள்கிறதானால் நாங்கள் உம்முடைய மார்க்கத்தில் வருகிறோம் என்றவுடன், ஓமென்று நபியுல்லா சம்மதித்தபடியால் அப்படியே அவர்கள் முபாயஆ கொடுத்தார்கள். சொற்ப நாளையில் எல்லோரைக் காணவும் இஷாவுக்கும் சுப்ஹுக்கும் முதன்மையாய் ஹாலிருகிறவர்களாயிருந்தார்கள்.

இதை ஒரு மஸ்அலாவாக்கி, நம்மிடம் ஒரு காபிறு அவ்விதம் கேட்டால் அப்படியே சம்மதித்து இஸ்லாமில் வருத்தலாமா? அப்படியே வருத்தினதில் தொழுக முதலே அவன் மவுத்தாகிவிட்டால் அவனை தொழுவித்தடக்கிறதா அனந்திரம் முதலானவைகளை காபிறென்றாக்கிப் பங்கிடு



கிறதா அல்லது இஸ்லாமென்றாக்கி பங்கிடுகிறதா? இந்த நிருணயத்துடன் இருக்கும்போதே நம்முடைய பெண்ணை அவனுக்கு விவாகம் செய்து கொடுக்கலாமா? இவைகள் ஒன்றும் கூடாதென்றால் நபியுல்லா அவ்விதம் சம்மதித்து முபாயஆ கொடுத்ததில் மற்ற இரண்டு வக்தை தொழாமலும் நிருணயம் கொள்ளாமலும் இருக்கும் வேளை அவர்கள் மவ்த்தாகி விட்டால் எவ்விதம் ஹுக்கும் செய்வார்கள். இவைகளுக்கெல்லாம் தீர்ப்புண்டாகி இருக்கிறதல்லாது வேறில்லை. அல்லா வானத்திலென்ற வெள்ளாட்டியைக் காணவும் செம்மானைக் காணவும் இவன் குறைந்தவனென்று எப்படிச் சொல்வோம். ஆராய்ந்துக்கொள்.

ஆகையால் மொத்தத் தொகையில் கோலத்தில் காபிறாயும் உள்ரங்கத்தில் மூமினாயும் இருப்பவனைக் கொன்று போட்டதாலும் வெளிரங்கத்தில் இஸ்லாமாயும் உள்ரெங்கத்தில் காபிறாயும் இருப்பவனில் இஸ்லாமுடைய சகல **ஹுக்குமையும்** நடத்தி வைப்பதாலும் நாம் குற்றவாளியாக மாட்டோம். எனினும் முந்தினவனைக் கொன்றதால் ஜிஹாதுடைய தவாபும், அல்லாவுடைய கலிமாவை மேலாம்பரமாக்கி வைத்த பெருபேறும் இவனைச் சேர்த்துக் கொண்டதால் இஸ்லாமைப் பரிபாலனம் செய்த தவாபும் கிடைக்குமல்லாது வேறில்லை. ஏனென்றால் அந்தரங்கம் தெரியாத நாம் ஆகையால் நம்முடைய எண்ணப்படிதான் கூலி கிடைக்கும். "**அன இந்த லன்னி அப்தீ பீ பல்யுஹ்ஸின் பியல்லன்ன**). நான் என்னுடைய அடிமையுடைய எண்ணத்திடத்திலா யிருக்கிறேன். என்னைக் கொண்டு அவன் எண்ணத்தை அழகாக்கி வைத்துக் கொள்ளவும்" என்று ஹதீது குதுசியில் அல்லா சொன்னது போல். ஆனால் கஷ்பை யுடையவர்களுக்கு மறையாது. ஏனென்றால், சாஹிபு ஸிர்றி றஸூலில்லாஹி ஸல்லல லாஹு அலைஹி வஸல்லம்' என்று சொல்லப்பட்ட றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சிர்றுடைய இல்மைக் கொண்டு சொந்தமாக்கி வைத்த ஹுதைபா றலியல்லாஹு அன்ஹு சில மய்யித்துகளுக்குத் தொழு

விக்க மாட்டார்கள். ஏனென்றால் முனபிக்காக மவ்தாகிற வர்களையும் மூமினுக மவ்தாகிறவர்களையும் அவர்கள் களங்கமற அறிவார்கள். அதற்காகஉமறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹுதைபா எந்த மய்யித்துக்கு ஹாலி ருகித் தொழுகிருர்ளென்று பார்த்து அவர்கள் தொழுதால் தொழுவார்கள். அவர்கள் விலகிக் கொண்டால் இவர் களும் விலகிக்கொள்வார்கள்.

நப்சே ஆராய்ந்து பார். நபியுல்லாவுக்குப்பின் சஹா பாக்கள் நாளையிலே தொழுவித்து அடக்கக்கூடாத முன பிக்குண்டாகி இருந்தால் உன்னுடைய இந்த நாளையில் எப்படியாகிலும் உற்றுணர்ந்து பார்த்தாயாகில் செத் திறந்து போகக் கடவதல்லாது வேறில்லை. அது என்ன வானல் சொர்க்கம் கொண்டு நல்மாராயம் பெற்ற அவர் கள் சொல்மொழிக்கு நேராய் குர்ஆனிறங்கிய அமீறுல் மூமினின் உமறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் எப்போதும் தன்னை பயந்து இந்த ஹுதைபாவிடத்தில் 'றசூலுடைய சிர்றையுடையவரே, என்னிலே ஏதாவது நிபாக்கிருக்கிறதா?' என்று கேட்கிறவர்களாக இருந் தார்கள். அப்படியானல் உன்னுடைய ஹாலெப்படி? உணர்ச்சையாக இருந்துகொள்.

குறுஆனில் அல்லாஹுத் தஆலா திருவுளமானன் ''யாஅய்யு ஹன்னபிய்யு ஜாஹிதில் குப்பாற வல்முனபிக்கீன ஒகுலுள் அலைஹிம் வமவ்வாகும் ஜஹன்னம்.'' நபியே காபிர்களையும் முனபிக்குசளையும் நீர் சங்காரம் செய்து போடும். இன்னம் அவர்கள் மீது கடினமாயிரும் அவாகள் ஒதுங்கும் தலம் ஜஹன்னமெனும் நெருப்புடைய பாதாளக் கிணருக இருக்கும் எனவும் வஅதல்லாஹுல் முனபிக்கீன வல்முனபிக்காத்தி வல்குப்பாற ஞற ஜஹன்னம) ''முனபிக்காகிய ஆண் பெண் சகலருக்கும் குப்பாறுகளுக்கும் ஜஹன்னமெனும் பாதாள கிணற்றின் நெருப்பை அல்லாஹுத் தஆலா வார்த்தைப் பாடு செய்திருக்கிருன்'' என்றும் (இன்னல்



முனபிக்கீன பித்தற்கில் அஸ்பலி மினன்னர்) ''முன பிக்கானவர்கள் நரகத்தில் நின்றும் தாழ்ந்த தட்டிலிருப் பார்கள்'' என்றும் குறுஆனில் அவ்வல் தொடுத்து ஆகிறு வரைக்கும் அல்லாஹுத் தஆலா முனபிக்கூன் களுடைய ஹாலை விரிவாகச் சொல்லிச் சகலருக்கும் உணர்ச்சை பூட்டியிருப்பதுடன் சில முனபிக்குகள் விஷயத்தில் (லாதஃல முஹும் னஹ்னு னஃலமுஹும்) ''நபியே அவர்களை நீர் அறியமாட்டீர். நாம் அவர்களை அறி வோம்'' என்றும் அல்லாஹுத்தஆலா சொல்லி இருக் கிருன், ஆனல், பிற்பாடு சகலதையும் அறிவித்திருப்பதால் இன்னர் முனபிக்கென்றும் அறிவித்தபடி ஹுதைபா வுக்கு அறிவித்தார்கள், ஆகையால், நிபாக்கை விட்டு நீங்கினலல்லாது, ஈமானுண்டாக மாட்டாது,

ஆனலிப்போது எழுதிய ஆயத்துகளைச் சிலர்கள் இது வெல்லாம் காபிர்களுடைய ஹக்கில் அல்லது முனபிக்கு களுடைய ஹக்கில் இறங்கினதென்றும் தன்னை மறந்து உளறுவார்கள். அப்பேர்ப்பட்ட அறிவீனர்களுடைய சொல்லைக் கொண்டு மருளாதே. முனபிக்குகளுக்குள்ள உள்ரங்கமான அடையாளங்கள் அநேகமிருப்பதுடன் குறுஆனுடைய அத்தாட்சி கொண்டு வெளிரங்கமான அடையாளத்தை விட்டு நாம் நீங்கி இருக்கிரேமாவென்று ஆலோசிப்பதில் நீங்காதிருப்பதால் நம்மை திட்டவட்ட மான முனபிக் கென்றெண்ணி அல்லாவிடத்தில் அதை விட்டு நம்மை நீக்கும்படி அஞ்சி பயந்து கேட்கிரேம். குறுஆனில் (வஇதா காமு இலஸ்ஸலாத்தி காமு குஸாலா யுராஊனன்னுஸ வலாயத்குரூ னல்லாஹ இல்லா கலீலா) ''முனபிக்குகள் தொழுகை யளவில் நின்ருர்களானல் மனிதர்களை முகத்துதி வைத்தவர்களாய் சோம்புதல் உடையவர்களாக நிற்பார்கள். இன்னம் அல்லாவை கொஞ்சமாகவே ஒழிய நினைக்கமாட்டார்கள்'' சோம்புதலாக யிருப்பதே னென்ருல் கல்பு ஹுலூருகிற தளவில் அவர்களுடைய ஆசை இழந்து போனதற்காக வேண்டியும் நப்சுடைய அவாவின் அடந்தேத்தியதால் அவர்களுடைய கல்பிலுள்ளத் தங்கரிகம் இருளடைந்திருப்

பதால் அந்த ஹுலூரை விட்டு அவர்கள் விரள்வதற்காக வேண்டியமா யிருக்கும். *(வலாயஃத் தூனஸ் ஸலாத்த இல்லாவஹும் குஸாலா வலா யுன்பிகூன இல்லா வஹும் காரிகூன்'')* இன்னுமந்த முனாபிக்குகள் சோம்புதலுடையவர்களாகவே ஒழிய தொழுகிறதற்கு வரமாட்டார்கள். இன்னம் பொருத்தக் கெட்டவர்களாகவே ஒழிய அல்லாவுடைய பாதையில் செலவு செய்யமாட்டார்கள்'' என்றும் அவர்களுடைய தீர்மானம் காபிருகவே சாவார்களென்று அல்லாஹுத் தஆலா மிகுந்த விரிவாகச் சொல்லியிருக்கிறான்.

ஆகையால் நிபாக்குடைய குணங்கள் அடையாளங்கள் இன்னதென வகை விபரமாக ஈமானுடைய பாடத்தில் விபரிப்போம். கொஞ்சமெங்கிலும் விவேகமிருப்பவன் தொழுகையில் சோம்பல் இருப்பதும் அல்லாவுடைய பாதையில் பொருத்தக் கேடாய் செலவு செய்வதும் தன்னுடைய குணமாக இருந்தால் தன்னை முனாபிக்கென்று நிச்சயித்து அது நீங்குவதற்குள்ள வழிதேடி நடந்தால் அல்லாது கடைத்தேற முடியாது.

ஆகையால் இப்போதெழுதப்பட்டதால் விளங்க வேண்டிய தென்னவென்றால் காபிறிலும் கொடிய காபிருக யிருப்பவன் இஸ்லாமுடைய கோலத்திலும் அவனில் ஒருவனைக் கொல்வது நூறு காபிறைக் கொல்வதைக்காண ஏற்றமாயும் காபிருடைய கோலமாகவே இருப்பவர்களில் அநேகர்களையும் ஹக்கீகத்தில் கொல்லக் கூடாதவர்களாயுமிருப்பதில் லாஹிர் ஷரீஅத்தில் அல்லாவுக்குச் சொந்தம் பெற்ற அடியார்களில் அனேகர்களைக் கொல்லப்படுகிறதாயுமிருக்கிறது.

லாஹிறுலேயும். பாத்தினுலேயும் ஈடேற்றம் பெற்ற அடியார்கள், உலகத்தில் மிகச் சுருக்கமாயிருப்பதுடன் நேர் வழியான மார்க்கம் தீனுல் இஸ்லாமென்று தெரிந்திருக்க மனமுறண்டாய் காபிருகி அந்த குபுரின் மார்க்கப் படிக்கும் பாவமான பொய், கொலை, களவு அநியாயம் முதலாகிய பாவங்களையும் பேணாமல் இஸ்லாமையும் எப்போதும் இகழ்ந்து ஆகத்தீர்மானமான மூதேவிகள் தான் லாஹிரிலும் பாத்தினிலும் கொல்வதற்குப் பாத்திரமானவர்களாக இருப்பதுடன் நரகலோகத்திலும் ஊழி காலம் தரிபடுவார்கள். மற்றவர்கள் அவர்களைத் தொடர்வதால் லாஹிரில், கொல்வதற்குப் பாத்திரமாகி நரக லோகம் புகுந்தாலும் அவர்களைப் போல் அதாபை அனுபவிக்க மாட்டார்கள். அனேகர்களை 'லாஹிர்' காரர்கள் காபிறென்று ஹுக்கும் செய்வார்கள். ஹகீகத்துக் காரர்களிடத்தில் அவர்கள் அவ்லியாக்களாக இருக்கப் போதும்.



ஏனென்றால், இன்ஸான் காமிலில் அப்துல்கரீமுல் ஜியலிய்யி றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள். லாஹிர்காரர் காபிறென்று சொல்லுகிற அப்லாத்தூனுல் ஹக்கீமை, நான் பார்த்ததில் கய்பிய்யாகிய ஆலத்தை ஏக ஒளிவாய் நிறப்பி யிருக்கவும் அவர் பெற்றிருக்கிற சிறப்பைப்போல் அவ்லியாக்களில் தனித்த ஒவ்வொருவருக்கே ஒழிய நான் காணவில்லை. அவரை நீர் யார் என்றேன். நானாகிறது அந்தக் காலத்தில் குத்துபாகவும் அந்த நேரத்தில் தனித்தவனுவுமிருந்தேனென்றார் என்று சொல்வதுடன் அப்பாலிப்படிபோல் எவ்வளவோ அற்புதமாகிய நவமாகிய புதுமைகளை நாம் கண்டிருக்கிறோம். அவைகளை பரத்தவே கூடாதென்று சொல்லுகிறார்கள்.

லாஹிரையுடையவர்கள் திட்டவட்டமாய்காபிறென்று ஹுக்கும் செய்யப்பட்டவர் குத்துபாக யிருந்தால் காரியம் எப்படி என்பதை ஆராய்ந்துபார். உன்னுடைய கேள்விக்காக நாமிவ்வளவு மட்டில் நீளப்படுத்திப் பேசினதில் பலவிதமாயுளப்பமாக இருந்தபோதிலும் உன்னுடைய *(மக்ஸூதுக்கு ஜவாபு)* இதில் சொல்லப்பட்டே யிருக்கிறது, நாம் இல்மைப்படித்திருந்தாலும் இதுவரை எனக்கு *(தௌக்கெனும்)* அனுபவிக்குதல் இல்லாதபடியால் இதுபோற் கொற்றதில் ஹக்கீகத்தில் ஆழமாக

எழுதுவதற்கு என்னுடைய **கலம்** நடக்கிறதில்லை. அல்லாஹுத்தஆலா அதிக சீக்கிரம் எனக்கும், உனக்கும் [illegible]க்கெனும் அனுபவிக்குதலைத் தருவான்,

ஆனால், இன்சான் காமிலெனும் கித்தாபில் பல [illegible]க்கத்தையுடையவர்களும் இன்ன இன்ன காரணத் [illegible]னதை வணங்குகிறார்களென்பதை விபரிப்பதின் [illegible] என்னவென்றால், ஆதம் அலைஹிஸ்ஸலாமுக்கு [illegible] சுஹுபை அவர்களுடைய பிள்ளைகளில் [illegible]இவர்கள் ஈமான் கொண்டு அதின்படி அமல் செய்த வர்களைத் தவிர ஆராய்வில்லாமல் சரீர இச்சையைத் தொடர்ந்தவர்கள் காபிருக இருந்ததில் **ஆதம்** உபாத்தான [illegible] பின் சிலர்கள் ஆதம் அல்லாவுக்கு முடுகுதலாக [illegible]ந்தபடியால் அவரைப் போலொரு ரூபம் செய்து [illegible]கொண்டு அல்லாவை வணங்கினல் அல்லாவுக்கு [illegible]ப்பெறலாமென நாடி அவ்விதம் செய்து வந்தார்கள் [illegible] சிலர்கள் அந்த ரூபம் தன்னையே வணங்கினர் [illegible]. இவர்கள் தான் புத்தை வணங்குகிறவர்கள்,

[illegible] சிலர் இது தப்பிதம், லோகத்துக்கு [illegible]சூடு, குளிர்ச்சி, வரட்சி, சீதளம், என்ற [illegible]குணங்களை வணங்குவோமென்று வணங்கி [illegible]கள்தான் தபாயியிய்யாக்கள் அப்பால் சில[illegible]பென்றெண்ணி இதுகளுக்கு அஸ்லான ஸுஹல், முஷ்த்தரீ, மிர்றீஹ், ஷம்ஸு, ஸஹ்ரு. [illegible] என்ற ஏழு நட்சத்திரத்தை வணங்கி [illegible]தான் ***பலாஸிபாக்கள்***. அப்பால் சிலர் [illegible]வையும் வணங்கவேணுமல்லாது, மற்றதை [illegible]பென்று அதையே வணங்கினர்கள். [illegible] ***[illegible]னவிய்யார்க்கள்*** அப்பால் சிலர் [illegible]னர்கள். இவர்கள்தான் ***மஜூஸிகள்***. [illegible] [illegible]க்கத்தை விட்டுப்போட்டு கெற்பம் [illegible] [illegible]ம் பூமி விழுங்குவது மல்லால் ஒன்று [illegible] [illegible]லென்ன பலனென்றெண்ணியிருந்து



விட்டார்கள், இவர்கள்தான் ***தஹ்ரிய்யாக்களென்றும் முலாஹிதென்றும்*** சொல்லப்படும். அப்பால் வேதத்தை யுடையவர்கள் பல பிரிவானதில் ***பருஹிமிய்யா*** வென்ற வர்கள், இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாமுடைய மார்க்கத்தில் இருக்கிறதாயும், அவர்கள், அவர்களுடைய சந்ததிகளென் றும் சொல்லுகிருர்கள். இன்னம் மூஸவிய்யாகிய யஹூதியாகவும். ஈஸவிய்யாகிய ***நஸாருவாகவும்*** முஹம்மதிய்யாகிய ***முஸ்லிமாகவும்*** பிரிந்தார்கள்.

ஆகக்கூடிய மார்க்கம் பத்தானதால், இதுகளில் எல்லா ஒவ்வொரு கூட்டத்தில் நின்றும், சொர்க்கத்துக்குப் பாத்திரமானவர்களும், நரகத்துக்குப் பாத்திரமானவர்களு முண்டும். ஏனென்றால், முற்காலத்தில் பல கோணத்தில் இருந்த காபிறுகளுக்கும், றசூலுடைய அழைக்குதல் எற்ருதிருந்தபடியால், நன்மை செய்தவர்களுக்கு சொர்க்க மும். தின்மை செய்தவர்களுக்கு நரகமும் அல்லாஹுத் தஆலா கொடுப்பானல்லாது வேறில்லை. ஷரீஅத்துகள் இறங்க முதலே நன்மை என்பது கல்பு ஏற்றுக்கொண்டு றூஹு இன்பமாகக் கண்டதும் தின்மை என்பது கல்பு தள்ளி நப்சு பொருத்தக் கெட்டு றூஹு அதனல் வருத்தப் படுவதல்லாது வேறில்லை.

ஆகையால் இந்தக் கூட்டங்களடங்கலும் அல்லாவை வணங்க வேண்டியபடியே வணங்குகிருர்கள். ஏனென்றால், அவன் தனக்காக வேண்டியே அவர்களைப் படைத்தான். அவர்களுக்காக வேண்டியல்ல. அவர்கள் அவனுக்குடைய வர்கள், அவன் பாத்திரமாயிருக்கிறதுபோல் அப்பால் அல்லாஹுத் தஆலா இந்தக் கூட்டங்களில் அவனுடைய அஸ்மா சிபாத்துகளின் அந்தரங்கங்களை வெளியாக்கி அதடங்கலிலும் அவனுடைய தாத்து கொண்டு தஜல்லியாகி இருக்கிருன். ஆனல் சகல கூட்டங்களும் அவனையே வணங்குகிருர்கள். **இன்சான் காமிலில்** வந்ததில் பத்திருப்பது வரி மட்டிலும் உள்ளதில் அனேகத்தை விட்டு மிகச் சுருக்கமாய் நான் தற்ஜுமாச்